


1·3·1987.
அமிர்த
கங்கை

# அபிராமி உங்களை அழைக்கிறாள் ...

## வீடு கட்டுவோருக்கும் ...

## கட்டிட - மின்சாரவேலை ஒப்பந்தக்காரருக்கும்...

உங்களுக்கு தேவையான
சகல விதமான
**S - Lon (எஸ்-லோன்) P. V. C** பைப் வகைகள்
பெயின்ற் வகைகள்
விவசாய மருந்து வகைகள்
விவசாய பயிர் விதைகள்
மின்சார உபகரணங்கள்

அனைத்தையும் ஒரே இடத்தில்
தரமானதாகவும்
நிதான விலையிலும்
பெற்றுக்கொள்ள ...

# அபிராமி - APIRAAMY

பலாலி வீதி,
திருநெல்வேலி

PALALY ROAD
THIRUNELVELY

நகையுலகில்

பொற்காலத்தை நம் கண்முன்னே

நிறுத்தியிருப்போர் ...



★ கலையம்சம் மிளிரும்
நகைகளின் கலைக்கூடம்

★ புன்னகையை வெல்லும்
பொன்னகைகளின் மாளிகை





★ காலத்தை வென்று நிற்கும்
கவினுறு நகைகளை
நீங்கள் விரும்பியபடி
உரிய காலத்தில்
செய்து தருபவர்கள்

# நியூ லலிதா ஜுவல்லர்ஸ்

74/1, கஸ்தூரியார் வீதி :: யாழ்ப்பாணம்

தொலைபேசி; 2415, 2427

★ நீங்கள் விரும்பும் இன்னிசைக் கீதங்களை
பதிவு செய்துகொள்ள . . .

★ சகலவிதமான மின்சார உபகரணங்களையும்
திருத்தம் செய்ய . . . . .

★ ஆமெச்சர் - மோட்டர் ரீ-வைண்டிங் செய்ய . . .

★ கிறைண்டர்
கொட்பிளேட்
கீற்றர்
றில்லர்
ரான்ஸ்போமர்
மக்னெற்ரோ கொயில்
முதலியன சிறந்த முறையில்
ஒருவருட உத்தரவாதத்துடன்
செய்து பெற்றுக்கொள்ள . . .

யாழ்நகரில் முன்னணி ஸ்தாபனம்

# விக்டர் அன் சன்ஸ்

100, ஸ்ரான்லி வீதி :: யாழ்ப்பாணம்

தொலைபேசி: 23346

★ யாழ் நகரில்
நவீன அச்சுத்துறையில்
முன்னணியில் திகழ்பவர்கள்

● 'ஆப்செட்'
வண்ண அச்சுவேலைகளில்
தன்னிகரற்றவர்கள்

★ கலைத்துவமும்
தனித்துவமும்
மிளிரும்
அச்சுவேலைகளுக்கு

# விஜயா அழுத்தகம்

551, காங்கேசன்துறை வீதி

யாழ்ப்பாணம்

# மில்க்வைற் தயாரிப்புகளுக்கு
# நீங்கள் கொடுக்கும் ஆதரவு நாட்டின் நற்பணிகளுக்கே

★ உள்ளூர்
மூலப் பொருட்களை
உற்பத்திக்கு
எடுப்போம் ★




★ உள்ளூர்த்
தயாரிப்புகளுக்கு
ஆதரவு
கொடுப்போம் ★

"வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும். இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்
பயின்று பல கல்வி தந்து இந்தப் பாரை உயர்த்திடல் வேண்டும்"

— பாரதியார்

**உழுவோம், உழைப்போம், உயர்வோம்.**

அதிக உணவுப் பயிர்களை உண்டாக்க
"நாட்டிற்கு நயம் தருவன" என்ற விவசாயக் கைநூலை

100 மில்க்வைற் நீலசோப் அல்லது
10 பார்சோப் அல்லது
10 சுப்ப மில்க்வைற் சோப் மேலுறைகளை
அனுப்பிப் பரிசாகப் பெற்றுக்கொள்ளலாம்.

# மில்க்வைற் தொழிலகம்

தபால் பெட்டி எண். 77

யாழ்ப்பாணம்

B/1916

# இது மானுட தர்மம்

**செம்பியன் செல்வன்**

‘எது எங்கள் தர்மம் ?’ என்ற பெயரில் சு’ இராஜநாயகன் என்ற பழம் பெரும் எழுத்தாளர் கங்கையின் பதினோராவது இதழில் வெளிவந்த செம்பியன் செல்வனின் ஆசிரியர் தலையங்கம் குறித்து எழுதிய ‚இலக்கணப் பிழை பிடிக்கும்’ கட்டுரைக்கு பதிலாக ...... இல்லை’ விளக்கமாக இக்கட்டுரை வெளிவருகிறது.

தர்மம் எது என்று ஆராய தர்மாவேச (ஷ) த்துடன் எழுத புறப்பட்டு தர்மசங்கடமான சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டு நிற்கும் பழம் பெரும் எழுத்தாளருக்கு ஒன்று சொல்லுகிறோம்.

பாவம் ...முழிக்காதீர்கள் வெறும் அம்புதான் நீங்கள்.........

எய்தவன் எங்கோ ‘திரு திரு வென்று முழித்துக்கொண்டிருக்கிறான்.

ஆ—ர்

‘எது எங்கள் தர்மம்?’ — என்ற தலைப்பில் 1987. 02. 22 ஆம் திகதி வாரமுரசொலியில், செம்பியன் செல்வனுக்கு சு. இராஜநாயகன் என்பவர் எழுதியதாக வெளியிடப்பட்ட கட்டுரை இன்றைய தமிழ் எழுத்துலகினதும், பத்திரிகையுலகினதும் நோயுற்ற பககத்தையே காட்டி நிற்கின்றது.

கடந்த வருடம் தை - கார்த்திகை மாதம்வரை ஒழுங்காக, தவறாமல் வந்துகொண்டிருந்த மாத இதழ் அமிர்தகங்கை. அதனது தலையங்கத்திற்காகவே பலரால் வாங்கப்பட்ட பத்திரிகை. அது தலையங்கத்தில் ஈழத்து எழுத்து, அதன் போக்கு, வளர்ச்சி - பற்றியே அதிக விசாரம் கொண்டிருந்தது. இன்றைய காலகட்டத்திற்கேற்ற இலக்கிய நெறியினை முன்னெடுத்துச் செல்வதில் அதிக அக்கறை கொண்டிருந்தது. அதற்கேற்ப குறுநாவல்கள், சிறுகதைகள், கவிதைகள் வெளியாயின. புதிய புதிய எழுத்தாளர்கள் மக்கள்முன்வந்தனர். அவர்களை ‘தத்து எடுத்து’ தாம் பெற்ற பிள்ளைகள் எனச் சில பத்திரிகைகள் இன்று கூறினாலும் எமக்குச் சந்தோஷமே. ஏனெனில் எமது கண்டுபிடிப்புகள் போற்றப்படுவது எமக்குப் பெருமையே.

அமிர்தகங்கை வெளிவந்துகொண்டிருந்த காலங்களில் அதன் குறைநிறைகளை தட்டிக் கேட்கவோ, அன்றி தட்டிக் கொடுக்கவோ முன்வராத சூனா, ஈனா, கடந்த மூன்று மாத காலமாக வெளிவரக் காணாத துணிவுடனும், இனி வெளிவராது என்ற எதிர்பார்ப்புடனும் (பாவம்! அந்த எதிர்பார்ப்பும் பொய்யாகிவிட்டது.) இந்தக் கட்டுரையை எழுத முன்வந்த காரணமென்ன? இச்சிறு கட்டுரையை எழுத மூன்றுமாத கால அவகாசம் தேவைப்பட்ட தாற்பரியம் என்ன?

பதினோராவது இதழ் தலையங்கம் பற்றி விமர்சிக்க (வாலைவிட்டுத் தும்பைப் பிடிக்க) முன் வந்த கட்டுரையாளர், முதல் பத்துத் தலையங்கங்களையும் எழுத்து, சொல், பொருள் எல்லாவற்றிலும் பூரண அங்கீகாரம் கொள்கிறாரா? அதனாற்றான் அவற்றை விடுத்தாரா?

மொழியின தூய்மை காக்கப் புறப்பட்ட கட்டுரையாளர், இடையே இப்படி அவசரம் அவசரமாகப் பரபரக்கிறாரே...

‘இவற்றை நான் எழுதுவது ‘இது எங்கள் தர்மம்’ என்ற தலையங்கத்திற் குறிப்பிட்ட ஒரு பத்திரிகாலயத்திலிருந்து திருப்தியின்மை காரணமாக வெளியேறிய ஆசிரியர் மேலுள்ள பரிவினாலோ... அல்ல.’

இக்கூற்றிற்கு என்ன அவசரம்?

‘எங்கப்பன் குதிருக்குள் இல்லை’ என்கிறாரா? அப்படி இல்லையென்றால், அமிர்த கங்கை தலையங்கம் வெளியிட்ட காலத்திலேயே இக்கட்டுரை வெளிவந்திருக்குமானால், இவரின் நேர்மையை, துணிச்சலைச் சந்தேகிக்க நேர்ந்திருக்காது. இப்போது இப்படி ஒரு கட்டுரை ‘போலியாக தயாரிக்கப்பட்டு கட்டுரையாளர் எந்தப் பத்திரிகாசிரியன் மீது பரிவில்லை என்று ‘சத்தியக் கடுதாசி’ முடிக்கிறாரோ- அந்தப் பத்திரிகாசிரியன் பிரதம ஆசிரியராக இருக்கும் பத்திரிகையிலேயே வெளிவந்திருக்கிறது.

சு. இராஜநாயகனைக் கேடயமாகக் கொண்டதில் மேற்படி பத்திரிகையாசிரியனின் ‘அரசியல் தனம்’ வெளிச்சமாகிறது. அமிர்தகங்கைக்குப் பதில்சொல்ல முரசொலிக்குத்தான் தேவையும், வசதியும் இருந்திருக்கிறது. ஆள்விட்டடிக்க வேண்டியதில்லை.

இக்கட்டுரையைப் பிரசுரித்த பத்திரிகை வாசகர் எல்லாருக்கும் விளங்கவேண்டுமென்று கருதியிருந்தால் -பிரச்சனைக்குரிய அமிர்தகங்கைத் தலையங்கத்தை மறுபிரசுரம் செய்திருக்கவேண்டும் அல்லது ‘Block செய்தாவது காட்டியிருக்க வேண்டும். அதனைவிட்டு ‘நோயும் நானே, பரிகாரமும் நானே!’ -என்று கட்டுரை எழுதினால் அது எத்தனை பேருக்குப்புரியும்? அமிர்தகங்கைத் தலையங்கங்கள் அபாரம் என்று ஒவ்வொரு வாசகரும் மனப்பாடமாக்கி வைத்திருக்கிறார்கள் அல்லது அத்தனை ஆற்றல் கொண்டவை அவை என்ற அங்கீகரிப்பில் எழுதப்பட்டதாகத்தான் கொள்ள வேண்டும்.

நடந்த நிகழ்வு இதுதான்!

‘ஒரு பத்திரிகாலயத்திலிருந்து திருப்தியின்மை காரணமாக வெளியேறிய ஆசிரியர் மேலுள்ள பரிவினாலோ...’ என்று சூனா, ஈனா கூறுகிறாரே அந்த நிகழ்ச்சியின் தொடர்ச்சியை வாசகர்கள் கட்டாயம் தெரிந்துகொண்டால்தான் - இக்கட்டுரைகளின் முக்கியத்துவம் புலனாகும்.

அன்றுமாலை ஐந்துமணி. அந்த ஆசிரியர் தான் வேலையிலிருந்து நீங்குவதாக ஒருமாத முன்னறிவித்தலை வழங்குகிறார். உடனடியாக அது ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அவர் வழக்கம்போல் வீட்டிற்குச் செல்கிறார். அங்கிருந்து மூன்று நாள் விடுப்புக்கேட்டு, ‘கடுதாசி’ அனுப்புகிறார். அவரின் நோக்கம் நாளை அவர் பணிபுரியும் பத்திரிகை வெளிவரக்கூடாது என்பதே. ஆனால் - நிர்வாகம் இவற்றை எல்லாம் எதிர்பார்த்து முன்னேற்பாட்டுடன் இருந்தது. பாவம் இந்த ஆசிரியருக்குத் தெரியாது அம்முயற்சியில் தோல்வி கண்ட அவர் பொய்யான வாக்குறுதிகள் மூலம் அடுத்தநாளிலிருந்து அச்சக ஊழியர்களை விலைக்கு வாங்க முயன்று பெருமளவு வெற்றியும் பெற்றார். இந்தப் பொய்களைப் புரிந்து கொண்டவர்களும், மனச்சாட்சிக்கு அஞ்சியவர்களுமாக பல ஊழியர்கள் ...ஞ்சியிருந்தனர்

அவர்கள் துணையுடன் பத்திரிகை தொடர்ந்து வெளி வந்தது. அந்த ஊழியர்கள் இந்தத் தாபனத்துக்கு ஏதாவது நடந்து மூடப்பட்டு விட்டால் தங்கள் குடும்பங்கள் நிலைபற்றி வாய்விட்டே கவலைப்பட்டனர். அதே வேளையில் வெளியேறியவர்களில் சிலர் இந்தத் தாபனம் மூடப்பட்டால், புதிய தாபனம் சொன்ன படி ஊதியத்தை வழங்குமா என்றச்சப்பட்டனர். எனவே, இத்தாபன ஒழிப்பு என்பது பல ஊழியர்களின்... குடும்பங்களின் வயிற்றிலடிப்பு.

எனவே புதிய தாபனமும் வளர வேண்டும்; பழைய தாபனமும் இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பே எல்லோர் மனதிலும் எழுந்த ஆவலாகும். ஆனல், தமிழோடும். மொழியோடும் தொடர்பு கொண்ட தாபனங்களோ, தனிப்பட்ட பெரியோர்களோ இதனைப்பற்றிக் கொஞ்சமும் அக்கறை கொள்ளவில்லை. இந்தச் சத்தியாவேசத்தில் பிறந்தது தான் அமிர்தகங்கையின் 'இது எங்கள் தர்மம்' தலையங்கம்

சு. இராஜநாயகன் தனது கட்டுரையில், எழுத்துப்பிழை சொற்பிழைகளை சுட்டிக்காட்டியிருந்தார். அவருக்குக் கட்டுரையின் 'பொருள்' பற்றி அக்கறையில்ல. மொழியின் இலக்கணத் தூய்மையினைப் போற்றிப் புகழ்பாடுவதே போதுமானது

எழுத்துப்பிழைகளை கவனிப்போம்.

பலகலைக்கழகம் வரை உள்ளவர்களை என்பது உள்ளவர்கள் என்றும்,

தனியுடமை என்பது தனியுடைமைஎன்றும்எழுதப் பட்டுள்ளமை தமிழிற்குச் செய்த மகாதுரோகமாகும். இந்த எழுத்துப்பிழைகள் 'அச்சுப் படி பார்த்தவரின் கவலையீனமாக ஏற்பட்டவை (இதுவும் அவர் தவறல்ல. கார்த்திகை மாதத்தில் அச்சுப்படி திருத்துபவர் நால்வரில் இருவர் விலை பேசப்பட்டுப் போய்விட்டகாலம். இது செம்பியன்செல்வனின் தவறல்ல என்பது கட்டுரையாளாருக்கே ஏற்கனவே புரியும்.

விளங்குகிறர்கள் என்பது காணப்படுகிறர்கள் என்றும், கலாசாரம் என்பது கலாச்சாரம் என்றும், தேநீர் என்பது தேனீர் என்றும் சொற்குற்றங்கள் சூட்டப்பட்டுள்ளன. இத்தகைய குற்றங்களைச் சுட்டிக்காட்ட முனைபவர் முதலில் என்ன செய்ய வேண்டும்? இத்தகைய பிழைகளை இவர் தனது எழுத்துக்கள்... எல்லா விடயங்களிலும் விடுகிறரா என ஆராயவேண்டும்...

விளங்குகிறர்கள்... காணப்படுகிறர்கள்... இரண்டிற்குமிடையே உள்ள வேறுபாட்டினை சூனு ஈனு சரியாக விளங்கவில்லை... காலசாரம்... கலாச்சாரம் என்பதில் கலாசாரமே கட்டுரையாளரால் கைக்கொள்ளப்படுவதை அமிர்தகங்கை- வைகாசி இதழ் தலையங்கத்தை படித்தால் தெரிந்து கொள்ளலாம்.

முக்கியமான பிரச்சனை தேனீரா... தேநீரா? சரி என்பது. அக்கட்டுரை எழுதும் பொழுது ஒரு நையாண்டித் தொனியில் தனிக் குறியீட்டிற்குள் 'தேனீர்' என எழுதிய சொல், தனிக்குறியீடு இடம் பெறுததால் ''வம்பில்'' போய் முடிந்துள்ளது கல்வி - கல்வியாவதும், கமம் காமம் ஆவதும் செர்க்கன் செக்கன் ஆவதும் எழுத்தாளரின் தமிழறிவுக் குறைபாடல்ல. அத்துடன் குறியீடுகளும் சொற்களுக்கும், வாக்கியங்களுக்கும் புதிய புதிய அர்த்தத்தைத் தருவது படைப்பாளிகளுக்குப் புரியாததல்ல. கருத்து ஒன்றுகவும் தொனிப்பொருள் வேறுகவும் விளங்க இக்குறியீடு உதவுவதைக் கட்டுரையளார் நன்கறிந்திருப்பார். என நம்புகிறேன். சொற்களின் உச்சரிப்புத் தொனி (Modulation) சொல்லின் அர்த்தத்தையே மாற்றுவது போல் குறியீடுகளும் எழுத்துக்களின் தொனிப்பொருளை வேறக்கி விடுகின்றன. (இவ்வளவும் எனது தலையங்கத்தின் மூலப் பிரதி கிடைக்காததால் ஏற்பட சிக்கல். அது கிடைத்திருந்தால் அதனை அப்படியே 'புளொக்' செய்துவிட்டு விலகியிருப்பேன் )ஆனலும் 'தேனீரை' அடியொட்டிக் கொஞ்சம் இலக்கியமாகச் சிந்திப்போமா?

பிரபல கம்யூனிஸ்ட்டும் எழுத்தாளருமான டி. செல்வராஜ் எழுதிய மிகப்பெரிய நாவலின் பெயர்- தேனீர், இதுபின்னர் கே. பாக்கியராஜ் நடிக்க ஊமைஜனங்கள் என்ற பெயரில் திரைப்படமாக வெளிவந்தது.

சொற்கள் முன்பு இலக்கணத்தை மட்டும் கொண்டிருந்தன. இன்றே மக்களின் பார்வையில் ஒரு வடிவத்தையும் பெற்று விடுகின்றன. மக்களுக்கு தேநீர் என்பதனைவிட தேனீர் என்பதே புரிகிறது (தேனீர்ச் சாலையா - தேநீர்ச்சாலையா கடைப்பலகையில் அதிகம் இடம்பெறுவது') ஜெயகாந்தன் ஒருமுறைவ 'திட்டார், 'ஒருவன் ஆண்பால் என்றல் பெண்பால் ஒருவள்தான்; ஒருத்தியல்ல என்று பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ஒரு ஊரில் என்று எழுத, அதனைப் பயபக்தியுடன் ஒருவர் சுட்டிக்காட்ட, 'அதனை அப்படியேவிடு அந்த ஓசைதான் எனக்குப் பிடிக்கிறது' என்றர். இலக்கணப் புலமை பெற்ற கலாநிதி ஒருவருடன் இதுபற்றிக் கதைத்தபோது, 'அப்படி இலக்கண விதி எதிலுமில்லை. மரபுதான் அப்படி ஒரூர் என்று எழுதவைத்தது' என்றர்.

மௌனியை அறியாதார் எவருமில்லை. அவர் தனது கதை ஒன்றில் ''எவற்றின் நடமாடும் நிழல்கள் நாம்?'' என்று எழுத, அங்கும் ஒரு சூனு ஈனு 'எவற்றின்' என்று இருக்கக்கூடாது எவைகளின் என்பதே சரி என்று சுட்ட, அந்தச் சொல்லின் சப்தமே அந்த வரிக்குத் தேவை எனக் கூறினர்.

எனவே, மொழியின் தூய்மையை இலக்கணம் காக்கின்றதாயினும், இலக்கணத்தை உருவாக்குதே இலக்கியங்களும் இலக்கியவாதிகளுமே என்பதனைப் புரிந்து கொண்டால் பல தவறுன கருத்துக்கள் நீங்கி விடும்.


ஒரு தாபனம் பலரின் வாழ்க்கைப் பிரச்சனையாக முடியுமா? என்று ஒரு தொழிற்சங்கவாதியான சு.இராஜநாயகம் கேட்ட கேள்விக்கு ஏற்கனவே பதில் சொல்லப்பட்டுள்ளது அதேபோலவே அச்சகத் தொழிலாளர்கள் தமிழ் வளர்ச்சியின் கொழுகொம்புகள்; என்று வர்ணித்ததை ஒரு தொழிற்சங்கவாதி ஏற்கமனமில்லாமல் ஏன் கிண்டல் செய்கிறர் என்று புரியவில்லை. எனக்கு மூக்கறு பட்டாலும் எதிரிக்குச் சகுனம் பிழைத்தால் போதும் என்ற பத்தாம் பசலித்தனமான, யதேச்சாதிகாரம்கொண்ட பூர்ஜுவாமனப் பான்மை இவருக்கு எப்படி ஏற்பட்டது? ஏன் ஏற்பட்டது என்றே யுரியவில்லை. மிகமிகப் பயமாக உள்ளது. ஏற்கனவே - பள்ளிக்கூடம் முதல் பல்கலைக்கழகம் வரை, பத்திரிகையாளர் எழுத்தாளர் என்று கட்டுரையாளரால் பிழை கண்டு பிடிக்கப்பட்ட வாக்கியத்தின் விரிவாக 1-xvi வரிசையில் தமிழ்ப்பணிபுரிவோர் பட்டியலைக் கூறி, அவர்களை ஏன் சொல்லவில்லை என்று குற்றம் காண்கிறர். தலையங்கம் என்பது இரத்தினச் சுருக்கமாக -சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் பகுதி. நலமடித்த மாட்டிற்கு கழனி காட்டும் முயற்சியல்ல.

சரி. சு. இராஜநாயகனுக்கு என்னதான் நிகழ்ந்து விட்டது?

அரச உயர்மட்டஅதிகாரிகளும், மகோமகோபாத்தியாயர்களும், ஏழை எழுத்தாளர்களும் ஒரு பத்திரிகா பலிபீடத்திற்குப் பலியாகிக கொண்டிருக்கும் போது, ஓய்வு பெற்ற ஆசிரியர் ஒருவர் பலியாடாகி விட்டதில் வியப்பில்லை. ●

அட்டைப் படத்திற்கு ஓர் கவிதை

## சங்கல்பப் பொழுது



காத்திருப்போ...?
நீர்ப்பரப்பில்
காற்றின் துகில் புரண்டு
குளிர் தழுவும் சுவாசத்தில்
போர்த்திருக்கும்
முகில் திரண்டு
மலை தழுவப் போயுள்ள
நேரத்தில்
வெறுவானில்
சூரியனும் கடல் சென்று
விழுந்து விடும்
கணப் பொழுதில்
காத்திருப்போ...?
மாலை வெயில்
சாய்கையிலே
ஓய்வெடுத்து
மகிழ்ந்திருக்கும் வேளையிதோ?
போர்முழக்கம் கேட்கலையோ?

"அபிதா"

அமிர்த கங்கை

கங்கை 2
அலை 1

- தனிப்பிரதி — 5/- ரூபா
- ஆண்டுச் சந்தா — 60/- ரூபா
- படைப்புகள் யாவும் படைத்தவர் பொறுப்பே
- தொடர்புகள் யாவும் ......

அமிர்த கங்கை
140, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

**அன்பான வாசக நேயர்களே!**

நீண்ட நாட்களுக்குப்பின்னர் கங்கை உங்கள் கரங்களில் தவழ்கிறது.

பிரச்சனைகளை எதிர்நோக்கி, துயரங்களை அரவணைத்து, போராட்டமே வாழ்வாகிவிட்ட இந்தச் சூழ்நிலையில் இன்றைய காலக்கட்டத்தில் தனது பங்களிப்பின் தேவையை மனதில் கொண்டு, கடந்த சில மாதங்களில் தான் எதிர் கொண்ட நாசகாரச் சக்திகளிடமிருந்து மீண்டு புதிய வீறுடன், புதிய தோற்றத்துடன் 'கங்கை' உங்கள் கரங்களில் பிரவகிக்க ஆரம்பித்துள்ள இவ்வேளையில் உங்களோடு மனம் விட்டுச் சிலவார்த்தைகள் பேசுவதற்கு விருமபுகிறது,

நெருக்கடிகள் மிக்க இன்றைய காலகட்டம் விபரித்துக் கூறவேண்டிய தொன்றல்ல

நமது வரலாறு குருதியாலும் தியாகத்தாலும் எழுதப்பட்டு வரும்வேளை இது.

முரண்பாடுகளுக்குள் முட்டிமோதி மக்களைக் குழப்பாது தாமே சரிவரப் புரிந்து கொள்ளாத 'சித்தாநத' சொற்சிலம்பங்களின் மூலம் நம்மக்களை பதற்றத்தில் ஆழ்த்தாது, வரட்டுத்தனமான தனிமனித பலவீன, உணர்ச்சிகளின் வெளிப்பாடுகளையும், புத்திஜீவித்தனமான பிதற்றல்களையும் மக்கள் மேல் திணிக்காது, இழப்புகளை ஜீரணித்து மீட்புக்கான பாதையில் வழி நடத்துவதற்காக எழுதுகோல் செயற்படவேண்டிய காலமிது.
கைவசமுள்ள உங்களின் - கடந்தகால நமது 'ஆக்க இலக்கிய முயற்சிகளை நிராகரித்த அல்லது அழித்த, விமர்சன அளவு கோல்களை வீசியெறியுங்கள்.

இல்லையேல் வரலாறு உங்களை மனநோயாளார்களாகவே இனங்காட்டும்.

மண்ணில் கால் புதைத்து மண்ணுக்காய் வாழ்கின்ற இந்த மண்ணின் மக்களுக்கு புரியாத கலையும், இலக்கியமும், அவர்களை முன்னெடுத்துச் செல்லாத, எழுத்தும், பேச்சும், சிலர் தத்தமக்குள்ளேயே சுகங் காணுவதற்கும் உதவலாம் ஆனல் சமுதாயத்திற்கு உதவாது.

மண் நேசிப்பும், மனித நேசிப்பும்தான் கலை, இலக்கிய பணி செய்வோரின் அடிநாத உணர்வாக இருக்க வேண்டும்.

இதனுல்தான் பாரதி 'நமக்குத் தொழில் கவிதை நாட்டிற்குழைத்தல்' என்று உரக்கவே கூறினுன்

நம்மை நாமே நெறிப்படுத்தவும், அளவிடவும் நமது மனச்சாட்சியே சிறந்த அளவுகோல். அதுவே சிறந்த விமர்சகனும்......

மனச்சாட்சிக்கு மதிப்புக் கொடுக்காத எந்தக் கலைஞனும், எழுத்தாளனும் முழு மனித குலத்துக்குமே விரோதிதான்.

நமக்கு இப்போது தேவை மௌனியும் லா. சா. ராவும் போன்றவர்களல்ல...'
'கார்க்கியும், ஷோலகோவும் போன்றவர்கள் தான்,

நம்மிடம் இருப்பது வெறும் எழுதுகோலாக இருப்பதில் எதுவித அர்த்தமுமில்லை, அது நெம்புகோலாகவும் இருக்கவேண்டும்.

வரலாற்றை முன்னெடுக்கவும், வென்றெடுக்கவும் வேண்டிய பணியில் ஒன்றிணைய வேண்டிய காலகட்டமிது...

'மேத்தா'வின் கவிதையொன்று ஞாபகத்திற்கு வருகிறது. உங்களுக்காக இதோ அக்கவிதை!

பூமியை புரட்டிடும்
புழுதியின் கீதங்கள்
புறப்பட்டு வருகின்றபோது
புல்லின் நுனியிலும்
புதுமை சிலிர்க்கும்
புல்லாங்குழலிலும்
புரட்சி வெடிக்கும்

— ஆசிரியர்



# என் கவிதை

★—நிக்கி கியோவானி—★

(1943— )

(பெண் கவிஞர்)

இருபத்தைந்து வயதுடைய
நான் பெண்- கறுப்புக் கவிஞர்
''நீக்ரோ உன்னால் கொலை செய்ய முடியுமா?
என்று கேட்டுக்
கவிதை எழுதினேன்— அதற்காக
ஒருவேளை அவர்கள் என்னைக் கொன்றாலும்

அது புரட்சியைத் தடுக்காது......
நான் கொள்ளையடிக்கப்பட்டேன்
நான் தான் அடிக்கப்பட வேண்டியவள் என்பது
அவர்களுக்குத் தெரியும்;
அவர்கள் என் டி. வி. யை எடுத்துக் கொண்டார்கள்
என்
இரண்டு மோதிரங்களையும் என்னிடமிருந்த
இரண்டு ஆபிரிக்கக் கவிதை பிரதிகளையும்
இரண்டு துப்பாக்கிகளையும்
இன்னும் என் உயிரை எடுப்பதாயிருந்தாலும்

அது புரட்சியைத் தடுக்காது

எனது தொலைபேசி ஒட்டுக் கேட்கப்பட்டது.
எனது கடிதங்கள் பிரிக்கப்பட்டன
என்

பழைய நண்பர்கள்
புதிய காதலன்
ஆகிய அனைவரிடமிருந்தும் பிரிந்து போகுமாறு
செய்தார்கள்
ஒருவேளை
நான் எல்லாக் கருப்பு மக்களையும்
நீக்ரோக்களையும் வெறுக்க நேரிட்டாலும்

அது புரட்சியைத் தடுக்காது

அறை நண்பனிடமும்
நான் எங்கு போகிறேன்
என்பதைச் சொல்ல அஞ்சுகிறேன்
மக்களிடம் நான் வருகிறேன்
என்பதைச் சொல்லவும் அஞ்சுகிறேன்
எஞ்சிய வாழ்நாளை
இங்கிருந்தே கழிக்க நேரிட்டாலும்

அது புரட்சியைத் தடுக்காது.

நான் இன்னொரு கவிதையோ சிறுகதையோ
எழுதவில்லையானாலும்
பள்ளியை விட்டு வெளியேறினாலும்
எனது காரை என்னிடமிருந்து பிடுங்கிக்
கொண்டாலும்
எனது இசைத்தட்டு ஓடாது நின்றாலும்
ஒரு அமைதியான நாளைப்
பார்க்காமல் இருந்தாலும்
நீக்ரோவின் விடுதலைக்காக— ஒரு அர்த்தமுள்ள
நடவடிக்கையை மேற்கொள்ளாவிடினும்

அது புரட்சியைத் தடுக்காது.

புரட்சி
தெருக்களில் இருக்கிறது
நான் ஐந்தாவது மாடியில்
தங்கினாலும்
அது நடந்து கொண்டே இருக்கும்
நான் எதுவும் செய்யவில்லையென்றாலும்கூட
அது நடந்து கொண்டே யிருக்கும்.

—மொழிபெயர்ப்பு எஸ். சண்முகம்—

நன்றி: புதிய மனிதன்

★ விலங்கியல்

# பாரம்பரியமும் பிறப்புரிமையியலும்

கே. எஸ். குகதாசன்

எடுப்பு :-

அங்கிகளில் சந்ததி சந்ததியாக இயல்புகள் கடத்தப்படுவது பாரம்பரியம் எனவும், இது சம்பந்தமான விபரமான படிப்பு பிறப்புரிமையியல் எனவும் அழைக்கப்படும். பிறப்புரிமையியலை உயிரியலின் மையமெனக் கொள்ளலாம். அதனால் இது சம்பந்தமான அறிவு உயிரியலின் மருத்துவம், விவசாயம், வனவியல், கூர்ப்பு, சூழலியல், மனிதவியல், நோயியல், பீடைக் கட்டுப்பாடு, சூழல் மாசடைதல், மீன்வளம் போன்ற பலதரப்பட்ட துறைகளிலும் அறிவைப் பெறுவதற்கு உதவியாக அமையும். அதனால் க.பொ. த. வகுப்பு மாணவர்களுக்கு பிறப்புரிமையியல் சம்பந்தமான அறிவு மிக முக்கியமானது எனக் கொள்ளலாம்.

கிரகர் மெண்டல் (Gregor Mendel) என்பவரே பிறப்புரிமையியலின் தந்தை எனக் கருதப்படுகின்றார். அவருக்கு முன்பாகவே இது சம்பந்தமான அறிவு மனிதனுக்கு இருந்துள்ளது; ஏன் ஆதிமனிதனுக்கே இருந்திருக்க வேண்டும். அல்லது அவனால் வளர்ப்புத் தாவர விலங்கினங்களைப் பெற்றிருக்க முடியுமா? இவற்றிற்கிடையே இனக்கலப்புக்களை நிகழ்த்தி, தேர்வு விருத்தி மூலம், சிறந்த தாவர, விலங்கினங்களைப் பெற்றுக் கொண்டிருக்க முடியுமா? ஆயினும், மெண்டல் பாதிரியார் அவர்களே முதன் முதலாக பிறப்புரிமையியலுக்கு விஞ்ஞான முறையில் விளக்கம் தந்தவராவார்.

மெண்டலின் காலத்திலேயே அங்கிக் கூர்ப்பிற்கு இயற்கைத் தேர்வு முறை விளக்கம் தந்த சார்ள்ஸ் டார்வினும் (Charles Darwin) வாழ்ந்தார். ஆயினும் இருவருக்கும் ஒருவரை ஒருவர் சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. மெண்டல் செய்த அதே ஆய்வுகளை டார்வினும் செய்திருந்தார். மெண்டல் பெற்ற அதே பெறுபேறுகளை டார்வினும் பெற்றிருந்தார். ஆயினும் டார்வினுக்குக் கணிதஅறிவு போதாமலிருந்தமையால் பெறுபேறுகளுக்கு அவரால் விளக்கம் கொடுக்க முடியவில்லை.

பிறப்புரிமையியல் விளக்கத்துக்கு முன்னோடியாக கணிதத்தில் நிகழ்தகவிற்கு ஆதாரமாக சில உதாரணங்களை எடுப்போம். இதே அடிப்படையிற்றான் பிறப்புரிமையியலிலும் சேர்க்கைகளுக்குரிய நிகழ்தகவுகள் அமையும்.

ஒரு காசை எடுத்து பல தடவைகள் சுண்டினால் தலை வருவதற்கும் பூ வருவதற்குமுரிய நிகழ்தகவு ஐம்பதுக்கைம்பதாக (50: 50) அமையும். இரண்டு காசுகளை எடுத்துச் சுண்டினால் தலையும் தலையும், தலையும் பூவும், பூவும் பூவும், வருவதற்குரிய நிகழ்தகவு 1: 2: 1 ஆக அமையும். இதே நீதியிற்றான் பிறப்புரிமையியலும் நிகழ்தகவுகள் அமையும்.

தொடுப்பு:-

பிறப்புரிமையியலின் தந்தை மெண்டல் பாதிரியார் ஆவார். அதனால் அவர் தந்த விளக்கங்களையே பிறப்புரிமையியலுக்கு முன்னோடி விளக்கங்களாகக் கொள்வோம்.

மெண்டலின் காலத்திலும் அதற்கு முன்பாகவும், வேறு பலரும் பிறப்புரிமை சம்பந்தமான ஆய்வுகளில் ஈடுபட்டிருந்தார்கள். ஆயினும் முயற்சியில் மெண்டல் வெற்றிகண்டமைக்குப் பல காரணங்கள் உண்டு.

அவையாவன :-

(1) அவர் தேர்ந்தெடுத்த தாவரம்:- பட்டாணிக் கடலை. இது வாய்ப்பாகப் போய்விட்டது. காரணம், இதில் தன்மகரந்தச் சேர்க்கையையும் ஏற்படுத்த முடியும், அயன் மகரந்தச் சேர்க்கையையும் ஏற்படுத்த முடியும்; குறுகியகால வாழ்க்கையையுடையது. அதனால் ஒரு ஆண்டிலேயே இரண்டு மூன்று சந்ததிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்; ஒரே தாவரம் அதிக எண்ணிக்கையில் தனிகளையும் விதைகளையும் தரும். அதாவது அநேக சந்ததிகளைத்தரும்; உயரம் குறைவானது, அதனால் மகரந்தச் சேர்க்கை, மகரந்தச் சேர்க்கைத் தடை போன்ற நிகழ்ச்சிகளைச் சுலபமாக நிகழ்த்த முடியும்; இதில் மெண்டல் தேர்ந்தெடுத்த இயல்புகளனைத்தும் தனிக்காரணிகளாலேயே கட்டுப்படுத்தப்படும்.

(2) சுலபமாக இனங்காணக் கூடிய -ஒன்றுக்கொன்று எதிரான இயல்புகளைத் தேர்ந்தெடுத்தமை உ+ம்; நெட்டை- குட்டை; மயிருள்ளது- அழுத்தமானது.

(3) ஒவ்வொரு இயல்பிற்குமுரிய காரணிகள் கடத்தப் படுவதைத் தனித்தனியாக ஆராய்ந்தமை.

(4) அதிக எண்ணிக்கையில் பெறுபேறுகளைப்பெற்று ஆய்மைக்கு உட்படுத்தியமை.

(5) பரிசோதனைகளை மீண்டும் மீண்டும் நிகழ்த்தியமை.

(6) தகவல்களை யெல்லாம் ஒழுங்காகப் பதிந்து வைத்தமை.

(7) ஆய்வுகளுக்கு தூயவழிகளை (ஆய்வுக்குரிய இயல்புகளுக்குத் தூயவை)ப் பயன்படுத்தியமை.

**மெண்டலின் பாரம்பரியத்துக்கு விலக்கானவை:**

**நிறைவில் ஆட்சியுடைமை:**

இங்கு $F_1$ பல்லின நுகமுள்ள தோற்றவமைப்புக்கள் இரு பெற்றோர்களினதும் தோற்றவமைக்களிலிருந்து வேறுபட்டவையாகும்; மேலும் தோற்றவமைப்பு புறப்புரிமையமைப்பை வெளிக்காட்டுவதாக அமையும்.

உதாரணமாக பட்டாணிக் கடலையிலும், நாலு மணிச் செடியிலும் பூ நிறம்.

தோற்றவமைப்பு பெறுபேறுகள்:

அண்டலூசியன் கோழிகளில், கறுப்புக் கோழிகள் வெள்ளைக் கோழிகளுடன் இனங்கலக்கும் போது $F_1$ முழுவதும் சாம்பல் அல்லது புள்ளிக்கோழிகளாயிருக்கும். $F_1$ இனக் கலப்புக்களின் எச்சங்கள் 1 சாம்பல் புள்ளி: வெள்ளை — 1: 2: 1 விகிதாசாரத்தில் கிடைக்கும்.

பிறப்புரிமையியலுக்குரிய இடைத்தாக்கம்:

சில சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட காரணிகளுக்கிடையே இடைத்தாக்கங்கள் ஏற்படுவதனால் வேறுபட்ட இயல்புகள் வெளிக்காட்டப்படுவதுண்டு. உ+ம்மாக, வீட்டுக் கோழிகளில் நாலுவகையான கொண்டைகளுண்டு அவையாவன: பட்டாணி வடிவமான கொண்டை, ரோசான் போன்ற கொண்டை, வாதுமை போன்ற கொண்டை, லெக்ஹோர்னில் உள்ளது போன்ற தனிக்கொண்டை, இவை மெண்டலின் பரம்பரைக்குரியவை. ரோஸ் கொண்டைக் கோழிகளுக்கிடையே இனக்கலப்புக்கள் ஏற்படுத்தும் போது ரோஸ் கொண்டை எச்சங்கள் மாத்திரமே கிடைக்கும். இதே போன்றுதான் பட்டாணிக் கொண்டையும். ஆயினும், ரோஸ் பட்டாணிக்கிடையே இனக்கலப்பு நிகழ்த்தும்போது எச்சங்கள் யாவும் வாதுமைக் கொண்டையை உடையவையாக அமையும். இவற்றுக்கிடையே இனக்கலப்புக்கள் நிகழ்த்தும் போது வாதுமை: ரோஸ்: பட்டாணி: தனி— 9; 3; 3; 1 விகிதாசாரத்தில் கிடைக்கும். இதிலிருந்து ரோஸ், பட்டாணி இயல்புகளுக்குரிய காரணிகள் ஆட்சியுடையவை, தனித்தனியே இருக்கும் போது ரோஸ் அல்லது பட்டாணியும் சேர்ந்து வரும்போது, இடைத்தாக்கம் காரணமாக வாதுமைக் கொண்டையும் கிடைக்கும் என்பது புலப்படுகிறது. தனிக்கொண்டை தூய பின்னிடைவுக்குரியது.

**மெண்டலின் முடிபுகள் சம்பந்தமான தற்கால மதிப்பீடுகள்–**

(8) இருதிசைகளிலும் இனக் கலப்புக்களை நிகழ்த்தியமை (Reciprocal Crosses) மெண்டல் செய்த ஆய்வுகளுக்கு உதாரணமாகச் சிலவற்றை எடுப்போம்: ஒரு கலப்புப் பிறப்பு இனக்கலப்பு ஒரு சோடி காரணிகள் கடத்தப்படுவதை அறிவதற்கு நிகழ்த்தும் இனக் கலப்புக்கள், தாவரம்- பட்டாணிக் கடலை, இயல்புகள்- நெட்டை; குட்டை. தூய நெட்டைத்தாவரத்தை குட்டைத் தாவரத்துடன் இனங்கலந்தபோது முதலாம் மக்கட் சந்ததியில் முழுவதும் நெட்டைத் தாவரங்களே கிடைத்தன. இவற்றிற்கிடையே இனக்கலப்புக்களை ஏற்படுத்திய பொழுது இரண்டாம் மக்கட் சந்ததியில் நெட்டைத் தாவரங்களும், குட்டைத் தாவரங்களும், 3: 1 விகிதாசாரத்தில் தோன்றின.

மேற்படி தரவுகளிலிருந்து மெண்டல் பிறப்புரிமையியல் சம்பந்தமாக பின்வரும் விளக்கங்களைக் கொடுத்தார். மேற்படி விகிதா சாரத்திலிருந்து இயல்புகள் ஒரு சோடி காரணிகளினால் கட்டுப்படுத்தப்படும் என்ற முடிவுக்கு வந்து காரணிகளுக்குக் குறியீடுகளைப் பாவித்துக் கணித முறையில் விளக்கம் கொடுத்தார்.

தூய நெட்டை — குறியீடு A A

குட்டை — குறியீடு a a

இரு இயல்புகளுக்குரிய காரணிகள் ஒன்றாக வரும்போது ஒரு இயல்பு மறைக்கப்படும். வெளிக்காட்டப்படுவது ஆட்சியுள்ள இயல்பு எனவும் மறைக்கப்படுவது பின்னிடைவான இயல்பு எனவும் கொண்டார். இதுவே மெண்டலின் ஆட்சியுடைமைக் கொள்கை எனப்படும். இனக்கலப்பில் முதலாம் மக்கட் சந்ததிகள் யாவும் நெட்டையாக விருந்தமைக்குக் காரணம் கலப்புக்களாகவிருந்தமை.

புணரிகள் தோன்றும்போது குறிப்பிட்ட இயல்புக்குரிய ஒரு சோடி எதிருருக்கள் தனிப்படுத்தப்படும். அதனால் புணரிகள் எப்போதும் அவ்வியல்பிற்குத் தூயவையாக விருக்கும் என்ற முடிவுக்கு வந்தார். இதுவே மெண்டலின் முதலாவது சட்டம் அல்லது காரணிகள் தனிப்படுத்துகை சட்டம் அல்லது புணரிகளின் தூய்மைச் சட்டம் எனவழைக்கப்படும்.

புணரிகள் சேரும் போது, அதாவது கருக்கட்டலின் போது, ஒரு சோடி எதிருருக்களில் ஒவ்வொன்றும் மறு சோடி எதிருருக்களில் எந்த வொன்றுடனும் சேரும் என்ற முடிவுக்கும் வந்தார். இதுவே மெண்டலின் இரண்டாவது சட்டம் அல்லது சார்பற்றவகை பிரித்தற்சட்டம் அல்லது மூலவுயிர் அலகுகளின் சுயாதீன தனிமைப் படுத்துகை சட்டம் எனவழைக்கப்படும்.

மேற்படி காரணங்களினலேயே பரிசோதனையில் பெறப்பட்ட தரவுகள் குறிப்பிட்ட முறையிற் கிடைத்தன.

குறியீட்டு விளக்கம்:

பெற்றோர்கள்- தூய நெட்டை

தூய குட்டை

குறியீடு- தூயநெட்டை- A A

குட்டை- a a

வெளிக்காட்டப்படும் இயல்புக்குரிய விளக்கம் தோற்றவமைப்பு எனவும் (உ+ம்: நெட்டை, குட்டைத்தாவரங்கள்) ; பரம்பரைக்குரிய இயல்புக்குரிய விளக்கம் பிறப்புரிமையமைப்பு எனவும் (உ+ம்: தூயநெட்டை; கலப்பு நெட்டை, குட்டை) அழைக்கப்படும்.

குறியீடுகள்-


பிறப்புரிமையியல் விளக்கங்களுக்கு குறியீடுகளைப் பயன்படுத்தி விளக்கம் தருவது சுலபமான ஒரு முறையாகும். மெண்டல் அரிவரியிலுள்ள சாதாரண எழுத்துக்களையே குறியீடுகளாகப் பயன்படுத்தினர். உ+ம்; நெட்டையியல்பைக் குறிப்பதற்கு 'A' குட்டையியல்பைக் குறிப்பதற்கு 'a'.

பிறிதொருமுறை, ஆட்சியுள்ள இயல்பைக்குறிக்கும் சொல்லின் முதல் எழுத்தை 'தப்பிற்றல்' எழுத்தில் ஆட்சியுள்ள இயல்பைக்குறிப்பதற்கும், 'சிம்பிள்' எழுத்தில் பின்னிடைவுள்ள இயல்பைக்குறிப்பதற்கும் பயன்படுத்துவது. உ+ம்: நெட்டை - Tall ஆட்சியுள்ள இயல்பைக் குறிப்பதற்கு (நெட்டையியல்பு) -T; பின்னிடைவுள்ள இயல்பைக்குறிப்பதற்கு (குட்டையியல்பு) -t.

மற்றுமொரு முறை, பின்னிடைவுள்ள இயல்பைக் குறிக்கும் பதத்தின் முதல் எழுத்தை 'கப்பிற்றல்' எழுத்தில் ஆட்சியுள்ள இயல்பைக் குறிப்பதற்கும், 'சிம்பிள்' எழுத்தில் பின்னிடைவுள்ள இயல்பைக் குறிப்பதற்கும் பயன்படுத்துதல் உ+ம்: குட்டை -Dwarf. ஆட்சியுள்ள (நெட்டை) இயல்பைக் குறிப்பதற்கு -D; பின்னிடைவுள்ள (குட்டை) இயல்பைக் குறிப்பதற்கு -d.

மேலுமொருமுறை, வான் வகையை (ஆட்சியுள்ளது)க் குறிப்பதற்கு '+'; விகாரகதை (பின்னிடைவானது)க் குறிப்பதற்கு அதற்குரிய சொல்லின் குறியீட்டு எழுத்துக்கள். ★

★ சிறுகதை --- கோப்பாய் சிவம்



# இழப்பின் பெருமைகள்

[1985ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் — அப்போதய சூழ்நிலையை மனத்தில்கொண்டு எழுதப்பட்ட இச்சிறுகதை இன்றைய நிலையில் பழைமையான விஷயமாகத் தென்படக்கூடும். ஆனால், இதுவரை பிரசுரமாகாதபடியால் இப்போது பிரசுரிக்கப்படுகிறது.]

'கந்தசாமியற்றை பொடியனைக் காணேல்லையாம்'' என்ற கவலை சேர்ந்த அங்கலாய்ப்பு சில முதியோர்களிடமும், ''என்ன மச்சான் கேள்விப்பட்டியே, உவன் கந்தசாமியின்ரை மோன் சிவகுமாரைக் காணேல்லையென்கினம் ... ஒருவேளை 'மற்ற'திலை சேர்ந்திருப்பானோ?'' என்ற பயத்துடன் கூடிய சந்தேகம் சில நடுத்தர வயதினவரிடையேயும் கிளம்பிக் கொண்டிருந்தபோது, 'டேய், உவன் சிவாவும் சேர்ந்திட்டானும் அவன் உதிலை சேருவன் எண்டு எனக்குத் தெரியும்' என்ற மகிழ்ச்சி கலந்த மறைமுகமான ஒரு பெருமிதம் சில இள வட்டங்களிடையேயும் பரவிக் கொண்டிருந்தது.

இந்த மூன்றுவது ரகத்தினரிடையே தாமும் அதில் சேர்ந்துகொள்ள முடியவில்லையே என்ற ஓர் ஆதங்கமும், தங்கள் துணிவின்மை பற்றிய ஒரு வெட்க உணர்வும் ஓரளவு இருக்கத்தான் செய்தன.

கிராமத்தில் இந்தக் கதை மெல்ல மெல்லப் பரவிப் புசைந்துகொண்டிருந்தபோது சிவகுமார் வீட்டில் பலத்த மௌனம் குடிகொண்டிருந்தது. கந்தசாமியர் அன்று காலை எழுந்த நேரம்முதல் 'ஈசிச்செயரில்' மௌனமாக இருக்கிறார். வழக்கம்போலவே உணர்ச்சிகளைக் காட்டாத அவரது முகம் நிர்ச்சலனமாக இருக்கிறது.

வேளாவேளைக்கு 'வானொலிச் செய்திகளில் ஒலிக்கும் 'லங்காபுவத்' வெடிகளைக் கடன்வழிக்குக் கேட்பதும், இந்திய வானொலியில் ஒலிக்கும் ''ஆழ்ந்த கவலை''களை அக்கறையோடு கேட்பதும் அன்றும் அவரது நித்தியகடமைகளாக நடந்தேறிவிட்டன. இப்போது மாலை நேரமாகிவிட்டதால் 'அந்த' ஒலிபரப்பைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

கனத்த மௌனத் திரையின் கிழிசல்களூடாக மெல்லிய சிறு விசும்பல்களும், கண்ணீர்த்துளிகளும் இடையிடையே சிவகுமாரின் தாயாரிடமிருந்து கசிந்துகொண்டிருந்தன இன்னும் நாலு வருடங்களின்பின் சிவகுமார் ஒரு பொறியியலாளராக வரப்போகின்ற அந்தக் காட்சி கரிபூசப்பட்டுச் சிதைவுற்றவண்ணம் அவளது மனக்கண்ணில் தெளிவற்றுத் தெரிகிறது.

பலூன் நிறைய உப்பியிருக்கின்ற காற்று சிறிய ஊசித் துவாரத்தினூடாக வெளியேறக் காத்திருப்பதுபோல, அவளுடைய துயரங்கள் அழுகை மூலமாக வெளிவருவதற்குத் தயாராக ஒருபுறத் தூண்டலை நாடிக் காத்திருக்கிறது.

மூத்தமகள் இருவித மனநிலையில் தவித்தவாறிருக்கிறாள். தன் குடும்பத்தைத் தலைநிமிரச் செய்யப் போகின்ற அவனை இழக்க நேரிட்டமை அவளுக்கு ஓரளவு வருத்தத்தை ஏற்படுத்தியிருந்தாலும்கூட நாட்டின் நிலைமைகளையும் தனது இனத்தின் சூழ்நிலையையும் அடிப்படையாகக் கொண்டு தனது தம்பி ஒரு நல்ல காரியத்தை மிகஅவசியமான ஒரு செயலைச் செய்திருப்பதாக ஒரு திருப்தியும் பெருமையும் அவளுக்கு இருக்கவே செய்தன. தாயின் கண்ணீர் அவளுக்கு ஓரளவு வெறுப்பையும் ஏற்படுத்தியது.

இளையமகள் தனது அண்ணன் எங்கோ போய்விட்டான் என்ற இழப்பின் வேதனையும்; அம்மாவின் விசும்பல் தரும் கவலையும் அப்பா, அக்கா இருவரின் புரியாத மௌனங்கள் ஏற்படுத்தும் பயமும் சேர்ந்து திகைப்புற்றிருந்தான்.

சிவகுமார் காணாமல்போன செய்தியைக் கேள்விபட்ட அனைவரிடையேயும் ஒரு சந்தேக நெருடல் முள்ளாக உறுத்தவே செய்தது. ''ஒருவேளை அந்த 'அறுவான்கள் அவனைப் பிடிச்சுக் கொண்டு போனாங்களோ?'' என்பதே அந்த நெருடல்.

ஆனால், கடந்த சில நாட்களாக 'அவங்கள்' இப்பகுதியில் நடமாடவில்லை என்பது நிச்சயமான செய்தியாக இருந்ததால் அவன் 'அதில்' தான் சேர்ந்திருப்பான் என்று ஊர்ஜிதமாகியது. கடந்த சில நாட்களாகவே அவன் பேசிய சில வார்த்தைகளின் உட்கருத்து அவன் குடும்பத்தினருக்கு அதை இப்போது தெளிவாக்கிக் கொண்டிருந்தது. அத்தோடு முதல்நாளிரவு அவன் தனது நண்பனைத்தேடிப் போகும்போது அக்காவிடம் இதுபற்றி ஒரு 'கோடிகாட்டி' யிருந்தான் எனபதை அவள் இப்போது மெல்ல வெளியிட்டிருக்கிறாள்.

படலை தடதடக்கிறது. அப்பாவின் முகத்தில் ஓர் இறுக்கம். அம்மாவின் விசும்பல், ஒரு சுருதியேற்றம். அக்கா உள்ளே திரும்புகிறாள்.

தங்கை தன் விழிகளைப் படலையில் மேயவிடுகிறாள்.

அயலவர்கள் சிலரின் தயக்கமான வருகை. அந்த முகங்களில் காணப்படும் அந்த சோகம்... அவர்களாக வருவித்துக் கொண்டதா?... இழவு வீட்டிற்கு வருவதுபோன்ற பாவனை. இப்படித் தாங்கள் வருவதை இவர்கள் விரும்புவார்களோ என்னவோ என்ற தயக்கம் ஓர் புறம், மேலதிக புதினங்களைத் திரட்டலாம் என்ற ஆவல் மறுபுறம்.

ஏதோ பொழுதுபோக ஊர்ப் புதினம் பேசலாம் என்ற வெறு வாய்மெல்லும் வாயாடிகள் சிலர். போகக்கூடிய சூழ்நிலை இல்லாவிட்டாலும் சம்பிரதாயத்திற்காக வந்தவர்கள் சிலர்.

நீத்தார்பெருமை பேசுவது போல சிவகுமாரின் பெருமைகளைப் பேசமுற்பட்ட சிலர் கந்தசாமியின் மௌனத் திரையின் அர்த்தம் புரியாமல் மௌனமானார்கள்.

இரவுப் பொழுது இருட்திரையைக் கசிந்த நேரத்தில் சிதைவுற்ற பாதைகளைச் சீர்திருத்தும் பணியில் ஓர் இளைஞர்குழு ஈடுபட்ட போது இந்த வீட்டின் நான்கு சோடி விழிகள் வேலிக்கு மேலால் அவர்களை நோட்டம் விட்டன. 'ஒருவேளை அவனும் இதில் நிற்பானோ?' என்ற ஏக்கமே இதற்குக் காரணம்.

ஒருவரைப் பார்த்து ஒருவர் வந்து துக்கம் விசாரித்துக்கொண்டு போக... இவர்களது சங்கடமான மனநிலை தவிக்க, கந்தசாமியின் மௌனம் இறுக்கிக்கிடந்தது. அவரோடு நெருங்கிப்பழகும் நண்பர் கனகரத்தினம் வந்து சேர்ந்தார். கந்தசாமியின் மௌனத்தை அவரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

''என்ன கந்தசாமி செய்யிறது'' எல்லோருக்கும் கவலைதான். நீ ஏன் மனத்துக்கை வைச்சுக் குமையிறாய்? வாய்விட்டுச் சொல்லி ஆத்த வேணும். உது உடம்புக்குக் கூடாது கண்டியோ?'' என்று உபதேசம் செய்யத்தொடங்கினார்.

விறுக்கென நிமிர்ந்த கந்தசாமியின் கண்கள் கக்கிய தீயில் அங்கு நின்ற யாவரும் கலங்கினர். மௌனம் தனக்குப் பின்னே ஒரு முற்றுப் புள்ளியை வைத்தது.

''என்னகாணும் விண்ணைக் கதை கதைக்கிறீர்? இப்பென்ன இஞ்சை இழவு நடந்துபோச்சுதே? நான் எதுக்காக வாய்விட்டுப் புலம்பவேணும்? எல்லாரும் இஞ்சை வெளிக்கிட்டு வந்திட்டினம், துக்கம் விசாரிக்க, அவன் என்ன செய்யக் கூடாத காவாலித்தனம் ஏதேன் செய்தவனே? வயசுகாலத்திலைஎனக்கொரு பெருமையைத் தேடித்தந்திட்டல்லோ போயிருக்கிறான்...

''ஆரேன் போராடிக் கொண்டு வந்து இந்தா அண்ணை சுதந்திரம் எண்டு தர அலுங்காமல் நலுங்காமல் அநுபவிக்கிறதுக்குக் காத்திருக்கிறம் நாங்கள். இது எவ்வளவு காலத்துக்கு? நான் ஒரு தியாகியை, ஒரு வீரமகனைப் பெத்தெடுத்தன் எண்டு பெருமைப்படுகிறது உங்களுக்குப் பிடிக்கேல்லையே? ஓடுங்கடா எல்லாரும்...''

சிம்மகர்ச்சனையைக் கேட்டுச் செவிகளை மடக்கியபடி முயல்கள் வெளியேறுகின்றன. தெருவில் வேலை செய்த இளம் சிங்கங்களில் சில சின்னபிரச்சனை என்று எட்டிப் பார்க்க- இரண்டொரு 'பொடியள்' விஷயம் தெரிந்து உள்ளே வந்து புன்னகை சிந்துகிறார்கள்.' அன்று முழுவதும் புகையாத அடுப்பு அந்தப் பொடியளுக்குத் தேனீர் தயாரிப்பதற்காகப் புகைகிறது.

★

# புதுப் பிரளயம்

'அவர்கள் மௌனமாக நடந்து கொண்டிருந்தார்கள். எங்கும் ஒரே மையிருட்டு. அவர்கள் நடந்து கொண்டிருக்கும் பாதை ஒரு ஒற்றையடிக் காட்டுப் பாதை, சிறிது விலகினால் தொட்டாச்சுருங்கியும் நெருஞ்சியும் காலைப் பதம் பார்த்துவிடும். பாதையின் இரு புறமும் முள்மரங்கள் பந்தலிட்டுக் கொண்டிருந்தன. அதற்கப்பால் பாரிய காட்டுமரங்கள். அவர்கள் ஒருவரோடு ஒருவர் எதுவும் பேசிக் கொள்ளவில்லை. வேக வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தனர். தூரத்தில் சிறு வெளிச்சம் தெரிந்தது. அவர்கள் சென்றடைய வேண்டிய இடம் நெருங்கி விட்டது.

'இளஞ்செல்விக்குக் கால்கள் ஊளையத் தொடங்கின. அம்மா... மனம் அடித்துக் கொண்டது. செல்விக்குப் பின்னால் யசோ வந்து கொண்டிருந்தாள். அவர்களோடு சேர்ந்து வந்த மங்கை அக்குழுவின் முன்னணியில் விரைந்து கொண்டிருந்தாள். வெளிச்சம் தெரிந்த திக்கை நோக்கிக் குழு முன்னேறியது. இறுதியில் அவர்கள் அந்த இடத்தை அடைந்து விட்டனர்'.

'யசோ... செல்வி மெதுவாக அழைத்தாள்

'என்ன செல்வி?'


'எங்களில் எல்லாமாக எத்தனை பேர்?'

'எங்களைப் போல புதியவர்கள் அறுபது பேர் அதைத்தவிர ஏற்கனவே இங்கு எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று தெரியாது.

'மேற்கொண்டு இளஞ் செல்வி எதையும் கேட்கவில்லை. யசோவும் பேசாமல் இருந்தாள். எல்லாவற்றிலும் சிறந்த மொழியாக மௌனத்தை அவர்கள் விரும்பினார்கள் அன்று முழுவதும் பல வாகனங்களில் பலமைல்களைக் கடந்து சில யார் தூரங்களை நடந்தும் வந்திருக்கிறார்கள் அதனால் அனைவருமே களைப்படைந்திருந்தனர். இரவு உணவை முடித்துக் கொண்டு போடப்பட்டிருந்த பெரிய கொட்டில் ஒன்றில் படுத்து விட்டனர். செல்விக்குத் துக்கம் தூக்கத்தை விரட்டியது.'

'பெற்றோர் உறவினர்களோடு இருக்கும் போது புரியாத பாசம் நெகிழ்ச்சி அவர்களைப் பிரிந்திருக்கும் போது பலமடங்காகப் பெருகிவிடுகிறது. அந்தச் சம்பவம் நேர்ந்திராவிட்டால் அவள் இந்நேரம் தாயை அணைத்துக் கொண்டு சுகமான தூக்கத்தில் ஆழ்ந்து போயிருப்பாள். தனிமை அவள் சிந்தனையைக் கொக்கிபோட்டிழுத்துப் பின்னுக்குத் தள்ளியது'.

— சுகந்தினி குலசேகரம்



மனைவி: வரும்போது ஒருகிலோ புளியும் வாங்கி வரச்சொல்லி விட்டேனே... மறந்து போனீங்களா?

கணவன்: நான் மறக்கவில்லை... புளி விலையைக்கேட்டால் புண்ணிலை புளி ஊத்தின மாதிரியிருக்கு...

உச்சுவேலி -கதிர் மாணிக்கம்



# மரணம் ஒரு முடிவல்ல

தமிழ்ச் செல்வி

இன்று ஓய்வுநாள்... ஓய்வுநாள் என்றதுமே மற்ற ஆறுநாட்களும் எங்கோ மறைந்துகிடக்கும் சோம் பேறித்தனம் என்னையறியாமலே வந்துவிடும். அதன் ஆரம்ப செயற் பாடாக, 'விடிந்து விட்டதே' என்று உள்மனம் பதைக்கின்றபோதும். 'லீவுநாள்தானே... கொஞ்சம் படுப் பம்...' என்று இன்னொரு மனம் தடுத்துவிடுகிறது.

எழுந்தபோது எட்டு மணிக்கு மேலாகிவிட்டது. கால் முகம் கழு விக்கொண்டு அடுப்படிக்கு வருகி றேன்.

'என்னதான் உத்தியோகம்பாக் கிறதெண்ட நினைப்பு இருந்தாலும் நேரத்துக்கு நித்திரையாலை எழும்ப வேணும்... அதுதான் பொம்பிளைப் பிள்ளையளுக்கும் அழகு ' அம்மா யாருக்கோ சொல்லுகிறமாதிரிச் சொன்னாள்.

'ஆறுநாளும் நான் படுகிறகஷ் டம் இந்த அம்மாவுக்கு எங்கை தெரியப்போகுது...' மனதுக்குள் மெல்லச் சிரித்தபடி தேனீருடன் வெளியே வருகிறேன்.

என் முற்றத்துப் பிலாமரத்தில் அண்டங்காகம் ஒன்று மூச்சுவிடா மல் அவலமாய்க் கத்திக்கொண்டி ருந்தது.

'உந்தக் காகத்தை துரத்து மோனை. விடிய வெள்ளணத் துவங்கி விட்டுது கத்துறதுக்கு...' அம்மா அடுப்படிக்குள் இருந்து கத்தினாள்.

'காகம் ஏதோ தன்ரை வேதனையில் கத்துது... நீங்கள் ஏன்சும்மா என்னவோ எல்லாத்தையும் கற்பனை பண்ணுறியள்...? முணுமுணுத்தபடி காகத்தைத் துரத்தினேன். துரத்தி விட்டுத் திரும்பியபோது படலையில் நான்கு கால்கள் உள்ளேவரத் தயங் குவது தெரிந்தது.

'அக்கா! ஒருரிக்கற் எடுக்கிறி யளே...,

'அக்கா!' அந்தக்குரலின் பரிவு இதயத்தில் சீழ்கட்டிப்போயிருந்த காயம் ஒன்றின் மேல் யாரோ மிதித்துவிட்ட மாதிரி வலித்தது.

'எவ்வளவு காசு தம்பி ...? உள்ள வாரும் எடுக்கிறன் ...'

ரிக்கற்றை வாங்கிக்கொண்டு பத்துரூபாவைக் கொடுத்தேன். ஆரம்ப சுகாதார வசதிக்காக நாட கமாம்

அவர்கள் போய்விட்டார்கள்' ஆனால் அந்த அக்கா என்ற அழைப்பு சுற்றிச் சுற்றிக் கேட்டது. ''ரகு'' என்ற அந்தப் பழைய காயம் வலித் தது.

படித்து முடித்துவிட்டு பொழுது போகவில்லை என்று தவித்துக் கொண்டிருந்தபோது... 'ரியூஷன் கொடுக்கலாம்' என்ற எண்ணம் உதித்தது. எனது முதல் மாணவனாக அறிமுகமாகி... என்றும் என் அன்புக்கு பாத்திரமாகிவிட்ட ஒரு தம்பிதான் அந்த ரகு.

மூன்றுபேரோடு நான் வகுப்பை ஆரம்பித்து முப்பதுபேர் ஆகிவிட் டனர் முழத்துக்கு முழம் ஊரில் ரியூட்டரிகள் பெயர் தாங்கி நின்றா லும்... பல பெற்றோர்கள் என்னிடம் தான் பிள்ளைகளைப் படிக்க அனுப் பினார்கள். அதற்கு ஒரு முக்கிய காரணம் நான் யாரிடமும் ''பீஸ்'' என்று வாய்விட்டுக் கேட்காதது தான்.

என்னிடம் நிறையப் பேர் படித் தாலும் ஜெயா என்ற மாணவி தான் என்னை மிகவும் ஈர்த்தாள். தூய்மையான தோற்றம்; அடக்க மான சுபாவம்.

படிப்பு நேரம் இல்லாத வேளை களிலும் அவள் எங்கள் வீட்டுக்கு வருவாள். அப்போதெல்லாம் எனக்கு அவளைப்பற்றி எந்தவிதமான அபிப் பிராயமும் ஏற்படவில்லை. சின்னப் பிள்ளைதானே!

அவள் எங்கள் வீட்டுக்கு வரும் வேளைகளில் பக்கத்து வீட்டு ரகு என்தம்பியும் அடிக்கடி வருவான் பென்சில் கேட்டும்' விளங்காத கணக்குக் கேட்டும் அவன் வருகை அதிகரித்தபோது நான் கொஞ்சம் உஷாரானேன்.

நான் வீட்டைவிட்டு வெளியே போகும்போது, நான் நாளைக்கு நிக் கமாட்டேன்... நீ பின்னேரம் வா ஜெயா...' என்று முன்னறிவித்தல் கொடுத்தாலும்...

'வீட்டில இருந்து படிக்கே லாது... தம்பியாக்கள் என்னோடை ஒரே சண்டை...' அவள் வருவாள். தன் வருகைக்கு அவள்கூறும் நொண் டிச் சாட்டு இது.

இவன் ரகுவைக் கொஞ்சம் கவனிச்சுக் கொள்மேனை... நாலு பொம்பிளைப் பிள்ளையள் படிக்க வாற இடம்... மற்றவை பரிசிகேடா நினைக்கிறமாதிரி இருக்கக்கூடாது... ஒருநாள் அம்மா சொன்னாள்.

நானும் கொஞ்சம் நாளாக கண் டுங் காணாத மாதிரி விட்டுவிட் டேன்.

ரகுவுக்கு அவ்வளவாகப் படிப்பு ஏறாது... படிக்கவேணும் எண்ட அக்கறை கூட அவனுக்கு இல்லை. படி என்று வற்புறுத்தினால் ஏற்கெ னவே கீறிவைத்திருந்த உயிரியல் படங்களுக்கு வர்ணம் பூசிவிட்டுப் படுத்துவிடுவானாம்.

'ம்' இவனை உன்ரை தம்பிமாதி ரிச் கவனிச்சுக்கொள் பிள்ளை.. இவ

ணுலை எனக்குப் பெரிய உபத்திரவமாக் கிடக்குது... தேப்பன் மனிசனே அடிக்கிறன், முறிக்கிறன் எண்டு நிக்கிருர். இப்பத்தைச் சின்னனுகளோடையே காலந் தள்ள ஏலாது... அவனும் இளந்தாரிப்பிள்ளை... அவனுக்கும் ரோசம் வந்து ரண்டுசொல்லு எதிராச் சொல்லிப்போட்டான் எண்டால் என்ன செய்யிறது?...' முதல்முதல் என்னிடம் ரகுவைப் படிக்க எண்டு விடும்போது அவனுடைய தாய் அம்பியக்கா இப்படித்தான் சொல்லி விட்டா.

பரீட்சை நெருங்கிக் கொண்டிருந்தது. இதைச் சாட்டாக வைத்து ஜெயாவுக்குச்சொன்னேன். 'ஜெயா! உன்னை என்ர தங்கச்சி மாதிரி நேசிக்கிறபடியாத்தான் சொல்லுறன... பூனை கண்ணை மூடிக்கொண்டு பால் குடிச்சா உலகம் இருண்டு விடாது... படிக்கிற நேரத்திலை படிக்கவேணும்... இப்ப படிக்கிறதை தவிர வேற எதிலும் உன்ர மனம் திசை திரும்புறதை நான் விரும்பேல்லை...'

அவள் இரண்டு நாட்களாய் என்முகத்தை நிமிர்ந்து பார்ப்பதில்லை. என்னை நானே திட்டிக் கொண்டு ஒருநாள் ரகுவை கூப்பிட்டேன்.

'நீயே யோசிச்சுப் பாரடா ரகு ...அவயளின்ர குடும்பத்துக்கும் உங்கட குடும்பத்துக்கும் ஏணி வைச்சாலும் எட்டாது... உனக்கு உந்த ஆசை ஒண்டும் வேண்டாம்... உன்ரை அப்பா அறிஞ்சால் உன்னை அடிச்சு முறிச்சுப்போடுவாரடா... அநியாயமா உன்ரை எதிர்காலத்தைப் பாழாக்கிப் போடாதை...'

'உண்மையாவே நான் அவளை விரும்புறனக்கா...'

'ரகு! காதலிக்கக் கூடாது எண்டுநான் சொல்லேல்லை... அதுக்கு ஒரு பக்குவமான மனம் தேவை. சும்மா படத்தையும் பாத்துட்டு... கண்டகண்ட புத்தகங்களையும் படிச்சுப்போட்டு மனதைப் பழுதாக்கிப் போடாதை... இப்பிடி வயதுக்கோளாறு ஏற்படுத்துற காதல் தான் கடைசியிலை சினிமாப் பாடல்களையும் சிகரெட்டுக்களையும் கதியெண்டு வாழவைச்சுவிடுது...'

...எங்கடை சமுதாயத்துக்கு இப்ப எத்தனையோ தேவைகள் இருக்கு... நிகழ்காலச் சமுதாயம் இந்த தலைமுறையிட்டை அம்பிகாவதியையும் அமராவதியையும் எதிர்பாக்கேல்லை... குற்றுயிரா இங்கிக் கொண்டிருக்கிற தனக்கு புத்துயிர் அளிக்கக் கூடிய தியாகிகளைத்தான் எதிர்பாக்குது...'

என்பிரசங்கத்துக்குப்பிறகு அவன் பாடநேரத்துக்குத்தான் வருவான். படித்து முடிந்ததும் போய்விடுவான். ஆனால் அவர்களுடைய சந்திப்பு ஒழுங்கைகளிலும் : சந்திகளிலும் நடைபெற்றுக்கொண்டு தானிருந்தது.

நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை. ஏதோ அதிர்ஸ்டவசமாய் எனக்கு ஒரு நிரந்தர ஆசிரியர் வேலை... கிடைத்துவிட்டது. பள்ளிக்கூடத்துக்கும் போய்... வீட்டிலும் ரியூஷன் கொடுப்பது என்வரை இயலாமல் போக... ரியூஷன் வகுப்பை நிறுத்திவிட்டேன்.

பரீட்சை முடிந்து முடிவுக்காய் அவர்கள் காத்திருந்த போது... ரகுவின் கடிதம் ஒன்று அவளது தகப்பனிடம் அம்பிட்டுவிட்டது. அவர் மிகவும் கெட்டிக்காரத் தகப்பன். மற்றவை எண்டால் ஊரைக் கூட்டி நியாயம் கேட்டு விஷயத்தைக் பெரிதாக்கிப் போடுவினம். ஆனல் அவர் சடகட வென்று காரியத்தில் இறங்கினர்.

எப்படியோ வெருட்டியோ திட்டியோ ஜெயாவின் மனம் மாற்றப் பட்டு... அவளுக்கும் வெளிநாட்டு எஞ்சினியருக்கும் திருமணமாகிவிட்டது. அவளுடைய இழப்பைத் தாங்கமுடியாமல் அவன் எங்கோ ஓடி விட்டான். அவன் மீது வைத்த பாசத்தால் நானும் இரண்டு நாட்கள் உண்ணமல், உறங்காமல் துக்கம் கொண்டாடினேன்.

'எனக்கு அப்பவே தெரியும்... உவன் வீட்டுக்கும் உதவான்... நாட்டுக்கும் உதவான் எண்டு... நாலு நாளைக்கு தெருவிலை திரிஞ்சு போட்டு திரும்பி வருவான் இங்கதான்...' ரகுவின் தகப்பன் அசையவே இல்லை. அம்பியக்கா பாவம் படுத்தபடுக்கைதான்.

எழும்புங்கோ அம்பியக்கா... ஏதோ ஊர்உலகத்திலை நடக்கக் கூடாதது நடந்த மாதிரி .. எத்தினை நாளைக்கு இப்பிடி இருக்கப் போறியள்...' நான் தேற்றினேன்.

'தன்னை நம்பி வயதுவந்த ரண்டு பொம்பிளைப்பிள்ளையள் இருக்குது... அதுகளுக்குத் தான் செய்யவேண்டிய கடமைகள் இருக்கு தெண்டு யோசிக்காமல்அவன்போட்டானே பிள்ளை...' சீலைத்தலைப்பால் கண்களைத் துடைத்தபடி அம்பியக்கா அழுதா.

'அவன் என்ன சின்னப்பிள்ளையே அம்பியக்கா... எங்கையெண்டாலும் இருப்பான் .. சும்மா மற்றப் பிள்ளையளையும் பயப்பிடுத்தாமல் தைரியமாய் இருங்கோ ..'

நான் அம்பியக்காவுக்கு ஆறுதல் கூறிவிட்டு வந்தேன்.

'எப்படியும் திரும்பி வந்து விடுவான். என்ற ஒரு வறட்டு நம்பிக்கையோடு காத்திருந்தபோது... தற்செயலாக அவனை நான் காணநேர்ந்தது. அவன் உருவத்தில் எத்தனையோ மாற்றம்? ஒரு வேளை அந்த மாற்றம் உள்ளத்திலும் ஏற்பட்டிருக்குமோ?... இருக்காது. அப்படி என்றால் அவன் என்னைக்கண்டதும் சந்திப்பைத் தவிர்த்திருப்பானல்லவா?

'இவதான் நான் சொல்லுற என்ரஅக்கா...' அவன் தன் தோழர்களிடம் என்னை அறிமுகப்படுத்திய போதுதேகமெல்லாம் பரவசப்பட்டது. தெருவால் போன ஒன்றிரண்டு பேர் அவர்களையும் என்னையும் மாறிமாறிப் பார்த்துக் கொண்டு போனுர்கள்...

அவனுடைய திடீர்ச் சந்திப்பு என்னைத் திகைக்கவைத்ததால் ஒன்றும் கேட்கவோ சொல்லவோ முடியேல்லை.

அதற்குள்... தெருவுக்கு அந்தப்பக்கமாக நின்ற வான் ஒலி எழுப்ப... 'ஆறுதலா வாறனக்கா... கட்டாயமா உங்களிட்ட வருவன்...' கூறிவிட்டு அவர்களுடன் அவன் ஊர்ந்த வானில் தொற்றிக் கொண்டான்.

அவன் போனபிறகுதான், அம்பியக்கா படுத்த படுக்கையாகக் கிடப்பதையோ, அல்லது அவனுடைய தங்கைகள் அழுது கொண்டிருப்பதையோ... கூறவில்லையே என்று மனம் சங்கடப்பட்டது.

இவையெல்லாம் ஏற்படும் என்று அவனுக்குத் தெரியாதா என்ன? இனி பந்தபாசம் எல்லாம் அவனை மாற்றப்போவதில்லை.

திரும்பத்திரும்ப அவனது நினைவில் மனம் உழன்றது... ஒரு பெண்ணின் நினைவு ஒரு ஆணின் மனதை எப்படியெல்லாம் திசைமாற்றி விடுகின்றது என்பதற்குஉதாரணமாய்.. என் தம்பி ரகு... அந்தக் கசப்பான உண்மையின் உறுத்தலை விழுங்கிக் கொண்டேன்.

இரண்டு வாரங்கள்... விடிந்து வேலைக்குப் புறப்பட்டபோது... அந்தக் கொடிய செய்தி காட்டுத்தீயாகப் பரவியது... ஊரே சோகத்தில் மூழ்கியது... முற்றுகையை முறியடிக்கப் புறப்பட்ட அந்த இளைய தலைமுறை இரத்தக்காட்டில் இறுதி மூச்சுவிட்டது... அவனோடு களத்தில் நின்றவர்கள் வெற்றியோடு திரும்பினுர்கள்... அவனுடைய மரணம் இந்த மண்ணுக்கு முடிவுக்காகவல்ல விடிவுக்காகவே! வீதிகள் தோறும் புன்னகை வீசிக்கொண்டு அவன் இருக்கிறுன்.

(அனைத்தும் கற்பனையே)

# ஈழத்தில் புனைகதை இலக்கியம்

நவீன இலக்கியங்களான நாவல், சிறுகதை, புதுக்கவிதை முதலிய துறைகளில் எண்பதுகளின் ஆரம்பம் முதல் புதிய அலை ஒன்று வீச ஆரம்பித்திருப்பது கண்கூடு.

ஈழத்துத் தமிழ்ப் புனைகதை இலக்கிய வரலாற்றை நுணுகி ஆராயும்போது, அரசியல்- சமூக மாற்றங்கள் இலக்கியத்திலும் பாதிப்பை ஏற்படுத்தி வந்திருப்பன தெளிவாகத் தெரிகிறது. எம் நாட்டில் புனைகதை இலக்கியம் தோன்றி நூறு வருடங்களாகிவிட்டன எனினும், சிறுகதை இலக்கியமானது கடந்த ஐம்பது வருட வரலாற்றையே உள்ளடக்கியதாகும். அதற்கு முற்பட்ட காலத்தில் நாலல்கள் மாத்திரமே வெளியாகின.

கடந்த நூற்றுண்டில் சுதேச மன்னர்களின் ஆட்சி பீடங்கள் முற்று முழுதாக ஐரோப்பியர் கைகளுக்கு மாறியமை, ஈழத்தின் சமூக அடித்தளத்தினையே ஆட்டங்காணச் செய்தது. சமூக நிலைமைகளில் பாரிய விளைவுகள். மாற்றங்கள் படிப்படியாக ஏற்படலாயின. புதிய ஜனநாயகப் பாரம்பரியத்தால் அரசியல், கல்வி, கலாசாரம், மொழி, தொழில் வாய்ப்புக்கள் முதலானவற்றில் புதிய பாதைகள் வகுக்கப்பட்டன. கல்வி முறையானது சாதாரண மகனுக்கும் அறிவு புகட்டும் ஒரு பொதுத்துறையாக மாற்றம் பெற்று வந்தபோது, ஆண்டாண்டு காலமாக நிலமானிய அமைப்பினைப் புலப்படுத்தி வந்த இலக்கியங்கள் திசைதிரும்பலாயின. செய்யுள் இலக்கியம் பாட்டாளி மக்களும் புரிந்துகொள்ளக் கூடிய வசன இலக்கியமாக மாற்றம் பெற்று வந்தது. செய்யுள் இலக்கியம்கூட மரபுநிலையை உடைத்துக்கொண்டு மக்கள் இலக்கியமாகி புதுக்கவிதை என்ற வடிவம் பெற்றது. இசை நாடகங்களும் உரை நடைக்கு மாறிவந்தன.

புனைகதை இலக்கியத்தின் ஓரம்சமான சிறுகதை இலக்கியம் நாவல் இலக்கியத்தின் பின்னரே உளாப்படுவதால் சிறுகதைத் துறையையே இக்கட்டுரையில் முக்கியமாக அலசப்போகிறேன்.

ஈழத்துச் சிறுகதையின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் நுணுகி ஆராய்ந்து பார்க்கும்போது, அதன் ஐம்பது வருட வரலாற்றினை நான்கு காலகட்டங்களாக வகுக்கலாம். ஈழத்துச் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி ஆராய்ந்த க. அருணசலம் அவர்கள் 1980 வரையிலான காலகட்டத்தை மூன்ருக வகுத்துள்ளார். இப்போது ஏற்பட்டிருக்கும் புதிய அலை நான்காவது காலகட்டமாகக் கொள்ளத் தக்கது.

ஐந்து தசாப்தங்களுக்கு முன்னர் சிறுகதை இலக்கிய வடிவம் தமிழகத்தில் தோற்றம் பெற்று வாசகர்களை ஈர்த்து வந்த காலகட்டத்தில்இலங்கையில் சிறுகதைக்குரிய உருவம், உத்திஉள்ளடக்கத்துடன் சி. வைத்தியலிங்கம், இலங்கையர்கோன், சம்பந்தன் முதலானேர் கதைகள் எழுத ஆரம்பித்தனர். இவர்கள் வழியில் சோ. சிவபாதசுந்தரம், குல சபாநாதன், சோ. நடராஜன் முதலானேரும் தொடர்ந்தனர். தமிழகத்து எழுத்தாளர்களின் நேரடித்தாக்கம் இவர்கள் கதைகளில் புலப்பட்டன. 1935 முதல் 1950 வரையிலான இக்காலகட்டமே ஆரம்ப காலகட்டமாகக் கொள்ளப்படுகிறது ஈழகேசரி பத்திரிகை இக்காலகட்டத்தில் பல நல்ல சிறுகதைகளை வெளியிட்டு வந்ததால் இக்காலகட்டத்தை ஈழகேசரிக் காலம் என்றும் குறிப்பிடுவர். இக்காலகட்டத்திலேயே மறுமலர்ச்சிச் சங்கம் அமைக்கப்பட்டு மறுமலர்ச்சியில் சிறுகதைகள் வெளியாகி ஈழத்துமக்களின்எண்ணங்களைப் பிரதிபலிக்கும் பல கதைகளும் இடம்பெற்றதால் மறுமலர்ச்சிக் காலம் என்றும் இதனைக்கொள்வர். அ. செ. முருகானந்தம் தி. ச. வரதராஜன், வ. அ. இராசரத்தினம், சு. வேலுப்பிள்ளை, கனக செந்திநாதன், தாளையடி சபாரத்தினம், அ. ந. கந்தசாமி, சொக்கன், இராஜநாயகன் முதலானேர் உருவான காலப்பகுதியும் இதுவேயாகும், கிராமிய சூழலை அழகாகப் படம்பிடித்ததோடுசமுதாயசீர்திருத்தக்கருத்துக்களை முன்வைத்தஅ. செ. மு. விதந்து குறிப்பிடத்தக்கவர்.

இரண்டாவது காலகட்டமான 1950 முதல் 1960 வரையிலான காலப்பகுதியில் வந்த சிறுகதைகள் இடைக்காலச் சிறுகதைகள் என்று குறிப்பிடப்பட்டன. அரசியல் சித்தாந்தங்களும், சமூகசீர்திருத்தங்களும் இப்பகுயில் உருவான சிறுகதைகளில் முக்கிய இடம் பிடித்தன. மண்வாசனை, யதார்த்தம் என்பன பரவலாக அடிபட்டன. இக்கால கட்டத்தை அதிதீவிர வளர்ச்சிக்காலம் என்றும் கூறுவர். பிரசுரக் களங்களும் இக்காலப்பகுதியில் பரவலாயின. செ. கணேசலிங்கம், என். கே. ரகுநாதன் கே. டானியல், டொமினிச்ஜீவா நீர்வை பொன்னையன், அகஸ்தியர் பெனடிக்ற்பாலன் எஸ். பொன்னுத்துரை, அ. முத்துலிங்கம், பித்தன் உதயணன், அருள். செல்வநாயகம், தெளிவத்தைஜோசெப், சில்லையூர் செல்வராஜன், சிற்பி போன்ருேர் இக்காலகட்டத்தில் உருவானவர்களே.

1960 முதல் ஆரம்பமான காலகட்டம் ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியின் பொற்காலம் எனலாம். 1956ல் ஏற்பட்ட சமூக அரசியல் மாற்றப் பின்னணிகள் இலக்கிய வளர்ச்சிக்கு உந்துகோலாகிச்செயல்பட்டன. ஐம்பதுகளில் உருவானவர்களுடன், புதிதாக அறுபதுகளில் பலரும் உருவாகி சிறுகதைத் துறையை வளம்பெறச் செய்தமை இக்காலகட்டத்தின் வளர்ச்சியை மேலும் துரிதப்படுத்த உதவின தமிழ் மொழிக் கல்வி பல்கலைக்கழகத்தில் புகுந்த காலகட்டமும் இதுதான் என்பதால் எழுதுபவர்களும், வாசிப்பவர்களும் பெருகினர். விமர்சனத்துறையின் வளர்ச்சியும் இம்மூன்ருவது காலகட்டத்தைச் செப்பனிட உதவின. அமரர் கைலாசபதி விதந்து குறிப்பிடத்தக்க இலக்கியத் திறனய்வாளர் ஆவர்.

மீனவர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் முதலான பாட்டாளி மக்கள் பேசுகின்ற தமிழை எல்லாப்பரீச்சார்த்தமாக அக்காலகட்டத்தில் சிறுகதையில் புகுத்தி

அடக்குமுறை இனரீதியில் இருக்கும்போது இனவிடுதலைக்குக் குரல் கொடுப்பது முற்போக்கு இலக்கியம்தான் என்ற கருத்து வலுப்பெற்றது. 1977ல் ஏற்பட்ட ஆட்சி மாற்றமும் அதனைத் தொடர்ந்து வெடித்த இனக்கலவரமும், இதனுல் வளர்ச்சியுற்ற விடுதலைவேட்கையும் இலக்கிய நெஞ்சங்களை உலுப்பின. எனவே 1980 முதல் புதிய அலை ஒன்று வீச ஆரம்பித்தது. இது 1983 இனக்கலவரத்துடன் மேலும் முனைப்புப் பெற்றது. இனவிடுதலைக்கான ஆயுதப் போராட்டம் ஒடுக்கப்பட்ட மக்களின் மத்தியில் பிரபலம் பெற்றது போலவே புதிய பரம்பரை எழுத்தாளர்களையும் வீறுகொண்டு எழவைத்தது.

பலவிதமான வாதப்பிரதிவாதங்களுக்கும் உள்ளாகி, இறுதியில் வெற்றியும் கண்டனர். கிராமங்களிலும், சந்தைகளிலும், சந்திகளிலும், அடுப்படிகளிலும் கல கல என்று போசப்படுகின்றன தமிழில் பலகதைகள் உருவாகி வரவேற்பும் பெற்றன, பொதுவுடமைக் கொள்கைகள் முற்போக்கு அணியை சாதி என்னும் அரக்கனுக்கெதிராக பேனா என்னும் ஆயுதம் முனைப்புப் பெற்றகாலமும் இதுதான்.

அடிப்படையில் ஆரோக்கியமும் உள்நோக்கில் உன்னதமும், வர்க்கப் போராட்டத்தில் நம்பிக்கையும் கொண்டுசிறுகதைகள் உருவாக்கப்பட்டன. முஸ்லீம் எழுத்தாளர்கள் பலரும் முனைப்புடன் எழுதினர். காலஓட்டத்தில் இவ்விலக்கியம் மக்களின் மனதைக்கொள்ளைகொண்டு, விட்டதாலும், மக்களின் எரியும், பிரச்சினைகள் கருவாகி உருவானதாலும் ' மக்கள் இலக்கியம்' என்ற பதமும் பிரயோகிக்கப்பட்டது. மு. தளையசிங்கம், நந்தி, பாலமனோகரன், அருள்சுப்பிரமணியன், செங்கை ஆழியான், செ. கதிர்காமநாதன், செம்பியன் செல்வன், செ. யோகநாதன். தெணியான், நெல்லை. க. பேரன், கண. மகேஸ்வரன், கும்பிளான். ஐ. சண்முகன், நித்தியானந்தன், திக்கவல்லைகமால் மருதூர்க் கொத்தன், மல்லிகை, சி. குமார், பரிபூரணன், நுஃமான் திமிலைத்துமிலன், சமீம், அன்புடீன் அன்புஜவாகர் பஷீர், ஹனிபா, நாகூர்ஹனி, சாந்தன், யேசுராசா டானியல் அன்ரனி, நவம் ரதன ஞானசேரன்,முருகபூபதி, செ. குணரத்தினம், சட்டநாதன், சடாச்சரன் விஜயன். சுதந்திரராஜா, கலாமோகன், முதலான பலர் அறிமுகமாகினர்.

துரிதவளர்ச்சியைக்கண்ட இக் காலப்பகுதியைத் தொடர்ந்து ஒரு தேக்க நிலை சிறுகதை உலகில் நிலவிவந்தது. கூர்மையுடன் எழுதப்பட்டாலும் கூட திரும்பத் திரும்ப ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளாக சிறுகதைகள் வெளிவந்த வண்ணமிருந்தன. பெண்எழுத்தாளர்களான புதுமைப்பிரியை, குந்தவை, பவானி, நந்தினி சேவியர் மண்டூர், அசோகா, நயீமாசித்திக் பிரோசா ஹுசைன் யாழ்நங்கை அருண்விஜயராணி, ரதிகமலா கோகுலம் சுப்பையா முதலானோர் உருவாகினர்.

1956 ஏற்பட்ட அரசியல் மாற்றத்தின் சிறப்பு அம்சங்களை ஆதரித்துப் புனைகதைகள் படைத்த தலை சிறந்த எழுத்தாளர்கள் பலரும், அம்மாற்றம் ஏற்படுத்திய முக்கிய குறைபாட்டை சுட்டிக்காட்டி முனைப்பான சிறுகதைகள் சமைக்கத் தவறிவிட்டனர் என்றே கூற வேண்டும். அரசகரும மொழியாக தனிச்சிங்களச்சட்டம் உருவானது, தேசிய மொழியான தமிழ்மொழி உதாசீனப்படுத்தப்பட்டதும் தான் இன்றைய எரியும் பிரச்சனையின் அத்திவாரம் எனலாம். அன்றைய எழுத்தாளர்கள் அதனுல் ஏற்பட்ட சிக்கல்களுக்கு ஒருமித்து நின்று குரல் கொடுக்காமை விசனத்திற்குரியது. தேசியவாதம் என்ற போர்வைக்குள், கொடுமைகளைச் சகித்துக் கொண்டு வாழாவிருந்தமை சரியென்று ஒப்புக்கொள்ள முடியாததாகும்.

எழுபதுகளில் உருவானவர்களும்' புதியபரம்பரை எழுத்தாளர்களும் மாத்திரமின்றி, தொடர்ந்தும் எழுதிவரும் பழம்பெரும் எழுத்தாளர்களும் இப்புதிய அலையில், வீறுகொண்ட விடுதலை இலக்கியம் படைக்க முனைகின்றனர். பலவீத கட்டுப்பாடுகளின் மத்தியிலும். தாம் வாழும் காலத்தைப் பிரதிபலிக்கின்ற இலக்கியம் படைக்கும் இவர்களது பணி இன்னமும் முனைப்புப் பெறவேண்டும். புதிய அரசியல் சித்தாந்த வளர்ச்சி பெண் விடுதலையையும் முனைப்புப்பெறச் செய்துள்ளதால் பெண் விடுதலை பற்றிய இலக்கியங்களும் கணிசமாக அறுவடையாகின்றன. பெண் எழுத்தாளர்களும் பல்கிப் பெருகியுள்ளதோடு, ஆழமான அற்புதமான இலக்கியம் படைக்கின்றனர். சமுதாய மட்டக்திலுள்ள சகல தளங்களும் அலசப்படுகின்றன.

காவலூர் ஜெகநாதன், இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன், கே. ஆர். டேவிட், ச முருகானந்தன், அசளங்கன், தோப்பாய் சிவம், கோகிலா மகேந்திரன், தாமரைச்செல்வி, நாகேசுதர்மலிங்கம், வடகோவை வரதராஜன், சுதாராஜ், நெளசாத். குமுதன், உமாவரதராஜன், யோகா பாலச்சந்திரன், தமிழ்ப்பிரியா, ஜனகமகள்சிவஞானம், சந்திரா தியாகராஜா, நிஃமத், அஜீ வாகிது, மங்கை, தமிழ்ப்புதல்வி, யோகேஸ்வரி, மகினன், அப்துல் சமட், மலர் மகன், லோகேந்திரலிங்கம்முதலானவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

இப்புதிய பரம்பரையினரோடு பழையவர்களான அகஸ்தியர், செங்கை ஆழியன், தெணியான் செம்பியன் செல்வன், செ. யோகநாதன், பெனடிக்ற் பாலன் போன்றவர்களும் புதிய அலையில் ஆட்கொள்ளப்பட்டு சமகால எரியும் பிரச்சனைகளை கதைகளாக வடித்து வருகின்றார்கள்.

நாவல் உலகில் இப்போது ஒரு தக்கம் ஏற்பட்டிருக்கிறது அதிகநாவல்கள் வெளிவருவதில்லை. எனினும் பத்திரிகைகளில் தொடராக வரும் நாவல்களில் புதிய அலை வீசுகிறது. கோவிந்தன் எழுதிய புதிய உலகம், இந்தவகையில் முதலாவதும், ஓரளவு முழுமையானதுமான நாவலாகும். இது தமிழ்நாட்டில் வெளியிடப்பட்ட ஈழத்தவரது நாவலாகும்- புத்தகவடிவில் வெளிவந்துள்ளது.

புதுக்கவிதையில் புதிய அலை செழிப்புடன் வெளிவருகிறது. சோலைக்கிளி புதுவை இரத்தினதுரை, சேரன், ஜெயபாலன், காரை சுந்தரம்பிள்ளை, வில்வரத்தினம், அப்புஜம், செண்பகன், மேமன் கவி, ஜனயுகன் போன்ற பலரைக்குறிப்பிடலாம். நெஞ்சைத் தொடும் வண்ணம் பல கவிதைகள் எரியும் பிரச்சினைகளைச் சித்தரிக்கின்றன.

நாடக, நாட்டியநாடக, தெருக்கூத்து, பாட்டு முதலான துறைகளிலும் எரியும் பிரச்சினையின் புதிய அலை வீசுகிறது. இந்த வகையில் மண் சுமந்த மேனியர்' நாடகம் குறிப்பிடத்தக்கது.

பிரச்சினைகளைத் தரிசிக்கவைப்பதோடு நின்று விடாமல் முனைப்புடன் செயற்பட்டு தீர்வுக்கும் வழி சமைப்பது எழுத்தாளர்களின் பணியாகும். கொழும்புப் பத்திரிகைகளின் பங்களிப்பு போதிய அளவு இல்லை என்றே கூறவேண்டும். ஈழமுரசைத் தொடர்ந்து ஈழநாடு, மல்லிகை, தாயகம், சிரித்திரன், அமிர்த கங்கை, அலை முதலான பல பத்திரிகை சஞ்சிகைகள் 'புதிய அலை படைப்புகளுக்கு களம் சமைக்கின்றன. சஞ்சீவியில் சிறுகதை வெளிவரவேண்டும்.

---

## இராட்சதனும் தூசும்

வானில் பறக்கும்
இராட்சதனே
ஹெலியே
பகலிலும்!
இரவிலும்
பறந்தாய்.
பல கொடுமைகள்
தானும்
புரிந்தாய்
அல்லும் பகலும்
பயந்தே
பதுங்கினேம்
குழியில்.
இன்று—
உனை விரட்டிட
விடுதலை வீரர்கள்
நின்றார்கள்.
உயர உயர
நீ பறந்தாய்.
நீ இப்போ
வெறும் தூசு!

ச. முருகானந்தன்




கந்தையர் யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் எழுதுவினைஞராக பணியாற்றி ஒய்வு பெற்றவர். அதனுல், எல்லோரும் ஊரில் அவரைக் கச்சேரிக் கிளாக்கர் என்றே அழைப்பார்கள். கிளாக்கர் வீடு எது வென்று ஊரில் கேட்டால் எல்லோரும் கந்தையர் வீட்டைதான் காட்டுவார்கள். ஊரில் தற்போது வேறுசிலரும் கிளார்க்கு வேலை பார்த்தாலும் அந்த ஊரில் முதன் முதல் அவர்தான் அந்த வேலை பார்த்தவர் என்பதால் அவ்வாறு பெயர் வந்துவிட்டது...

அவருக்கும் மனைவி காமாட்சிக்கும் இரு இரட்டைப் பிள்ளைகள். முதலிற் பிறந்தது பெண். ஆனந்தி என்று பெயர். அடுத்து ஆண். பரணன் என்று பெயர். நல்ல அளவான அழகான குடும்பம் என்று ஊரில் எல்லோரும் பேசிக்கொள்வார்கள். கந்தையர் குடும்பத்திற்கு சீதனம் முதிசம் என்று ஒன்றும் பெரிதாக இல்லை. இருக்கின்ற நான்கு பரப்புக் காணியும் வீடும்தான். குடும்பச் செலவு பெருப்பாலும் கந்தையரின் மாதச்சம்பளத்தில் தான் ஓடியது. காமாட்சி கொஞ்சம் கெட்டிக்காரியாகையாலும், கந்தையரின் சிக்கனத்தாலும் இரண்டு பிள்ளைகளும் படித்து நல்ல நிலைக்கும் வந்து விட்டார்கள். இருந்தும் காசுபணம் சேமிப்பு என்று எதுவும் கந்தையரிடம் இருக்கவில்லை. தற்போது பிள்ளைகள் படித்து நல்ல உத்தியோகம் பார்ப்பதால் இருக்கின்ற சிறுகடனையும் விரைவில் தீர்த்து, பிள்ளைகட்கும் நல்ல வாழ்வை அமைக்க முடியும்.

பிள்ளைகள் இருவரும் மருத்துவ பட்டதாரிகள். மகள் ஆனந்தி யாழ்ப்பாணத்திலும் மகன் பரணன் கண்டியிலும் டாக்டர்களாக பணிபுரிகின்ருர்கள். இருவருக்கும் இருபத்தெட்டு வயதாகின்றது. ஆண்களுக்கு வயதேறுவதில் பிரச்சனை இல்லை. ஆனுல், என்னதான் உத்தியோகம் பார்த்தாலும் பெண்பிள்ளையை காலாகாலத்திலை கட்டிக்கொடுத்துட வேணும்...படிப்பித்துஉத்தியோகம் பார்ப்பிப்பதிலும் காலாகாலத்திலை பெண்பிள்ளையை கட்டிக் கொடுக்கிறதுதான் சாதனை. அதுவும் இந்த யாழ்ப்பாண சமூகத்திலை அதைச்செய்யிறது இமாலயச்சாதனை. இதைச்செய்ய கிளாக்கரும் முயன்று கொண்டிருக்கிருர். என்ன செய்வது? படித்து உத்தியோகம் பார்க்கிற பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடுறதென்ருல் சும்மாவா? உத்தியோகத்திற்கேற்ற மாதிரி தேட வேணும். அதுவும் வயது ஏற ஏறச் சீதனமும் கூடிக்கூடிப் போகும். ஆனந்தி உத்தியோகம் பார்ப்பதற்கிடையில்' தரகர் பத்துப்பன்னிரண்டு சம்பந்தங்கள் கொண்டு வந்திருப்பார் அவை... ஒன்றில் உத்தியோகம் பொருத்தமில்லை. என்று குழம்பி இருக்கும். அல்லது அவர்கள் கேட்கிற அளவு சீதனம் இவர்களாற் கொடுக்க முடியாததால் குழம்பியிருக்கும்.

"என்னப்பா! ஏழு மணியாகுது, இன்னும் மகளைக் காணல்லை! டியூட்டி முடிஞ்சு வந்திருக்க வேணுமே. ம்-..... நான் போய் பார்த்து வரட்டே? என்ருர் கந்தையா. அது... இன்டைக்கு அவளோடை வேலை பார்க்கிற பிள்ளை ஒன்றின்ரை பிள்ளைக்கு பிறந்தநாளாம். போட்டுத்தான் வருவன் கொஞ்சம் சுணங்கும் என்றவள்..." என்ற காமாட்சி "இஞ்சாருங்கோ? இவளுக்குப் பிறகு படிப்பு முடிச்ச பிள்ளை கலியாணங்கட்டி அதுகின்ரை பிள்ளைக்கு பிறந்தநாளைக்குத் தான் இண்டைக்கு பிறந்த நாளாம். தெரியுமே! எங்கடைக்குத் தான் இன்னும் கடவுள் கண் திறவாதாம். அவளுக்கு வயதும் இருவத்தெட்டாகுது. இனியும் வீட்டிலை வைச்சுக் கொண்ருக்கிறதே?"... இன்றைக்கு மட்டுமல்ல... இரண்டு மூன்று வருடமாக இதேபல்லவிதான். கந்தையரும் தரகர் வீட்டுக்கு அடிக்கடி சென்றுவந்தார். வந்ததுகளும் ச... வரவில்லை.

அன்றும் அந்த அதிகாலை வேளையிலே தரகர் தம்பரைத்தேடி, கிளாக்கர் அவர் வீட்டிற்கே வந்து விட்டார். அன்று தம்பர் கிளாக்கருக்கு ஒரு ஆலோசனையைச் சொன்ஞர். "இஞ்சைபாரும் கிளாக்கர்! மகளுக்கு முடிச்சுப் போட்டுத்தான் மகனுக்கு முடிக்க வேணுமெண்டு நில்லாதையுங்கோ, பொடியனுக்கு முதலிலை செய்துபோட்டு அவனுக்கு வாங்கிற காசிலை பொடிச்சிக்கு கொடுத்து விசயத்தை முடிப்பம்" என்ருர் தம்பர். வாயில் புகைந்து கொண்டிருந்த சுருட்டை எடுத்து சுட்டு விரலால் ஒரு தட்டுத்தட்டி சாம்பரைக் கொட்டிவிட்டு வாயில் வைத்து ஒரு தம் புகையை உள்ளே இழுத்தவராக தம்பர் யோசித்தார்.

"என்ன காணும் யோசிக்கிறீர்?" என்ற தம்பரின் குரலுக்கு "ஒன்றுமில்லை பாரும் பொடிச்சிக்கு இப்ப இருபத்தெட்டு வயது. இப்படியிருக்கேக்கை பொடியனை முதலிலை கட்டிக்குடுத்தால் அடுத்த வரியம் அவள் குழந்தையும் கையுமாக வந்து நிற்க அதைப்பார்க்க பொடிச்சிக்கு மட்டுமில்ல... எங்களாலயும்அதைச்சகிக்கேலாமல் ருக்குமே எண்டுதான் யோசிக்கிறன்..."

என்றார் கிளாக்கர்.

"அப்ப மகனுக்கு பேசி எழுத்தை முடிச்சுப்போட்டு சீதனத்தை வாங்கி மகளின்ரை கலியாணத்தை வைப்பம்'' என்றார் தரகர். 'உது நல்ல மூளைதான்' ஆனால்வாறபெண் வீட்டுக்காரன்கள் சம்மதிக்க வேணுமே!' என்றார் கிளாக்கர். 'அதைப்பற்றி நீங்கள் கவலைப்படாதையுங்கோ... ஆனால் என்னைத்தான் வடிவாய்க்கவனிக்கவேணும்'' என்றார் தம்பர். கடவுளை நேரில் கண்டவர்போல் தம்பரை ஏறஇறங்கப் பார்த்த கிளாக்கர் 'உந்தாப்பா' ...என்று ஒரு நூறு ரூபாநோட்டை சட்டைப்பையிலிருந்து தம்பருக்கு எடுத்துக் கொடுத்தார். கந்தையர் கச்சேரியில இருந்தபோது சில உதவிகள் தம்பருக்கு கிளாக்கர் செய்திருக்கிறார். அந்த நன்றிக்கடனோடு தம்பர் முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டார்.

நாய் குரைக்கும் சத்தம் கேட்டு குசினிக்குள் அலுவலாக நின்ற காமாட்சி, வீட்டுப் படலைப்பக்கம் பார்த்தாள். தம்பர் குடையை கமக்கட்டுக்குள் வைத்துக் கொண்டு மறுகையில் ஒரு பையுடன் வந்து கொண்டு இருந்தார். 'இஞ்சாருங்கோ கெதியா வாருங்கோப்பா. தம்பண்ணை வாறார்' என்றாள் காமாட்சி. கிணற்றடியில் நின்ற கமுகம்பிள்ளைகளுக்கு தண்ணீர் இறைத்துக் கொண்டு நின்ற கிளாக்கர், அந்த அளவில் அந்த வேலையை நிறுத்திவிட்டு விரைந்து வீட்டு விறாந்தைக்கு வந்தார். "வாரும், இரும்...'' என்று தம்பரை உபசரித்தார். அதற்குள் காமாட்சி கோப்பியும் கையுமாக வந்து நின்றாள். 'என்னண்ணை ஏதாச்சும் சரி வந்துதே'' என்றபடி கோப்பியை தம்பரிடம் கொடுத்தாள். கோப்பியை வாங்கி ஒரு மிடறு உள்ளே விட்ட தம்பர் "இரண்டு சம்பந்தம் இருக்குது பாருங்கோ. இரண்டும் மாற்றுச் சம்பந்தம் சம்மதமெண்டால் இரண்டுபேற்றை கலியாணத்தையும் ஒரே நாளிலை வைச்சிடலாம். இப்ப ஆடிமாதம் துவக்கம்... ஆவணியிலை வாற முதல் நாளுக்கு வைச்சிடலாம்' என்று விட்டு மிகுதிக் கோப்பியை அருந்தினார் தம்பர்.

"ஆக்களைப் பற்றி ஒன்றும் சொல்லேல்லையே'' என்றார் கிளாக்கர். 'என்ன பாருங்கோ எத்தினை வரியமாய் தொழில் செய்யிறன்; இது தெரியாதே எனக்கு? -எல்லாம் உங்களுக்கு ஏற்ற இடம்தான்' உங்களோடை கச்சேரியிலை வேலைசெய்த காத்திகேசற்றை பிள்ளையள்...மகன் எஞ்சினியர்... மகள் ஓ எல் படிச்சதாம் மற்றது தகப்பன் வாத்தியார். மகன் கப்பலுக்குப் போட்டு இப்பதான் வந்துநிக்கிறான். மகள் ஓ எல். எண்டாலும்... நல்லகாசுகுடும்பினம். எக்கச்சக்கமாய் கிடக்குது. நல்ல வீடு வளவு... புதிசா இப்பதான் கட்டினது' என்றார் புறோக்கர், -ஆனால் உங்கட மகளின்ரை உத்தியோகத்திற்கு படிப்புக் காணாது என்று நிற்பாட்டினார்.

❋

"உடன் வரவும்''... என்ற தந்தியைக் கண்ட பரணன், அவசர அவசரமாக லீவு போட்டுவிட்டு வீட்டிற்கு வந்தான். என்ன விடயம். என்று தாயிடம் கேட்டான். விடயத்தைக் கேட்டு என்ன சொல்லுவானோ என்று சிந்தித்தவளாக தயங்கித் தயங்கி விபரத்தைக் கூறினாள் அவள் சொன்னதுதான் தாமதம். "என்னம்மா? புதுக்கதை கதைக்கிறியள்? எனக்கும் அக்காவுக்கும் மாற்றுச் சம்பந்தமோ? உங்கடை பிள்ளையின்ரை கலியாணத்திற்காக இன்னொரு பெண்ணின்ரை வாழ்க்கையைக் கெடுக்கப் பார்க்கிறியளே, உங்களுக்குத் தெரிந்துதானே நானும் தாரணியும் ஒருத்தரை ஒருத்தர் விரும்பிறமெண்டு நீங்கள் தானே அண்ணன்ரை மகளைத்தான் நீ கட்ட வேணுமெண்டனியள்... இப்ப என்ன வந்தது? இருந்தாப்போலை உங்கட அண்ணன்ரை மகள் மேலைவெறுப்பு?—' என்றுபொரிந்து கொட்டினான்.

தாரணி காமாட்சியின் அண்ணன் அருணாசலத்தின் மகள். சிறு வயதிலிருந்தே தாரணியும் பரணனும் ஒருவரை ஒருவர் விரும்பியவர்கள் தாரணியின் தாய் சிறு வயதிலேயே இறந்துவிட்டாள் அருணாசலத்தாரின் குடும்ப நிலையில் தாரணியை ஓ. எல்.லுக்கு மேல் படிப்பிக்க முடியவில்லை. அருணாசலத்தாரால் தங்கள் மகளுக்குத் தேவையான சீதனத்தைக் கொடுக்க முடியாது எனத் தெரிந்தபடியால் வேறு வழியில்லாததால் கந்தையரும் காமாட்சியும் தங்கள் மகன் பரணனை வேறு யாருக்கேன் விற்று அந்தப் பணத்தில் தங்கள் மகள் ஆனந்திக்கு மாப்பிள்ளையை வாங்க தீர்மானித்தார்கள்.

பரணனின் நியாயமான கேள்விகட்கு என்னபதில்சொல்வதென்று தெரியாமல் யோசித்துக் கொண்டிருந்தாள் காமாட்சி. சிறிதுநேரம் ஒரே மௌனம். அடுத்த அறையில் இவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த ஆனந்தி அந்த மௌனத்தைக் கலைத்தாள். "மாமாவால் நாங்கள் கேக்கிறசீதனத்தைக்கொடுக்கமுடியாது. அதனால்தான் அப்பாவும் அம்மாவும் இப்படிச் செய்யினம்...' என்றாள் அவள்.

"நான் சீதனத்தை எதிர்பார்த்து தாரணியை விரும்பேல்லையே? எல்லாந் தெரிந்த நீ இப்படிக் கதைக்கிறியே அக்கா'' என்றான் பரணன். நீ சீதனம் கேக்கயில்லை. ஆனால், கொக்காவைக் கட்ட வாறவங்கள் சீதனம் கேக்கிறாங்கள்...'' என்றாள் காமாட்சி. "பனைமரத்திலை தேள் கொட்ட தென்னைமரத்திலை நெறிகட்டின மாதிரி கிடக்கு உங்கடை கதை'' என்று சொன்ன அவன், "யாரோ சீதலம் கேட்கிறான் என்றதுக்காக தாரணியை ஏன் கைவிடவேணும்? தாரணியைக்கட்ட நான் சீதனம் கேட்கவில்லையே... என்றான். இதனைக் கேட்ட ஆனந்தி மனத்துள் கோபம் பொங்கியது. தாய் காமாட்சியோ "ஓமடா உதுவுஞ் சொல்லுவாய்! உதுக்கு மேலையுஞ் சொல்லுவாய்... உன்ரை சொந்தச் சகோதரிக்கு கலியாணஞ் செய்துவைக்கிறது உனக்கு முக்கியமில்லை உன்ரை கலியாணந்தான் முக்கியம்''... என்று சொல்லி முடிக்கவும் "சகோதர பாசம் உனக்கு கொஞ்சமும் இல்லையோடா நாயே? என்றபடி வந்தார் கிளாக்கர். "அப்பிடிச் சொல்லாதையுங்கோப்பா... நாய் நன்றியுள்ள மிருகம்...'' என்று குத்தலாக கதைத்தாள் ஆனந்தி.

"அப்பா! அப்படியெல்லாம் சொல்லாதையுங்கோ. எனக்கும் சகோதர பாசம் இருக்கு, குடும்ப பாசமும் இருக்கு... ஆனால், அதுக்காக என்னை நம்பியிருக்கிற பெண்ணை ஏமாத்தவா சொல்லுறியள்?'' என்ற அவனின் கேள்விக்கு கிளாக்கர் நறுக்குத் தெறித்தாற்போல் பதில் சொன்னார்:

"தம்பி! நாங்கள் உன்னை ஏமாத்தச் சொல்லேல்லை. கொக்காவோட படிச்சதுகள் எல்லாம் கலியாணம் கட்டி குழந்தை குட்டியளோடை இருக்குதுகள். இன்னும் இரண்டுவரியம் போனால் முப்பதைத் தாண்டிவிடும். இனியும் அவளை ஒண்டிக் கட்டையா வைச்சிருக்கேதாது. இப்ப வந்த சம்பந்தக்காரங்கள் வீடுவளவோடை ஒண்டரை லட்சம் கேட்கிறாங்கள். என்னாலை உங்களைப் படிக்கவைக்க முடிஞ்சுதே தவிர பணத்தைச் சேர்க்க முடியேல்லை. இப்ப வீடுவளவும் உங்களைப் படிப்பிச்ச செலவிலை ஈட்டிலை கிடக்கு. இப்ப நீ அவங்கள் கேட்கிற காசுக்கு வழிபண்ணு. இல்லை எண்டால் அந்த மாத்துச் சம்பந்தத்திற்கு சம்மதி' என்று வெட்டொன்று துண்டிரண்டாகப் பதில் சொன்னார் கிளாக்கர்.

"என்னாலை நீங்கள் சொல்லுகிற தொகையை எப்படியும் தர முடியாது என்று தெரிந்துதானே அப்படி இதைச் சொல்லுறியள். அக்காவின்ரை கலியாணத்திலை

என்ன பிரச்சனை இருக்குதென்று தான் எனக்கு விளங்கேல்லை! அக்கா தன்னாலை தான் கெட்டதுக்கு என்னாலை என்ன செய்யமுடியும்? ஏ.எல். படிக்கேக்கை அக்காவும் மாமாவின்ரை மகன் சந்திரனும் ஒருத்தரைஒருத்தர்விரும்பினவைதானே. சந்திரனுக்கு மேற்படிப்பு கிடைக்கேல்லை- உத்தியோகம் காணாது என்றதாலை அக்கா அவனை மறந்திட்டா. ஏன் அதுக்குப் பின்னாலை நாங்கள் கொடுக்கக்கூடிய அளவு சீதனத்தோடை எத்தினை இடத்திலை பேசிவந்தது? டாக்டர்தான் வேணும்,எஞ்சினியர்தான்வேணும், எக்கவுண்டர்தான் வேணுமெண்டு அவ நிண்டா. நீங்களும் அதுதான் சரியெண்டியள்...''

இதைக் கேட்ட ஆனந்திக்கு ஒருபுறம் ஆத்திரமாகவும் மறுபுறம், அழுகையாகவும் வந்தது. தாயைக் கட்டிப்பிடித்துக்கொண்டு, 'பார்த்தியாம்மா... அவன்சொல்லுறதை. அந்தச் சங்கக்கடை மனேச்சர் சந்திரனைக் கட்டேல்லை என்று சொல்லிக் காட்டுகிறான்...'' என்று விக்கி விக்கி அழுதாள்.

மகள் அழுவதைப் பொறுக்க மாட்டாத காமாட்சி ''என்னடா கனக்கக் கதைக்கிறாய்? சகோதர பாசமில்லாத நன்றிகெட்ட நாயே!' என்று வாய்க்கு வந்தவாறு பேசிவிட்டாள் அவள்.

''என்னம்மா சொல்லுறாய்? ஆருக்கம்மா சகோதர பாசமில்லை? உன்ரை அண்ணன்ரை மகனையே ஏமாத்தென்று சொல்லுகிற உனக்கா எனக்கா அம்மா சகோதர பாசமில்லை?'' என்று அவன் குத்தலாகக் கேட்டதைக் கண்டு காமாட்சி திகைத்துப் போனாள்.

''சரி நீங்கள் சொல்லுகிறபடி சகோதரிக்காக வேறை சம்பந்தம் செய்வம். அக்காவுக்கு வாற மாப்பிள்ளை டாக்டரோ எஞ்சினியரோ அல்லது எக்கவுண்டனோ வரவேணும்... நல்லது சந்தோசம். ஆனால், நான் அதுக்காக அக்காவுக்கு சீதனம் கொடுக்க ஓ. எல். கூட படிக்காத பொம்பிளையைக் கட்டவேணுமென்றால் இது என்ன நீதி?''

பதவிக்கும் பதவிக்கும், படிப்புக்கும் படிப்புக்கும், அந்தஸ்திற்கும் அந்தஸ்திற்கும் பொருத்தமிருக்க வேணுமென்றால் அந்தப் பொருத்தம் படிச்ச பொம்பிளையளின்ரை கலியாணத்திற்கு மட்டுந்தானோ...? படிச்ச ஆம்பிளைக்கு அந்தப் பொருத்தம் தேவையில்லையோ? என்ற பரணனின் கேள்வியைக் கேட்ட கந்தையர் நெற்றியை மேலே சுருக்கி புருவத்தை அகலவிரித்து ஆச்சரியத்தோடு அவனைப் பார்த்தார். அவனது பக்க நியாயத்தைப் புரிந்து கொண்ட கிளாக்கர் கந்தையர், அவ்விடத்தைவிட்டு மெதுவாக நகர்ந்துவிட்டார்.

தாயைக் கட்டிப்பிடித்து அழுது கொண்டிருந்த ஆனந்தி, திடீரென பரணனைப் பார்த்துக் கேட்டாள்: ''படிச்ச பொம்பிளைக்கு உன்னைப் பேசேல்லை என்கிறியே; உன்ரை தாரணி, என்ன படிச்சுக் கிழிச்சவ? ஓ. எல். கூட ஒழுங்காய் பாசுபண்ணேல்லையே?'' என்றாள் ஆவேசமாக.

''உண்மைதான் அக்கா. நீ எப்ப இதைக் குத்திக் காட்டுவாய் என்று பார்த்தனான்... அவள் படிக்கேல்லை என்றதுக்காக நான் அவளைக் கைவிட நினைக்கேல்லை அக்கா. ஆனால், நீ உன்னை விடப் படிப்புக் காணாதென்றதுக்காக காதலிச்ச மச்சானையே மறந்தனிதானே!'' என்றான். இதைக் கேட்டதும், அவள் மேலும் அழத்தொடங்கிவிட்டாள். ஆற்றாமையினால் அழுதாளே ஒழிய தவறை உணர்ந்து அழுததாகத் தெரியவில்லை.

''இப்ப என்னத்துக்கு அழுகிறாய்...? சீதனப் பிரச்சனைக்கு ஆண்கள்தான் காரணம் என்று சொல்லுற பெண்கள் அந்தப் பிரச்சனையை பெருப்பிக்கிற வேலையிலை தாங்களும் ஈடுபடுகிறம் என்பதை உணருறதில்லை... உனக்குச் சீதனம் கொடுக்கவேணும் என்றதுக்காக நான் தாரணியைக் கைவிட்டால் தாரணியை யார் கரைசேர்க்கிறது.

...நானும் டாக்டர்தான். நீயும் டாக்டர்தான். நான் படிப்புக் குறைஞ்ச பெண்ணைக் கலியாணஞ் செய்யலாமென்றால் நீ ஏன் படிப்புக் குறைஞ்ச மாப்பிள்ளையைக் கலியாணஞ் செய்யக்கூடாது? சம அந்தஸ்து, சமத்துவம் என்றெல்லாம் பேசுகிற உன்னைமாதிரிப் பெண்களுக்கு ஏன் இப்படியொரு தாழ்வுச் சிக்கலோ தெரியவில்லை? என்றவன், ''நன்றிகெட்ட நான் இனியும் இஞ்சை இருக்கிறது வடிவில்லை. நான் போகிறேன் அம்மா...'' என்றுவிட்டு அவர்கள் பதிலுக்கும் காத்திராமல் தாரணியின் வீட்டை நோக்கி நடக்கிறான்.

★

## தமிழகத்தை ஆபிரிக்கரும் ஆண்டனர்

**(தமிழக வரலாறு — சில குறிப்புகள்)**

கி. மு. 30 ஆயிரம் முதல் கி. மு 16 ஆயிரத்து 500 வரை பஃறுளி ஆற்றங்கரையில் அமைந்த தென்மதுரை தமிழ்ச் சங்கம் வீரபாண்டியனால் தோற்றுவிக்கப்பட்டது.

கி. மு 16 ஆயிரத்து 500 முதல் கி மு 16 ஆயிரம் வரை ஆபிரிக்க நீக்ரொயிட் இனத்தவர் தமிழகத்தை ஆண்டனர். முக்கிய மன்னர்கள் பெயர்: உடுக்கண்ணன், மரையண்ணன்.

கி. மு. 16 ஆயிரம் முதல் 14 ஆயிரத்து 550 வரை மகேந்திரமலையில் அமைந்த தமிழ்ச்சங்கம் இறையருளினால் தோற்றுவிக்கப்பட்டது.

கி. மு. 14 ஆயிரத்து 200 முதல் 14470 வரை மணிமலையில் அமைந்த தமிழ்ச்சங்கம் செங்கோன் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது.

கி. மு. 14 ஆயிரத்து 470 தொடக்கம் 14 ஆயிரத்து 58 வரை தமிழகத்தை ஆண்டவர் பங்கோலிய மன்னர். சில பெயர்கள்—சிங்கமுகன், தாரகன், பானுகோபன்.

கி. மு. 14 ஆயிரத்து 58 ஆம் ஆண்டில் குமரவேள் மன்னன் சூரபத்மனைத் தோற்கடித்தான்.

குமரிக்கண்டத்தின் ஒரு பகுதி கடற்கோளுக்கு உட்பட்டது.

கி. மு. 14 ஆயிரத்து 58 முதல் கி.மு 14004 வரை திருச்செந்தூரில் அமைந்த தமிழ்ச்சங்கம் குமரவேள் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது.

கி. மு. 1404 முதல் 9564 வரை குமரியாற்றுத் தென்மதுரைத் தமிழ்ச் சங்க காலம்.

கி. மு. 564 இல் குமரிகண்டத்தின் பெரும் பகுதியை கடல் கொண்டது.

கி. மு. 564முதல் 7500 வரை தமிழகத்தை ராட்சத குலத்தவர் ஆண்டனர்.

கி. மு. 7500 இல் மாட்டுக்குடுமி பெருவழுதி ராட்சத குலத்தைத் தோற்கடித்தான்.

கி. மு. 6900 முதல் — 6805 வரை தமிழ் நாட்டில் மீண்டும் ராட்சதர் ஆட்சி நிலவியது.

கி. மு. 6805— 3105 இடைக்காலச்சங்கம் தாமிரவருணி நதிக்கரையில், கபாடபுரத்தில், முதலாம் முடித்திருமாற பாண்டியனால் இச்சங்கம் தோற்றுவிக்கப்பட்டது.

கி. மு. 3105—2030 மகாபாரத யுத்தகாலம் கலியுகம் பிறந்த வேளை கி மு 3102) சிறுகடல் கோள்களும் ஏற்பட்டன.

கி. மு. 1715ல் இறுதிக் கடல் கோள் லெமூரியாவின் பேரழிவு.

கி. மு. 1715 —235 மதுரைச் தமிழ்ச்சங்க காலம்.

தொகுப்பு--கண்ணன் தென்-மராட்சி

# பொறுப்பற்ற ஓர் எழுத்தாளரின்
# உணர்ச்சியற்ற பதில்கள்

கே: எழுத்தாளராகிய உங்களுக்குச் சமுதாயப் பொறுப்பு இருக்கிறதல்லவா...?

ப: ஏது பொறுப்பு? சிலர் அப்படி இருப்பதாகச் சொல்லிக் கொள்கிறார்கள்.

கே: நல்லதொரு சமுதாய மாற்றத்திற்கு எழுத்தாளர்கள் தங்கள் பங்கை ஆற்றவேண்டியதில்லையா?

ப: இல்லை. எழுதி ஒன்றும்தானாக மாறிவிடாது. சினிமா வந்த நாள்லிருந்து காதலைத்தான் படமாக்கி வருகிறோம். கதைகளிலும் அதைச் சொல்லிவருகிறோம். நாட்டினர் காதலை ஏற்றுக் கொண்டு விட்டார்களா? நமது சகோதரியை நாம் காதலிக்கவிடுவோமா? கையில் கத்தியை எடுத்துக்கொண்டு நிற்போம்.

கே: எழுத்து என்பது உங்களுக்கு வெறும்வியாபாரம்தான்...!

ப: அப்படித்தான்.

கே: தமிழைக் கொண்டு நீங்கள் பிழைப்பீர்கள். தமிழுக்குப் பெருமை சேர்க்கிற வகையில், அதன் இலக்கிய வளர்ச்சிக்கு உதவுகிற படைப்புக்களைத் தர நீங்கள் கடமைப்பட்டவர்கள் இல்லை..?

ப: இலக்கிய வளர்ச்சியென்ற ஒன்றே கிடையாது. எதுவும் நிற்கப்போவதில்லை. கடந்த எழுத்தாளர்களில் இப்போதும் நிற்கும் ஒரு எழுத்தாளரைச் சொல்லுங்களேன்...?

மு. வ. வைச் சொல்லுகிறேன்.

ப: அவரைப் படிப்பவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்துவருகிறது பாருங்கள். எவரும் நிற்கப்போவதில்லை...!

ஜெயகாந்தன் நிற்பார்...

ப: மாட்டார். காலம் எல்லாவற்றையும் அழித்துக்கொண்டு போய்விடும். நேற்று நாம் பேசிய தமிழ் இன்று இல்லை. மொழியே மாறுபடுகிறபோது இலக்கியப் படைப்புகள் எம்மாத்திரம்?

1960 - வரை உலகில் தோன்றிய விஞ்ஞானிகளின் எண்ணிக்கையை விடவும் அதற்குப் பின்னால் உள்ள விஞ்ஞானிகளின் எண்ணிக்கை அதிகம். இதெல்லாம் யாருககுத் தெரிகிறது? நாளைக்கு அறிவியல் பாடம் படிக்கவே நேரம் போதாததாக இருக்கும். இலக்கியத்தையெல்லாம் ஒதுக்கி வைத்துவிடுவார்கள். வேண்டுமானால் இன்றைய படைப்புகளை நாளை மியூசியத்தில் அடுக்கி வைக்கலாம்.

இப்போதே திருக்குறளை யார் படிக்கிறார்கள்...? சிவகசிந்தாமணி பக்கம் யார் திரும்புகிறார்கள்?

எனக்கு நான்தான் அளவு கோல். முன்னால் நாலைந்து புத்தகங்கள் இருக்கின்றன. அதில் ஒன்று சிலுக்கு படம்போட்டது. நான் அந்தப் புத்தகத்தைத்தான் முதலில் எடுப்பேன். நீங்களும் அப்படித்தான். என்னை முதல் வாசகனைக் கொண்டுதான் எழுதுகிறேன்.

கே: அப்படியென்றால் உங்கள் ஒழுக்கக் கேடுகளை எழுத்தின் மூலம் வாசகர்களுக்கும் கொஞ்சம் இறக்கிவிடுகிறீர்கள்...!

ப: ஒழுக்கம், கற்பு என்று சொல்வதெல்லாம் சும்மா. சில அலுவலங்களில் கணவன் இறந்ததும் மனைவிக்கு வேலை கொடுக்கிறார்கள். அவர்களைப் பார்க்க வேண்டும். முதல் சில மாதங்கள் சாதாரணமாக வருவார்கள். பின்னால் அவர்களைப் போல் மேக்கப் போட்டுக் கொண்டு வருகிறவர்கள் அலுவலகத்திலே வேறு எவரும் இருக்கமாட்டார்கள். 'கற்பு' என்கிற பொய்யைச் சொல்லி நாம் பெண்களை அமுத்தி வைத்திருக்கிறோம்.

கே: உங்களைப் பொறுத்தவரை தற்காலம் வாசகர்களுக்குப் பொழுதுபோக ஏதாவது எழுதினால் போதுமானது...!

ப: ஆமாம் போதுமானது...!

நன்றி: தாய்


## "என்றோ விடுதலை"

கோலங்கள் பல போட்டு வைத்து
குத்து விளக்கேற்றி அங்கே;
சுதந்திர வேட்கையின்றி
சுத்தமாய் வாழ்ந்திட்டோம்
ஆசை வானில் சிறகடித்து
ஆகாயக் கோட்டை கட்டி
அல்லும் பகலும் பாடுபட்டு
ஆயிரம் பொன் சேர்த்து வைத்தோம்
இது அன்று
அந்தோ! வந்ததே
ஆயிரம் தோட்டாக்கள்;
ஒரு நொடிப் பொழுதினில்
ஆகாயக் கோட்டை இடிந்திற்றே;
ஆறு போல் குருதியிங்கே
அடுக்கடுக்காய்ச்சவக்குழிகள்
நிரம்பி விடும் மானமெல்லாம்
நித்தம் நித்தம் தேய்கிறதே,
உரிமை உடமை எல்லாம்
ஒவ்வொன்றாய்ப் போகிறதே,
வீரத் தீ எரிந்திங்கே
வேங்கையாய்ப் பாய்கிறதே
தொடர்ந்து வரும் சித்திரவதை
தோள் நிமிரச் செய்கிறதே
சிறைக்கூடம் வழிந்தாலும்
சிந்தும் இரத்தம் குறையவில்லை
இது இன்று;
என்றோ விடுதலை
அதுவரை காத்திருப்போம்!

— சுப்பிரமணியம் பாலமுரளி
சாவகச்சேரி

# தரிசு நிலத்து அரும்பு!

★ செல்வி. சந்திரா - தியாகராஜா ★



ஈரமண்ணில் நின்றுகொண்டு மெதுவாகத் தலையசைக்கும் குளிர்ந்த பச்சைநிற வெங்காயக் கன்றுகளிடையேயிருந்து வந்த, மெல்லிய சிலிர்ப்பான காற்று என்னைக் கவர்ந்தது! தோட்டப்பாதையோரமாக வரிசைக்கு நின்று 'சல சல' வென்று ஒலியெழுப்பி ஆரவாரம் செய்யும் வாழை மரங்கள் என் நெஞ்சத்தைத் தீண்டின!

வலது பக்கம் பார்வையைத் திருப்பினேன்; தோட்டக் குடிசையைச் சுற்றி செவ்வந்திச்செடிகள்! மாலைவெயிலில் மலர்களின் மஞ்சள் நிறம் என் கண்ணோடு காதல் செய்தது! அவற்றின் மென்மையான வாசனை அந்தச் சூழலை இதமாக்கி விட்டிருந்தது.

''அக்கா, அஞ்சு மணியாச்சு; ஏறுங்கோ'' ராசன் கரியர் பூட்டிய சைக்கிளை வைத்துக்கொண்டு அவசரப்படுத்தினான்.

''இதிலை வந்துநிண்டு.... இந்தத் தோட்டத்தை ஒருக்கால் வடிவாய் பாரடா ... அசையவிடாமல் இழுக்கிறமாதிரி ஒருஅழகு'' நான் ஆச்சரியப்பட்டேன்.

''கால் மணித்தியாலமாய் உதிலேயே நிண்டு, ரசித்துப் போட்டீங்களெல்லோ ... சரி; இனி வாங்கோ'' — அவன் தனக்கே உரிய நகைச்சுவைப் பாணியில் என் மனதைச் சீண்டினான். நான் இங்கு தங்கி நின்ற இந்த இரண்டு நாட்களில் அவன் எப்படிச் சீண்டிய பொழுதிலும் எனக்குக் கோபம் வரவேயில்லை! அப்படியொரு புதுமையான ரசனை எனக்கு அவனிடம் இருந்தது! அரும்பு மீசை ... துடிப்பு நிறைந்த மகிழ்ச்சியான முகம் ... இளமையிலேயே முறுக்கேறிய உடல் ... ஆழ்ந்து நோக்கினால் கண்ணுக்குள்ளே இனம் தெரியாத மெல்லிய சோகம் நன்றாகச் சிரித்தான்; சிரிக்கவும் வைத்தான்! இரண்டு நாட்களுக்கு முன்னர் நானும் அம்மாவும் யாழநகரிலிருந்து என் சிறிய தயாரின் இந்தத் தோட்டக் குடிசைக்கு வந்த பொழுது, வாழைப் பாத்திக்குத் தண்ணீர் மாறிக்கொண்டு நின்றிருந்த இவன் தான் 'அம்மா... பெரியம்மாவும் அக்காவும் வருகினம்...' என்று ஆரவாரம் செய்துகொண்டு எங்களை வரவேற்றான்; ஓடிவந்து எங்கள் கைகளில் தூங்கிய 'பாய்க்'குகளை வாங்கிக்கொண்டு மகிழ்ச்சியோடு வீட்டிற்குள் ஓடினான்!

'ராசன்...டேய்... வாய்க்கால் உடைக்குதடா; ஓடடா... பாத்தியை மாத்திவிடு' என்று வெங்காயக் கன்றுகளுக்கு மத்தியில் நின்றுகொண்டு சத்தமிட்ட சித்தப்பாவின் கட்டளையை நிறைவேற்ற ஓடியதும் இவன் தான்!

ராசன்... இங்கை ஓடியாடா... பூசணியெல்லாம் மாடு உளக்குது; பிடிச்சுக்கட்டு' என்று கிணற்றடியில் நின்று சட்டிபானை விளக்கிக்கொண்டிருந்த சித்தியின் குரலுக்குக் குடல் தெறிக்க ஓடியதும் இவன் தான்!

'மழை பெய்யப்போகுது... மிளகாய் வத்தலை அள்ளிக் கட்டடா' என்று அவசரப்படுத்திய பாட்டியின் ஆசையை நிறைவேற்றியதும் இவன் தான்!

'ஐயையோ... நேரம் போச்சுது... ஜானுவைக் கொண்டுபோய் கெதியாய்ப் பள்ளிக்கூடத்திலை விட்டிட்டுவாடா' என்று ஒற்றைக்காலில் நின்ற ராஜி அக்காவின் விருப்பத்தை நிறைவேற்றியதும் இவனே தான்!

'இங்கு எல்லாமே இவன்தான்' என்று நான் இங்கு தங்கிநின்ற இந்த இரண்டு நாட்களில் நன்கு புரிந்துகொண்டு விட்டதனாலோ என்னவோ, இனம் புரியாதவொரு பாசம் அவனில் எனக்கிருந்ததை மறுக்க முடியவில்லை!

''இங்கை... பெரியம்மாவும் வந்திட்டா; அக்கா இன்னுமென்ன நிக்கிறியள்?... மினக்கெடாமல் ஏறுங்கோ' -அவன் மீண்டும் அவசரப்படுத்தினான். நான் 'பாய்க்'ஐ 'சைக்கிளில்' கொழுவி விட்டுப், பின்னால் 'கரியரி'ல் ஏறிக்கொண்டேன். அம்மா கொஞ்சம் பயந்து, 'சைக்கிள் பாரில் ஏறி அமர்ந்தபொழுது சைக்கிள் மெல்ல

அசைந்ததை, இவன் ஜாடைகாட்டிச் சிரித்தான். நாம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்ட பொழுது மாலை 5.30 மணியாகிவிட்டிருந்தது!

தோட்டப் பாதையால் 'சைக்கிள்' மெல்ல நகரத் தொடங்கியது. குனிந்து அசையும் வாழை இலைகள் என்னை தழுவி விலகின!

'ராசன்...'

'என்னக்கா?'

'இதெல்லாம் புளிவாழை தானே?'

**'இல்லை... கப்பலும் புளியும் கலந்து நிக்குது'**

'எல்லாம் ஒரே மாதிரித்தானே இருக்குது! எப்பிடி வித்தியாசம் கண்டுபிடிக்கிறது?'

'அங்கை பாருங்கோ... இதிலையிருந்து ஆறுவதாய் நிக்கிற வாழை... கப்பல்வாழை... அந்தவாழை இலையின்ரை கீழ்ப்புறத் தண்டைப் பாருங்கோ; வெள்ளைநிறமாய் இருக்கும். புளிவாழையெண்டால் இலைத்தண்டு சிவப்பாய்த் தெரியும்' ராசன் வடிவாக விளங்கப்படுத்தினன். அவன் குறிப்பிட்ட வாழையை 'சைக்கிள்' அண்மித்தபொழுது, அந்தவாழை இலையின் கீழ்ப்புற நடுத்தண்டுகளை நான் நன்கு அவதானித்து, அவனின் விளக்கத்தில் திருப்திப்பட்டுக் கொண்டேன்.

'சைக்கிள்' தோட்டவெல்லையைக் கடந்து ஒழுங்கைக்கு ஏறியது!

"என்னடா இது? நச்சடப்பன் பாதைகள் எல்லாம் இப்பிடிப் பள்ளமும் திட்டியும் தானே?" -'சைக்கிள்' பள்ளங்களில் விழுந்தெழும்பும் பொழுது நான் கேட்டேன்

'ஏனக்கா; உங்கட யாழ்ப்பாணப் பக்கம் இப்பிடியொரு பாதையுமில்லையோ?''

அவனின் அந்தச் சிரமமான கேள்விக்குப் பதில் சொல்லத் தைரியமில்லாத தால் ...

"ஒருகால் யாழ்ப்பாணப்பக்கம் நீயேவந்து பாரன்" என்றேன் சிரித்தவாறே.

"வரத்தான் எனக்கும் சரியான ஆசையக்கா!... ஆனல்; என்ரை அம்மா என்னை இங்கை கொண்டு வந்து வேலைக்கு விடேக்கை என்ரை பிறந்த தேதி, பிறந்த இடம், அப்பாவின்ரை பெயர்... ஒண்டையும் சொல்லாமல் போயிட்டா அதால 'அடையாள அட்டை' எடுக்கேலாமல் இருக்குது! சும்மா வந்தனெண்டால் ஆனையிறவில வைச்சு அமத்திப் போடுவாங்கள் ... அதுதான் யோசிக்கிறன்"

"ஏண்டா; கொம்மாவிட்டை ஒருக்கால் போய், வடிவாய் கேட்கிறது தானே "

"அம்மா இருக்கிற இடம் தெரிஞ்சிருந்தால்... நான் ஆடிக்கலவரத்துக்கு முன்னமே போய்ப்பார்த்திருப்பன்... 'பஸ்'சுக்குள்ளை வைச்சு வெட்டிப்போட்ட பிறகுதான் 'அம்மா' எண்டவ இன்ன இடத்தில இருந்திருக்கிறுவெண்டு தெரியும்...' அவனின் குரல் திடீரென்று தொய்ந்து போனது! எதிர்பாராமல் ஏற்பட்டுவிட்ட மெல்லிய அதிர்ச்சியிலிருந்து நான் மீண்டவாறே,

'ராசன்... உப்பிடியான பிரச்சினை உள்ளாக்கள் 'அடையாள அட்டை' எடுக்கிறத்துக்கு ஏதோ ஒரு வழி இருக்கத்தானே வேணும்... பொறு... நான் ஆரையும் விசாரிச்சுப் பார்க்கிறன்...' நான் அவனின் சோகத்தை மாற்ற முயற்சித்தேன்.

'உண்மையாகத்தான் சொல்லுறியளோ?'

'பின்னை... சும்மாவே சொல்லுறன்?'

அவன் மீண்டும் உசார் நிலைக்கு வந்துவிட்டது போல் எனக்குப் பட்டது.

'சைக்கிள்,' ஒழுங்கையைக் கடந்து முல்லைத்தீவு மாங்குளம் பிரதானவீதியில் ஏறி, ஐந்துமைல் தொலைவிலிருக்கும் 'மாங்குளம் ரவுணை' நோக்கி விரையத் தொடங்கியது அங்கு தான் சித்தியின் ஒருமகள் திருமணம் செய்து, புதுவீட்டில் குடியிருக்கிருள். அங்கு போய்த் தங்கிநின்று, அதிகாலை யாழ்ப்பாண 'டஸ்' எடுப்பது சுலபம் என்பதனுல்தான், பொழுது இருட்டிக்கொண்டு வந்துவிட்ட போதிலும் எங்கள் பயணம் தொடர்ந்தது.

'சைக்கிள்' இப்போது 'ஒலுமடு பேராத்துப்பாலத்தை' அண்மித்துக் கொண்டிருந்தது.

'பாலம் வருகுது... கொஞ்சத்தூரம் இறங்கி நடந்துதான் போகவேணும்' என்றுன் ராசன்.

'ஏண்டா; பாலம் உடைஞ்சு கிடைக்குதே?' அம்மா கேட்டா.

'இல்லை மரப்பாலம் தானே; மேடும் பள்ளமுமாய் கிடக்குது. அதுக்குள்ளை 'சைக்கிள்' ஓட ஏலாது' என்றுன் அவன்.

'சைக்கிள்' வேகம் குறைந்து, மெதுவாகப் பாலத்தை நெருங்கிக் கொண்டிருந்தது.

'இங்கையக்கா...! யானையின்ரை லத்திக் கும்பம் கிடக்குது; நேற்றிரவு இவிடத்திலை யானைவந்து போயிருக்கு' என்றவாறே வீதியின் இடது ஓரமாகக் கிடந்த யானைலத்தியை அவன் சுட்டிக் காட்டினன். மெல்லிய பச்சைநிறத்தில் முடியில்லாத தேங்காய் மாதிரி உருண்டை உருண்டையாகக் காய்ந்து கிடந்த லத்திக் கும்பங்களை அவதானித்த நான், தலையை நிமிர்த்திய போது நெஞ்சுக்குள் 'பகீர்' என்றது- கறுப்பாக, பிரமாண்டமாக...!

'டேய் ராசன்... யானையடா!... அவசரமாகக் கத்தினேன்.

'எங்கை ?' என்றுன் அவன் மெல்லிய பதற்றத்துடன்-

'அங்கையடா அங்கைபார் ' வீதியின் இடது புறக்காட்டிற்குள், வீதிக்கு மிகவும் அண்மையாக, கரிய பெரிய யானையொன்று தனித்து நின்றிருந்ததைச் சுட்டிக்காட்டினேன்.

சைக்கிள், பாலத்தை அண்மித்து விட்டதால் 'சைக்கிளிலிருந்து மூவரும் இறங்கி. அச்சத்துடன் அடிக்கடி திரும்பித் திரும்பி யானையை பார்த்துக் கொண்டு அவசரமாக பாலத்தால் நடக்கத்தொடங்கினேம்.

‘தனியனாய் வந்திருக்குது!? போன வருசமும் இந்தப் பாலத்தடியில தான் ரெண்டு பேரை யானை அடிச்சது...’ என்று முணு முணுத்தவாறே ராசன் நடையை மேலும் துரிதப்படுத்தினான். பயத்தினால் என் கைகளும் கால்களும் உதறல் எடுத்தன! நான் மெதுவாக ஓடத்தொடங்கினேன். சற்றுத்தள்ளி, எம் மோடு சமமாக யானையும் வந்து கொண்டிருந்தது.

சுமார் பதினைந்து யார் நீளமான அந்தப்பாலம் கடந்ததும் மீண்டும் மூவரும் ‘சைக்கிளில்’ ஏறிக்கொண்டோம். ‘சைக்கிள் ’நகரத்தொடங்கியதும் ராசன் புதுத்தெம்பு வந்தவனாக,

யானை இப்போ, பத்துயார் இடை வெளியில் நமக்குப் பின்னால், நாம் சென்று கொண்டிருந்த பாதையை அண்மித்து, வீதிக்கு ஏறியது.

‘‘ஐயையோ ... ‘ரோட்டுக்கு ஏறிட்டுதடா; ‘சைக்கிளை’ ஸ்பீட்டாய் ஓடு...’’ நான் என்னை மறந்து கத்தினேன்.

‘சும்மா பயப்படாதேங்கோ அக்கா. அது எதிர்க் காட்டுக்குள்ளை இறங்கிப் போயிடும்’ என்றான்- அவன் மெதுவாகத் திரும்பிப் பார்த்தவாறே.

யானை இப்போ, நம்மை நோக்கி வீதிவழியாக மெல்ல நடக்கத் தொடங்கியது!

‘ஐயோ... எங்களிட்டைத்தான் அது வருது; ஐயோ ராசன் நாங்கள் இறங்கி ஓடுவமடா’ என்று கத்தினேன். இப்போ ‘சைக்கிள்’ ஆட்டம் கண்டது. அவனுக்கும் வியர்த்துக் கொட்டத் தொடங்கியதை, அவனது முதுகுப்புறம் எனக்கு உறுதிப்படுத்தியது. காற்றுடனும் பயத்துடனும் போராடமுடியாமல் ‘சைக்கிள்’ வளைந்து, திரும்பிச் சரிந்தது! நான் ‘சைக்கிளிலிருந்து குதித்து ஓடத் தொடங்கிவிட்டேன். அவன் ‘சைக்கிளை’ தள்ளிக்கொண்டு ஓடத் தொடங்கினான். அம்மா கடைசியாக ஓடிவந்து கொண்டிருந்தா. மூவர் முகங்களிலும் மரணக்களை!

யானை எதிர்க்காட்டிற்குள் இறங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது. இப்போ தான் மூவர் முகங்களிலும் பழைய களை பிறந்தது! ‘அப்பாடா...!’ என்றவாறே மூவரும் நின்று ஒன்று சேர்ந்துகொண்டோம்‘ மூச்சு வாங்கியது! பயம் மாறியபோது இனம்புரியாத சிரிப்பு வந்தது. விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டோம்.

பழையபடி ‘சைக்கிள்’ மூவரையும் சுமந்து கொண்டு ‘ரவுணை’ நோக்கி விரைந்துகொண்டிருந்தது.

‘அக்கா, ஒரு பொம்பிளை இவ்வளவு வேகமாய் ஓடுறதை இண்டைக்குத்தான் நான் கண்டனான்’

சும்மாயிரடா; எனக்கு இப்பவும் அந்த ‘ஷொக்’ போகேல்லை’ -நான் சிரித்தேன்.

‘சைக்கிள்’, மாங்குளம் ‘ரவுணை’க் கடந்து வீட்டினுள் நுழைந்து, முற்றத்தில் கிறீச்சிட்டு நின்றது.

வீட்டினுள் இருந்தவர்கள் வெளியில் ஓடிவந்து மகிழ்ச்சியுடன் எம்மை வரவேற்றனர். நானும் அம்மாவும் உள்ளே நுழைந்ததும் நுழையாததுமாய் யானைக் கதையை ஆரம்பித்தோம்.

ராசன் வெளி முற்றத்திலேயே ‘சைக்கி’ளுடன் நின்றிருந்தான்.

‘ராசன்... நீயேண்டா நிக்கிறாய்? நல்லாய் இருண்டு போச்சு! அங்கை அம்மா காத்துக்கொண்டிருப்பா... நீ கெதியாப்ப் போய்ச்சேர்...’ -சித்தியின் மகள், வீட்டுவாசலில் நின்றவாறே வெளியில் எட்டிப் பார்த்துக் குரல் கொடுத்தாள்.

‘சரி...’ அவன் தலையசைத்துவிட்டு ‘கேற்’ வாயிலை நோக்கி நடந்து, பின் தயங்கி நிற்பது, வாசல் கதிரையில் அமர்ந்திருந்த எனக்கு நன்கு தெரிந்தது.

அவன் திரும்பி, எதையோ எதிர்பார்ப்பதுபோல் என்னைப் பார்த்தான். நான் மெல்ல எழுந்து, முற்றத்தில் இறங்கி, அவனை அண்மித்தேன்.

‘ராசன்... என்ன யோசிக்கிறாய்?’ மெதுவாக ஆதரவாகக் கேட்டேன்.

‘ஒண்டுமில்லையக்கா... நீங்கள்... போயிடுவியள் தானே

‘‘ஓம்... அதுக்கென்னடா... இப்ப...?’

‘இல்லையக்கா... நீங்கள் போகேக்கை நான் வழியனுப்ப நிக்கமாட்டன். அதுதான்...

‘அதுக்கென்னடா... இப்பவந்து வழியனுப்பிவைச்சிருக்கிறாய் தானே?’- நான் சிரித்துச் சமாளித்தவாறே கேட்டேன்.

‘சரியக்கா... சுகமாய் போயிட்டு வாங்கோ; கடிதம் போடுவியள்தானே?’

நான் ஆச்சரியமாக அவனைப் பார்த்தேன்.

‘நான் சாகிறத்துக்கிடையிலை ஒருக்காலாவது அந்தப்பக்கம் வருவன்தானே’- அவனது வார்த்தையில் தெரிந்த உறுதி, பார்வையிலும் தெறித்ததை, அரை குறைஒளியில் அவதானிக்க முடிந்தது.

‘அவனின் ‘அடையாள அட்டை’ பற்றி அவசியம் விசாரிக்கவேணும். நான் உள்ளூரத் தீர்க்கமாக நினைத்துக்கொண்டபோது, ‘ராசன்... இன்னும் போகேல்லையோ?’ என்ற குரல் வீட்டுக்குள்ளிருந்து வந்து நம் செவிப்பறைகளில் அறைந்தது!

‘போயிட்டு வாறனக்கா’ அவன் அவசரமாக விடைபெற்றுக்கொண்டு ‘சைக்கிளில்’ ஏறியபோது, இடுப்பிலிருந்து கற்றையாக நழுவிய கடுதாசிச்சுருளை, சட்டென்று பற்றியவன் மீண்டும் உள்ளே தள்ளிச் சொருகிவிட்டுக்கொண்டான்.

‘என்னடா... அது?’

‘கடுதாசிகள்...’ -அவன் மெலிதாய் புன்னகைத்தான்.

‘சிவப்பு அச்சாய் தெரியுது...?’

நாளைக்கு ‘பஸ்’ ஏறேக்கை... சந்திச்சுவரிலை வடிவாப்‘பாப்பியள் தானே ’

சட்டென்று அதிர்ந்து போன நான்,

‘டேய்... என்ன சொல்லுறாய்?!’- அவசரமாகக். கேட்டேன்.

‘பிளீஸ்... அவையளுக்குச் சத்தம் போடாதேங்கோ...நான் போயிற்றுவாறன்’- மெலிதாகக் கூறியவன் தலையை அசைத்துவிட்டு ‘சைக்கிளை’த் திருப்பினான்

வாய் திறக்குமுதல் ‘சைக்கிள்’ வீதியில் ஏறிக் கொண்டிருந்தது! அவனின் ‘ஷேட்’ வியர்வையில் ஒட்டிப்போயிந்தது தலைமுடி கலைந்து பறந்துகொண்டிருந்தது!

‘சைக்கிளி’ன் பின்சிவப்பு ‘லைற்’ வேகமாக நகர்ந்துகொண்டிருக்க, நான் ‘கேற்’வாயிலில் நின்றவாறே உள்ளே திரும்பிப்பார்த்தேன். அவர்கள் சாதாரணமாகக் கதைத்துக் கொண்டிருந்தார்கள்!

# தேவை ஒரு 'முடிவு !

என்மனசின் அடியில்
குழிதோண்டிப்
படுத்திருக்கிறது
உன்பொன்முகம்...

இன்று
உன்னைக் கண்டதனுல்
மெல்ல மேலே
எட்டிப்பார்க்கிறது

பூவின் புத்திரியே!
நான்
உன்னிடம்
இதயத்தைத் தானேகேட்டேன்
நீ ஏன்
முட்களை பொதிகட்டி
அனுப்புகிருய்?

வானத்தின் உச்சியில்
மேகமாக
மிதக்க வேண்டியவன்
நான்
பூமிக்கு அடியில்
புதைந்துகிடக்கிறேன்!

உன் உறுதியான
ஓசைகள்
உதிர்ந்து விழாததனுல்
நான்
தனிமையில்
கட்டுண்டு கிடக்கிறேன்!

நான்
என் தோள்களைத்
துடைத்துவைத்திருப்பது
உன் மாலையை
அணிந்துகொவதற்காகவல்ல;
உன் பார்வைகளை
மூட்டைகட்டிச் சுமப்பதற்கே

என் எழுத்துக்கள்
ஆயிரமாயிரம்
இரும்புத்துண்டுகளையே
இளகச் செய்திருக்கின்றன
ஆனுல்
அவையால்
ஒரு பூவை
புரியவைக்க முடியவில்லையே!
நீ! எனக்கு
முடிசூட்ட வேண்டாம்!
உன் ...
முடிவைச் சொல்!

— வவுனியா திலீபன்




## பெண்களைப் பற்றி ...

★ அழகு பெண்களுக்கு பெருமை தருகிறது, கற்பு அவர்களுக்கு மதிப்பைத் தருகிறது, அடக்கம் அவர்களை செல்லமாக காட்டுகிறது.

யூர்பைடிஸ்

★ அன்பு தொடங்குவதும் முடிவதும் பெண்மையில் தான்.

பிரஷினில்

★ மல்லிகை தன் மணத்தால் உயர்வதுபோல் பெண்கள் அவர்கள் கொள்ளும் நாணத்தால் உயர்வு பெறுவர்.

★ பெண்கள் காதலிப்பதைவிட அவர்கள் காதலிக்கப்படுவதே பெண்மைக்கு பெருமை.

★ பெண்ணிடம் உள்ள மிகப் பெரிய பலவீனம் அன்பு கொண்டவர்க்கு எத்தியாகமும் செய்யத் துணிவதே!

★ பெண்மையின் உடம்பு மென்மையானது, உள்ளம் பலவீனமானது!

★ நல்ல பெண்ணின் காலடியில் போலி சொந்தங்கள் சாகின்றன.

★ பெண்ணின் அன்பு தாடியைப் போன்றது. வெட்ட வெட்ட முன்னிலும் அதிகமாய் வளரும்.

★ ஒரு பெண்ணின் இதயம் கருணையின் கோயிலாக மாறும்போது அதற்கு இணையானது இந்த அகிலத்தில் இல்லை.

★ ஆண்களைவிடப் பெண்கள் அதிகமாக நேசிக்கிருர்கள் என்பது தீர்மானிக்கப்படவில்லை. என்ருலும் ஆண்களைவிட பெண்கள் நல்லவிதமாக நேசிக்கிருர்கள் என்பதில் கருத்துவேற்றுமை இல்லை.

★ ஒழுக்கமுள்ள பெண் ஒரு கணவனுக்கு மகுடம்போன்றவள்.

—பைபிள்

★ கற்களால் கட்டப்பட்ட கட்டடம் ஒரு கல்விக்கூடம் ஆக மாட்டாது. ஒரு அன்னையின் மென்மையான இருதயமே சிறந்த கல்விக்கூடம்.


— பீச்சர்

★ காதல் என்ற படகைக் கல்யாணம் என்ற கடலில் கணவன் என்னும் படகோட்டி எவ்வளவு சாமர்த்தியமாக ஓட்டினுலும் மனைவி என்ற சூருவளி அலைக்கழித்துக்கொண்டே இருக்கும்

— 'சுதே'

★ ஒருபெண்ணைக் கட்டி மணந்து கொள்வது பேரரசைக் கட்டியாள்வதைவிட கடினமானது. அதனுல் தான் பதினுன்கு வயதில் நாடு ஆண்டவர்கள் இருந்தும் பதினெட்டு வயதிற்கு மேல்தான் மணம் செய்துகொள்ள வேண்டும் என்று விதி செய்திருக்கிருர்கள்.

—ஜே. எ. பெண்ட்



சிறுவன்: என்ன அப்பு இந்த விடிய ''ஹெலி'' போகுது என்ன விஷயம்.

அப்பு: தேத்தண்ணி வைக்க நெருப்பட்டி இல்லையாக்கும் அதுதான் மற்றக் 'காம்பு''க்கு போருன்.

நா. முகுந்தன்

★ சிறுகதை

# உடைந்த உள்ளங்கள்

● தயா - பொன்னையா

மூன்றும் பாட மணி ஒலித்ததும் வழமைபோல எட்டாம் வகுப்பு அறையினுள் பிரவேசித்தாள் இளம் ஆசிரியை நீரஜா. வகுப்பறைச் சுவருக்கப்பால் கூடி நின்று தம்மை மறந்து ஏதோ பார்த்துக்கொண்டிருந்த மாணவ மாணவியரில் ஒருத்தி தற்செயலாகத் திரும்பியபோது ஆசிரியையின் வருகையைக் கண்டு ஏனையோருக்கும் அதனை உணர்த்த அனைவரும் ஒருவித பயத்துடன் ஓடிவந்து தத்தமது ஆசனங்களுக்கு அருகே நின்று ஆசிரியைக்கு வந்தனந் தெரிவித்தனர். நீரஜாவின் முகத்தில் ஒருவித கேள்விக்குறி எழுந்தபோதும் அவள் அதனைப் படரவிடாது பதிலுக்குத் தானும் வந்தனம் தெரிவித்தவாறே தன் ஆசனத்தில் அமர்ந்து கொண்டு வகுப்பறையை ஒருமுறை நோட்டமிட்டாள்.

வழக்கமாக அவளது தமிழ்ப் பாட நேரத்தில் கலகலப்புடன் காணப்படும் அவ்வகுப்பறை அன்று சோபை இழந்திருந்தது. எதற்கும் 'ரீச்சர், ரீச்சர்' என்று முண்டியடித்துக் கொண்டு கேள்விகள் பல கேட்கும் மாணவ தலைவன் திலீப் கூட ஏதோ பறிகொடுத்தவன் போல அமர்ந்திருந்தான். ஆசிரியை தம்மைக் கவனிப்பதை உணர்ந்த மாணவர்கள், தம்மைத் தாமே சுதாகரித்துக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தபோதும் கண்டிப்புடன் கூடவே அவர்களை உள்ளன்போடு நடத்தும் ஆசிரியை நீரஜா அன்று அம்மாணவரில் ஏதோ வித்தியாசத்தைக் கண்டாள்.

''சரி, நாங்கள் நேற்றுப் படித்த 'தேர் திரும்பியது' என்ற பாடத்திற்கான கேள்விகளைப் பார்ப்போம்.' மாணவரை வகுப்பறைப் பக்கம் கவர நினைத்துக் குரல் கொடுத்தாள் நீரஜா. ஒவ்வொரு மாணவரது கையிலும் புத்தகம் இருந்ததே தவிர எதுவித சத்தமுமே அவ்வகுப்பறையில் எழவில்லை. மற்றைய நாட்களிலென்றால் இதற்குள் எத்தனையே குரல்கள் அவள் காதுகளை எட்டியிருக்கும். அத்தனை குரலுக்குரியவர்களுக்கும் பதில் கொடுத்துப் பாடத்தை ஆரம்பிக்க ஐந்து நிமிடங்களாவது எடுக்கும். ஆனால் அன்று...

'மாணவருக்காகப் பாடமே அன்றிப் பாடத்துக்காக மாணவர்கள் அல்ல' என்பதை என்றுமே மனதில் கொள்பவள் நீரஜா. அதனால் அப்பாடசாலையிலுள்ள மாணவர்கள் முதல் அதிபர், சக ஆசிரியர்கள் வரை யாவருமே அவளிடத்தில் தனிமதிப்பு வைத்திருந்தனர். அன்றைய வகுப்பின் சூழ்நிலையில் பாடத்தைத் தொடரவிரும்பாத நீரஜா. தனது கையிலிருந்த பயிற்சிப் புத்தகத்தை மேசைமீது வைத்தவாறு,


'சரி, நான் வரும்போது ஏதோ வேலிக்கு மேலால் பார்த்துக்கொண்டிருந்தீர்களே, என்ன? என்ன விசயம்?' என்றாள், அனைவரையும் நோக்கியவாறு.

ஈனமான பல குரல்கள் சேர்ந்து ஒலித்தன, 'ரீச்சர், எங்கட சங்க கட்டிடத்துக்குள்ளை அகதிகள் வந்திருக்கினம்.

'ஆ, அப்படியெல்லாம் சொல்லக்கூடாது. அவையளும் எங்களைப் போல ஆட்கள்தானே. சில பிரச்சினையளாலை தங்கட இடங்களை விட்டு வந்திருக்கினம். பாவம், அவையளுக்கு அந்தப்பேர் வைக்கக்கூடாது' இடைமறித்தாள் நீரஜா. 'அகதிகள்' என்ற சொல்லை ஜீரணிக்க அவளுக்குக் கஷ்டமாக இருந்தது. தொடர்ந்து ஒருவினாடி அங்கு மௌனம் நிலவியது.

நீரஜாவே பேசத்தொடங்கினாள். 'சரி, அவையள் சங்கக் கட்டிடத்துக்குப் பின்னாலை இப்ப இரண்டு கிழமையாய்த் தானே இருக்கினம். இண்டைக்கு மட்டும் என்ன?', 'இல்லை ரீச்சர், அங்கையிருந்த ஒருகிழவன் செத்துப்போச்சு' என்றான் ஒரு மாணவன் எழுந்து நின்றவாறு. திடுக்கிட்ட நீரஜா 'ஏன்? என்ன நடந்தது?' என்றாள்.

'ரீச்சர், அந்த அப்பு வெளவால் துரத்த மேசேலை ஏறிக் கீழே விழுந்து மயங்கிச் செத்துப்போனார்' என்றாள் இன்னோர் மாணவி. அவ்வகுப்பறையின் அன்றைய நிலைக்கான காரணத்தைப் புரிந்துகொண்ட நீரஜாவின் மனதில் இனந்தெரியாத ஒருவித கவலை குடி



கொண்டது. முன்பின் ஒருபோதும் அறிமுகமில்லாத ஒரு வயோதிபனின் இறப்பு, இவ்விளசுகளின் மனதில் ஏற்படுத்திய தாக்கம் நீரஜாவின் மனதைத் தொட்டது. அவள் எதனையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் 'வயது வந்தவர்கள் இறப்பது வழக்கந்தானே' என அவர்களைச் சாந்தப்படுத்தும் நோக்குடன் கூறிவிட்டு 'நேற்றைய பாடத்திலுள்ள கேள்விகளுக்கான விடைகளை அனைவரும் எழுதுங்கள்' என்று பணித்து அமர்ந்தாள்.

மாணவர்கள் தமது அப்பியாசக் கொப்பிகளில் எழுதிக் கொண்டிருந்தார்கள் வேலியோரமாக, பாடசாலைக் கட்டிடத்தின் ஒருமூலையில் அமைந்திருந்த அவ்

வகுப்பறையில் அமர்ந்து கொண்டு சங்கக் கட்டடத்தைப் பார்க்கக் கூடியதாக இருந்தது. நீரஜா சற்றே திரும்பி அங்கு பார்த்த போது அங்கு இறுதிக்கிரியைகளுக்கான ஏற்பாடுகள் அவ்வூர்க் கிராமசேவையாளரின் தலைமையில் நடந்து கொண்டிருப்பதை அவளால் அவதானிக்க முடிந்தது.

சின்னஞ்சிறிய ஒரு அறையையும் அதற்குப் பின்புறமாகத் திறந்த ஒரு விருந்தையையும் மட்டுமே கொண்டு விளங்கியது சங்கக் கட்டடம். அறை பூட்டப்பட்ட நிலையில் அந்தச் சிறிய விருந்தையில் மட்டும் குழந்தைகள், பெண்கள், முதியோர், உட்பட சுமார் நாற்பதுபேர் வரையில் இருவாரங்களைக் கழித்தது நீரஜாவுக்குத் தெரிந்ததுதான். எங்கெங்கோ இருந்து வளர்ந்து, வாழ்ந்து வந்தவர்கள் ஒரே குடும்ப அங்கத்தவர்கள் போல் சமைப்பதும், உண்பதும், தூங்குவதும் அவள் இரு வாரங்களாகக் கண்ட காட்சிகள்.

கிராம சேவையாளர் மூலம் அவர்களுக்கு வழங்கப்படும் சிறு தொகைப் பணமும், உணவுப் பொருட்களும் ஒரு சில நாட்களுக்கே போதுமானதாக இருந்தது. வயதுவந்தஇளம் பெண்களும், ஆண்களும் அவ்வூர் மக்களின் வயல்களில் வேலைசெய்து கிடைத்ததைக் கொண்டு மிகுதிநாட்களை ஓட்டிவந்தனர். நெஞ்சத்தைத் தொடும் இக்காட்சிகள் இருவாரங்களாக அவள் மனதைக் குடைந்து கொண்டிருந்தன.

ஊராரின் உதவியுடன் ஒரு சிறிய வாங்கு ஒன்றில் அந்த வயோதிபனின் பிணம் மூடப்பட்டிருப்பது இப்போது தெளிவாகத் தெரிந்தது. இடையிடையே தன் வகுப்பறையையும் கவனிக்க அவள் தவறவில்லை. தம்மை ஆசிரியை கவனிப்பதை உணர்ந்து மாணவர்கள் கொப்பிகளில் அவசரமாக எழுதிக் கொண்டிருந்தனர்.

எங்கோ பிறந்து, எங்கோ வளர்ந்து இரண்டே இரண்டு கிழமைகள் மாத்திரம் ஒன்றுகப் பழகிய அந்த ஜீவன்கள் அனைத்தும் பிரிந்த ஓர் ஜீவனுக்காக எழுப்பும் அழுகை ஒலி இடையிடையே கேட்கும் போது பாடசாலை ஆரவாரங்களை அடங்கி நிசப்தத்தில் ஆழ்ந்தது.

அன்றைய அந்தச் சோக நிகழ்ச்சிக்கும், தான் முதல்நாள் படிப்பித்த அந்தப் பாடத்திற்குமிடையில் ஓர் ஒப்பீடு செய்து பார்த்தது நீரஜாவின் மனம். எத்தனை வேறுபாடுகள் எத்தனை பெரிய இடைவெளிகள்? ஆம் கபிலவஸ்துநகரின் இளவரசர் சித்தார்த்தர் நீபவனி வரும்போது கண்ட மூன்று காட்சிகள் அவர் மனதைத்தொட, அவர் இல்லறத்தையே துறக்கிறூர். தேரில் செல்லும் போது அவர்கண்ட பிச்சைக்காரனும், பிணியாளனும். பிணமும் சித்தார்த்தர் நெஞ்சை நெகிழவைக்கின்றன, இதனுல் மனம் மாறிய சித்தார்த்தர் துறவுபூண்டு, ஞானம் பெற்று, புத்தராகி அன்பைப் போதித்தார்.

அன்பைப் போதிக்கும் புத்தரது சமயவழி நிற்போரே இன்றைய பிச்சைக்காரனுக்கும், பிணியாளனுக்கும், பிணத்துக்கும் காரணர் ஆகின்றபோது... காலத்தின் வேகத்தில்தான் எத்தனை வேறுபாடுகள்? சமயங்களின் பாதையில் தான் எத்தனை மாற்றங்கள்? 'அன்பே, உலகமகாசக்தி' என்று கூறிய புத்தர் எங்கே... இவர்கள் எங்கே...

தமது உடமைகளை இழந்து, சிறிய ஒரு விருந்தையில் குடித்தனம் நடத்தும் இவர்களில் உடல் உறுதியுள்ளவர்கள் உழைக்கப்போக, எஞ்சிநின்றவர்களில் ஒருவனுன வயோதிபன் தமது இருப்பிடத்தைச் சுத்தம் செய்ய மேசைமேல் ஏறி, விழுந்த காட்சி அவள் மனத்திரையில் தோன்றிற்று. வயோதிபனின் மரணத்துக்குக் காரணமானவர்களை உண்மையில் சித்தார்த்தர் காட்டிய சமயநெறியாளர்கள் என்று கூற முடியுமா? அவளது உள்ளத்தில் எழுந்த வினுக்கள் இவை.

எழுதி முடித்த மாணவர்கள் கொப்பிகளைக் கொண்டுவந்து மேசைமேல் அடுக்கிக்கொண்டிருந்தனர் இடையே மாணவன் ஒருவனின் குரல் அவளது சிந்தனையை அறுத்தது, 'ரீச்சர், நாங்கள் நேற்றுப் படிச்சம், புத்தமதம் அன்பு நெறியைக் கூறுது இலங்கையில் பெரும்பாலான ஆக்கள் புத்தமதத்தைப் பின்பற்றினம் எண்டு. அப்பிடியெண்டால் இந்தக் கிழவன் இறந்திருக்க வேண்டிய அவசியமேயில்லை.' நிமிர்ந்த நீரஜா, கவலையுடன் முகத்தைத் தாழ்த்தியபோது பெரும் அழுகை ஒலிகளினூடே அந்த வயோதிபனின் பிணம் வீதியைக் கடந்து கொண்டிருந்தது.

---

## இப்படியும் ஒரு மறதி



1. உங்க பேர் லலிதாவா?
2. ஆமாம் எப்படித் தெரியும்.
1. உங்கப்பா பேரு கணேஸா?
2. அடே கரெக்டா சொல்றீங்களே!
1. உங்கண்ணு அமெரிக்காவுக்கு ஓடிப் போனுரா?
2. எப்படி இவ்வளவு சரியாச் சொல்லுகிறீர்கள்.
1. 'நான்தான் உன் அண்ணு! ஏண்டி கழுதை! என்னை அடையாளம் தெரியலை ?

---

## பரிணாமம்

மந்திரி அன்று கவலையோடு காணப்பட்டார். "கவலைக்குக் காரணம் என்ன? என மனைவி மனம் தாளாதவளாகக் கேட்டாள். என் இலாகாவில் ஒரு அற்பப் புழு இருக்கிறது. அதை ஒழித்துக்கட்டுமளவும் என் மனம் ஓயாது என வெஞ்சினத்துடன் பதில் கூறினுர். அதற்கு மனைவி, அவரைப் புழுவென்று கூறிப் புழுங்காதீர்கள். உங்கள் வளர்ச்சியையும் எண்ணிப் பாருங்கள். முதல் கட்சியில் ஒரு சாதாரண அங்கத்தவராகஇருந்தீர்கள். பின்பு கட்சியில் ஒரு பதவிவகித்தீர்கள். தேர்தல் காலத்தில் வேட்பாளராகி அபேட்சகராக உயர்ந்தீர்கள். இன்று மந்திரியாகி வண்ணத்துப் பூச்சியாகி மாநிலமெங்கும் பறந்து திரிகின்றீர்கள். உங்கள் பரிணுமவளர்ச்சியைச் சிறிது சிந்தித்துப் பாருங்கள்" என மனைவி குட்டிப் புத்திமதி கூறினுள். அவர் சிந்தனை ஆரம்பகாலத்திற்கு ஊர்ந்து சென்றது.

தொகுப்பு: எம். எம். அபூபக்கர்.

# நானும் ஒரு போராளியே



மனதை மயக்கும் மாலைப் பொழுது ... இப்போது அவன் வேலைவிட்டு வீட்டுக்கு வருகிற நேரம். செல்வி வாசலில் அவனைக்காண காத்து நின்றாள்.

அவன் வந்தான்.

படலையடியில் வரும்போதே கண்சிமிட்டி, சிரித்துக் கொண்டு வருபவன், அமைதியாக வந்தான். வந்து அவளோடு வழமைபோல் எதுவுமே கதைக்காமல் நேரே படுக்கை அறையினுள் நுழைந்தான். அவன் அழுதிருக்கிறான் என்பதற்கு அடையாளமாக அவனது விழிகளிரண்டும் ஈரமாக சிவந்திருந்தன.

கட்டிலில் விழுந்தவன் விம்மி விம்மி அழத்தொடங்கினான்.

எந்தப் பெரிய பிரச்சினைகள் அவன் மனதை மொய்த்தவேளையிலும் அசையாத வசந்தன் ஏன் இன்று -இப்படி சின்னப் பிள்ளை போல...

அவள் சிந்தித்தாள்.

அவள் அவனை அண்மித்து, 'ஏன் அழுகிறியள்? எனக்குச் சொல்லுங்கோவன்!' என்று கெஞ்சிக் கேட்டாள்.

அவன் அவளை நிமிர்ந்து, ஒருவினாடி பார்த்துவிட்டு குலுங்கிக் குலுங்கி அழுதான்.

அவள் ஆச்சரியத்தோடு, அவனுக்கு என்ன நடந்திருக்கும் என்று மனதுக்குள் பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டாள்...

அவனைப் புரட்டினாள். உலுக்கி உலுக்கிகேட்டாள்; 'என்னப்பா... சொல்லுங்கோவன்... நானும் அழ!' அவளது கண்களும் கலங்கத்தொடங்கின.

'சுநீதன் இருக்கிறானே...' அவன் பேச்சை பாதியில் கத்தரித்து விட்டு விசும்பினான்.

★ வவுனியா திலீபன் ★

'ஓம். அவருக்கென்ன? அவர்தான் பயிற்சிக்குப் போட்டாரே!'

'அவன் வந்திட்டான்.'

'எப்ப? எங்க வந்தார்...'

'அவன் செத்திட்டான்...'

''ஏன்? எப்படி?'

வசந்தனால் தொடர்ந்து பேசமுடியவில்லை. வீட்டு முகட்டைப் பார்ப்பதும் பிறகு புரண்டு அழுவதுமாக இருந்தான்.

மதியம் அவனுக்கோர் தொலைபேசி அறிவிப்பு வந்திருந்தது. வசந்தனின் அண்ணன் ஒருவன்தான் பேசினான்.

பயிற்சியை முடித்துக்கொண்டு இங்கு வந்த சுநீதன், வந்த மூன்றாம் நாளே அரச காட்டுமிராண்டிகளினால் சுடப்பட்டு மரணித்துவிட்டானாம்.

அதிகாலை நேரம் மோட்டார் சைக்கிளில் அவன் போயிருக்கிறான். இரவோடிரவாக முகாமிலிருந்து வந்து, பற்றைக்குள் பதுங்கியிருந்த 'அவர்கள்' சுநீதனின் முதுகை நோக்கிச், சுட்டிருக்கிறார்கள். சூட்டை வாங்கிய அவன், [illegible]தில் போராட்டம் நடத்தி அவர்கள் சிலரைஅழித்தான். ஆனாலும், அந்தப் புரட்சிப் புஷ்பம், விரிந்த வேகத்திலேயே கருகி விட்டது.

வசந்தனின் வாயால் அதைக் கேட்ட செல்வி, அழுகையினூடாக அவனைத் தேற்றினாள். தன் புருஷன் அவன்மேல் எவ்வளவு அன்பும், அக்கறையும் வைத்திருக்கிறான் என்பது வசந்தனுக்கு அடுத்ததாக அவளுக்குத்தான் தெரியும்

'இஞ்சேருங்கோ... பிறந்தவர்கள் எல்லோரும் சாகத்தானே போகினம். சுநீதன் செத்தது சோகமான செய்திதான். ஆனால், அது ஆச்சரியப்படக் கூடியதில்லை.

'நீங்களே பேப்பரிலை எவரையும் அழவேண்டாம் மெண்டு அட்வைஸ் பண்ணி எழுதுவீங்கள். நீங்கள் ஏன் அழுகிறீர்கள்?'

அவள் எதைச் சொல்லியும் அவன் மனம் ஆறவில்லை. குமுறிக் குமுறி அழுதான்.

செல்வி அவனைத் திருமணம் செய்து இரண்டு வருஷங்கள் ஆகின்றன. இந்த இருவருஷ காலத்தில்,

வசந்தன் அவளோடு சுநீதனைப் பற்றித்தான் அதிகம் பேசியிருக்கிறான்.

'செல்வி கல்யாணம் என்பது வெறும் ஆசைக்காக இல்லாமல் அன்புக்கு மட்டுமே இருந்திருந்தால் நான் என் சுநீதனைத்தான் கல்யாணம் செய்திருப்பன்.

'இப்போது தான் நான் நினைக்கிறன், அவனோடு நானும் போயிருக்காலாமெண்டு அவன் பயிற்சிமுடிந்து வந்தவுடன் அவனை தோளில் வைத்து ஒரு பெரிய ராஜ ஊர்வலமே வைப்பன்'

பல இரவுகளில் வசந்தனின் பேச்சை சுவாரசியமாகக் கேட்கும் செல்வி, சிலசமயங்களில், 'போதும் அலட்டாதைங்கோ நித்திரை வருது...' என்று சொல்லி புரண்டு படுத்து விடுவாள்.

அவனுடைய பேச்சின் மூலம் சுநீதனிடம் வசந்தன் அளவுக்கு மீறிய அன்பும். நட்பும் வைத்திருக்கிறான் என்பதை புரிந்து கொண்ட செல்வி, அவன் வந்தவுடன். தன் கணவனால் ஒரு முறை தன்னும் சந்திக்க முடியாமல் போய் விட்டதை எண்ணிய போது வேதனையில் வெதும்பலானாள்,

வசந்தன் இரவு உணவு உண்ணவில்லை. படுத்து விட்டான் ஆனால், அவன் நித்திரை செய்யவில்லை. இரவிரவாக சுநீதனின் பெயரை உச்சரித்து முனகிக் கொண்டே இருந்தான்.

அவனும் சுநீதனும் கிராமத்தில் பிறந்தவர்கள். இருவரும் ஒருவருக்கொருவர் நெருங்கிய சொந்தக்காரர்கள். ஆனால் அவர்கள் இருவரும் சொந்தத்தை விட, இடையில் புகுந்து இதயத்தில் படிந்த நட்பை அதிகம் நம்பினார்கள்.

ஒரே வகுப்பில் படித்தார்கள். இருவரும் தலைமை ஆசிரியரோடு முரண்பட்டு படிப்பை பாதியில் நிறுத்தினார்கள்.

இளமை பூத்தவேளை... அவர்களுக்குள் புதுப்புது புரட்சி எண்ணங்கள் பூக்கத் தொடங்கின.

எதிலும் புரட்சி... எப்போதும் புரட்சி...

சாதிகள் இல்லையென்று கிராமத்தில் கூட்டம் போட்டு பிரசங்கம் செய்தனர். ஏழைக் கிராமவாசிகளின் நெற்காணிகள் வரட்சியினால் வாடியபோது குளத்தை உடைத்து தண்ணீர்த் தானம் செய்தனர்.

ஊர்ப்பெரியவர்களினால் அபகரிக்கப்பட்டிருந்த பொதுக்காணியை மீட்டு. சிறுவர்கள் விளையாடவும் நூல்களை வாசிக்கவும் மைதானமும், சனசமூ நிலையமும் அமைத்தனர்.

ஊரில் வசதிவாய்ந்த பெரியவர்களெல்லாம் அவர்களின் எதிரிகள். ஏழைகளும், வாழ்க்கையில் விரக்தியின் விளிம்புக்குத் தள்ளப்பட்டவர்களெல்லாம் அவர்களின் நண்பர்கள்.

அந்தச்சமயத்தில்தான் வசந்தன் தனது கருத்துக்களைப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் எழுதத் தொடங்கினான். அவனது கருத்துக்கள் முற்போக்காகவும், சமுதாயத்தின் போலித்திரைகளை கிழித்தெறியக் கூடியதாகவும் அமைந்தன.

அந்தக் கிராமத்தில் சிறிய பாடசாலை ஒன்றிருக்கிறது. அங்கே, பாடசாலை விட்ட நேரங்களில் அவர்கள் இருவரும் போயிருந்து தங்கள் எதிர்காலத் திட்டங்களை வகுப்பார்கள்- ஆராய்வார்கள். விடுதலைக்கான போராட்டம் முளைவிட்டிருந்த காலம் அது விடுதலை சிந்தனைகள் அவர்கள் மனத்தையும் மாற்றின.

ஒரு இரவு.

இருவரும் வெகு நேரம் பேசினார்கள்.

'மச்சான் வசந்தன் நாங்கள் பிறந்ததே எதற்கென்று தெரியாமலிருக்கு. இவ்வளவு காலமும் வாழ்ந்து எதைச் சாதித்திருக்கிறோம் என்னத்தை பெரிதாகச் செய்திட்டம்'

வீணாக எங்கள் வாழ்க்கையை நாம் செலவழித்துக் கொண்டிருக்கிறோம். முதலில் எமக்குத் தேவை தேச விடுதலை. அதன் பின்னர் சமுதாயத்தில் இருக்கின்ற மோசடிக்காரரையும், பிற்போக்கு வாதிகளையும் ஒழித்துக் கட்டுவது சுலபம்'

''சரி நீ என்னசொல்கிறாய் என்று கொஞ்சம்விளங்கச் சொல்லன்.'' வசந்தன் ஆர்வமாகக் கேட்டான்.

''இப்ப விடுதலைப் போராட்டம் தொடங்கியிருக்கு அதில் எல்லாரும் பங்காளிகளாகச் சேரவேண்டும். நாங்கள் சும்மா கதைச்சுக்கொண்டு இருந்து பிரயோசனமும் இல்லை. எல்லாப் பொடியளும் பயிற்சி எடுக்க முனைப்புடன் புறப்பட்டுள்ளார்கள்.

வசந்தன் புரிந்துகொண்டான்.

சற்றுநேரம் தலைமுடியை கோதியபடி சிந்தித்து விட்டுச் சொன்னான். ''சுநீதன் என்னை நம்பித்தான் என்வீடு இருக்கு... அதனால்...''

## வைரம்



அக்கா நீசெய்த லட்டு உருண்டையைப்பற்றிஎல்லா விபரமும் கம்பியூட்டரிலே பதிவு செய்ததும் எப்போ சாப்பிடலாம் என்று கம்பியூட்டரிடம்கேட்டேன்.

'என்ன சொன்னது?'

'அடுத்த நூற்றுண்டில்தான் சாப்பிடலாம்! அப்பொழுதுதான் உடையுமாம்!'

## இருட்டில் இன்பம்



ஐயையோ... விளக்கெல்லாம் அணைந்துபோச்சு. பக்கத்து வீட்டில் எரிகிறதா பார்.

'இல்லை.'

அப்படியானால் சரி.

''சரி. நீ வராவிட்டால் பரவாயில்லை. ஆனால் நான் போறன். நீ எங்கிருந்தாலும் எப்படி இருந் தாலும் போராடிக்கொண்டே இரு. நீ பேனையால போராடுகிற அதே நேரம், நான் துவக்காலே போரா டுவேன்...'' என்று உணர்ச்சி பொங்கப் பேசிய சுநீ தன், ''வசந்தன் எங்களை நம்பித்தான் இந்த தேசமே யிருக்கிறது. எங்கடை இனம் விடுதலைபெறவேண்டும்.''

வசந்தன் சந்தோஷத்தோடு, மனதில் முகிழ்த்த வேதனையை வெளிக்காட்டாமல், சுநீதனை அனுப்பி வைத்தான்.

அடுத்தநாள், அந்தக் கிராமமே திரண்டெழுந் தது. 'அவனோடு திரிந்து, அவனை கொலைக்களத்துக்கு அனுப்பிவிட்டு, இவன் ஏன் இஞ்சை இருக்க வேண் டும்...?'

படையினருக்கு தகவல் பறந்தது.
படை. படையெடுத்து வந்தது. அவன் ஓடினான். ஒழித்தான்.

எத்தனை நாள் பசியோடு வனாந்தரத்தில் வசிப் பது?
பாதுகாப்பை நாடி குடாநாட்டுக்கு வந்தான். அவனுடைய நல்ல காலம் போராளிகளின் கட்டுப் பாட்டில் இருந்த குடாநாட்டில் அவனுக்கொரு தொழில் காத்திருந்தது. செய்தான். பேனா பிடிக்கும் போராளியானான். பிறகு, செல்வியின் நட்புக் கிடைத் தது. நட்புக் காதலானது... காதல், கல்யாண மானது...

★ ★ ★

பொழுது முற்றாகப் புலர்வதற்கு முன்பே, வசந் தன் எழுந்து செல்வியிடம் விடைபெற்று ஊருக்குப் பயணமானான்.

மூன்று வருஷகாலத்துக்குப் பிறகு அந்த ஊரே அவனுக்கு புதுமையாக இருந்தது. பச்சைப்பசே லென்று கண்ணுக்கு விருந்து படைக்கும் வயல்களெல் லாம் சாம்பல் பூத்து, சுடுகாடுபோல் காட்சிதந்தன.

ஊரின் பெயரை அறிமுகப்படுத்திய பல கட்ட டங்கள் குண்டு வைத்து தகர்க்கப்பட்டிருந்தன.

குழந்தைகள் விளையாடிக் குதூகலித்துத் திரி கின்ற நிலங்களெங்கும் முட்செடிகள் முளைத்திருந்தன.

வசந்தன் தன் குடும்பத்தினரை சந்திப்பதற்கு முன், சுநீதனின் வீட்டுக்குப் போனான்.

சுநீதனின் தாயார் அவனை கட்டியணைத்து அழுது வடித்தாள்.

'தம்பி... உன்ரை நடை... பார்வை... எல்லாமே அவனைப் போல தான் கிடக்கு...' என்று அந்தத் தாய் ஓசையெழ அழுதாள்.

அவளுக்கு சமாதானம் கூறிய வசந்தன், நேரே தன் குடும்ப வீட்டுக்குச் சென்றான்.

அங்கு அவன் வந்ததைப் பற்றியும்... பேசிய பேச்சுக்கள் பற்றியும்... அவனில் தென்பட்ட மாற் றங்கள் பற்றியும் கேட்டு அறிந்து கொண்டிருக்கும் போது...

வீதியில் அடர்த்தியான உறுமல் சப்தம் கேட் டது. அனைவரும் ஒருகணம் அதிர்ந்தனர்.

## மகாராஷ்டிரத்தில் புதிய சிக்கல்

இந்திய மாநிலமான மகாராஷ்டிரத்தில் புதிய சிக்கல் எழுந்துள்ளது. மகாராஷ்டிரத் தில் ஒருபகுதி விதர்ப்பா என்ற பிரதேசம். இப் பிரதேசத்தை வறுமை தரப்படுத்தியுள் ளது. இப்பகுதியை மகாராஷ்டிரத்தில் இருந்து தனிமைப்படுத்தி, வேறு ஒரு மாநிலப் பிரதேச மாக்கி வளம்படுத்த வேண்டும் என முன்னாள் பிரதி முதன்மந்திரி 'நாசிக்ரு ஓ திர்ப்பூட்' தலைமையில் ஒரு அணி திரண்டுவருகின்றது.

இவர்களுடைய கோரிக்கையில் ஒன்று நாக் பூர் நகரம் மகாராஷ்டிரத்தின் இரண்டாவது தலைநகரமாக வரவேண்டும் என்பதே! இது கொள்கையளவில் முன்பு ஏற்கப்பட்டது. ஆயி னும் செயல்முறைப்படுத்தப்படவில்லை!

ஆயினும் இந்தக் கோரிக்கையின் தாற்பரி யத்தை மகாராஷ்டிராவின் இன்றைய முதன் மந்திரி திரு. எஸ். பி. சவான் உணர்ந்துகொள் ளவில்லை. மகாராஷ்டிரம் இரண்டாகப் பிளவு பட்டால் அரசியல் அமைப்பு ரீதியாகச் சில சிக்கல்கள் உண்டென்கிறார் எஸ். பி. சவான்.

இவ்வாறான பிடிவாத நிலை மகாராஷ்டி ராவை மற்றொரு அஸாமாக மாற்றுமோ என ஆய்வாளர்கள் சிந்திக்கிறார்கள்.

— பாணபத்திரன்

## சிரித்துப்பாருங்கள்



ஆசிரியர்: மழை அதிகமாகஉள்ள நாடுகளில் எதை அதிகமாக உற்பத்தி செய்கிறார்கள்?

மாணவன்: குடைகளையும்... மழைக்கோட்டுக்களையும்.


வீட்டைச் சுற்றி மொய்த்தனர் படையினர்.

அவன் பிடிக்கப்பட்டான்; அடிக்கப்பட்டான் ...றக்கில் ஏற்றப்பட்டான், சிறைமுகாமில் அடைத்து சித்திரவதை செய்யப்பட்டான்.

'அதிங், அவனைவிட, நீதாங் பெரிய கொட்டியா... அவன் நம்மை கண்டாத்தாங் சுடுவான். நீ கா... மலேயே சுடுவாய்... நீ எழுதய் போறியா?' அவன... இருகரங்களும் முறிக்கப்பட்டன.

# இன்னும் ஒரு சூரியன்

இளவ ாலை விஜயேந்திரன்



பெனிதெனிய பஸ்ஸைத் தேடிப் பிடித்து 'எக்காய் விஸ்ஸாய்' சொல்லிப் பாலத்தடியில் வந்து இறங்கி மேலேறிக் கம்பளை றோட்டுக்கு வந்தபோது ஒருமாதிரி மூச்சிரைத்தது. கன்னங் களிலும், முகத்திற்குக் கீழேயும் முத்துமுத்தாக வியர்வை பெருகத் தொடங்கியது. கைலேஞ் சியை எடுத்து முகம் துடைத்தபிறகும் நெருப்பில் நிற்பது போலவும், முகத்தில் அனல்காற்று அடிக் கிற மாதிரியும் உணர்ந்தான். கொஞ்சநேரம் கம்பளை றோட்டில் வழுக்கிப்போகிற கார்களைப் பார்த்தபடி மர நிழலில் நின்றான். எம். ஜீ. ஆரோ, சிவாஜியோ யாரோ ஒருவன் போட்ட ட்டைகளில் காதலியோடு ஆடுகிறாற்போலக் கண்ட கனவுகள் நினைவுவந்தன. ஆனால் இப் போது வியர்வை பெருகுகிறது.

கம்பளை றோட்டைக் கடந்து மறுபக்கம் வந்து ட்டுக்குள் நின்றபடியே இவனை முறைக்கும் நாயைக் கடந்து மிகக் குறுகிய பரிமாணம் கொண்ட அந்த மாடிவீட்டின் முன்போய் நின்றான். குலம் இப்போது என்ன செய்துகொண்டிருப்பான் என எண்ணிப் பார்த் தான். படித்துக்கொண்டிருப்பான் என்றே தோன் றியது.

'நீ சிகரெட் குடிக்கிறனியா?'

'கண்டியிலிருக்கேக்கை மட்டும். யாழ்ப்பாணத் துக்குப் போனால் வசதியில்லை. சுதந்திரமா கமல் அல்லது ரஜனி மாதிரி சிகரற் பிடிச்சுக்கொண்டு வீஜி ாவை அல்லது குமுதுவைப் பார்த்துச் சிரிக்கிற ந்தோஷம் யாழ்ப்பணத்திலை இல்லை. கொஞ்சம் சிரிச்ச உடனை கற்பு பத்துச் சதவீதம் குறைஞ்சுபோன மாதிரி நினைக்கிற யாழ்ப்பாணப் பெட்டையள்.

'குலம்இதெல்லாம் எனக்குப் பிடிக்கேல்லை. கண்டி நல்லாய், மிகநல்லாய்ப் பிடிச்சிருக்கு. உனக்குக் கண்டி பிடிச்சிருக்கா? இல்லை, கலாசாரம், கலாசாரம் ண்டு கத்திக் கத்தியே சீரழியிற யாழ்ப்பாணம் பிடிச்சிருக்கா?'

'எனக்கென்னவோ எங்கையிருந்தாலும் நாங்கள் தான் எங்கடை வாழ்க்கையைத் தேடிக்கொள்ள வேணுமெண்டு படுகுது' பிறகு குலம் சுற்றி வளைத் துப் பேச்சை வளர்ப்பான்.

இப்ப என்ன நடந்திட்டுது? ஒன்றுமே நிகழாமல் சாதாரணமாய் இருக்கிறாற்போல நிற்கமுயன்றான், முடியவில்லை. சேட்டிற்குள்ளே வியர்த்தது. முகத்தில் அனற்காற்று எரிந்தது. குனிந்தபடியே கதவில் தட் டிக்கொண்டிருந்தான். விரல்கள் நோவெடுத்தன. திரும்பிப் பார்த்தான். நாய் இவனைப் பார்த்துச் சிரிக்கிறமாதிரி இருந்தது. மனதுக்குள் சிரித்துக் கொண்டான்'

திரும்பவும் கதவில் தட்டநினைத்தபோது 'கோலிங் பெல்' நினைவு வந்தது. ஒரு ஜெயராஜின் ஓவியம் வந்து கதவைத் திறந்தது. குலம் கொடுத்து வைத் தவன் என்று நினைத்துக்கொண்டான். அவள் சிரித்த படி 'குலம் ஐயாத?' என்று சிங்களத்தில் கேட்ட போது ஓமென்று தலையாட்டினான். அவன் எங்கோ வெளியில் போய்விட்டதாகச் சொன்னாள். அப்போ தும் இவனுக்குச் சிரிக்கத் தோன்றவில்லை. சிரிப்ப தும் சிரியாது போவதும் ஒன்றேயென்று தோன்றியது.

கோணற்புளி வேலியைக் கடக்கிறபோது திரும் பிப் பார்த்தான். வாசல் திறந்தபடியிருக்க நிலையில் சாய்ந்து அழகாகச் சிரித்தபடி நின்றாள். இப்போது உண்மையாகவே சிரிப்பு வந்தது. சிரித்தான் நாயை யும் ஒருதரம் பார்த்துவிட்டுக் கம்பளை றோட்டுக்கு வந்தான். குலம் அக்பர் ஹோலுக்குத்தான் போயி ருப்பான். அக்பர் ஹோல் படிகளில் ஏறுவது சிர மம்தான்.

'குலம் இதுகளுக்கும் லிப்ட் இருந்தால் எவ்வ ளவு நல்லது!'

'அதொண்டுதான் இல்லை இந்தப் பிரமச்சாரி மடத்துக்கு'

உண்மைதான். கம்பளை றோட்டில் சனங்கள் குறைவு. மிகத் தொலைவிலிருக்கிற விஜேவர்தனா, இராமநாதன் ஹோல்களிலிருக்கிற பெண்களுக்கு இங்கே ஒருவேலையுமில்லை. லைப்ரரியாவது அருகிலிருந் தால் பறவாயில்லை. எல்லாம் வெகு தொலைவு,

காலுக்குக் கீழே தடமதிர்ந்து ட்றெயின் மகா வலியைக் கடந்தது. வலது கன்னத்தில் வெயில் உறைக்க நடந்தான். பெட்டிக்கடையருகே குலம் நின்றான். அலுப்புத் தரும் மாடிப்படிகள் ... நினைவு வந்தன.

இவனைக் கண்டதும் சிரித்தபடி வந்து 'என்னடா?' என்று கைகுலுக்கினான். கை குளிர்ந்தது. மாவலியி

...ம் கடன் வாங்கிய குளிர். கட்டிடங்களுக்கு அப்பால் மெல்ல மெல்ல வழுக்கி விழுகிற சூரியன் டைசியாக ஒருமுறை கன்னத்தில் கொஞ்சிவிட்டுப் போனான். எங்கே போவது என்ற தீர்மானமற்று அக்பர் ஹோல் பக்கம் நடந்தனர்.

இவன் சிகரற் ஒன்றைப் பற்றவைத்தான்.

'என்ன ஸ்பெஷல் இந்தப் பக்கம்?'

'கணிசமான அளவு விஷயங்கள் இருக்கு.'

'இந்தமுறை அடிபடப் போறது ஜானகிராமனா, சுஜாதாவா, சுந்தர ராமசாமியா? அல்லது...?'

'ரமணி'

குலம் ஒருகணம் நிதானமாக நின்றான். அவன் இதை எதிர்பார்த்திருக்கமாட்டான். இவ்வளவு காலத்தில் தனக்கும் ரமணிக்கும் ஒரு பிரச்சனை என்று இவன் சொன்னதில்லை. ஒவ்வொருமுறை வரும்போதும் ஒவ்வொரு எழுத்தாளரைப் பற்றியும் அவரது பிந்திய பரிமாணங்கள் பற்றியுமே பேசும்படி நேரும். அல்லது ஏதாவது கதை, கவிதை எழுதிவிட்டு, கொண்டு வந்து காட்டுவான். பிறகு அதை ஒரு பத்திரிகைக்கு அனுப்புவான். நீண்ட நாட்களின்பின் அந்தக் கதை திரும்பி வந்ததாகக் கூறுவான். அடுத்த தரம் அவன் கதையெழுத நீண்டநாட்களெடுக்கும்; அல்லது கதை மனதுக்குள்ளேயே முடங்கிக்கொள்ளும்.

நடந்தார்கள், அக்பர் ஹோலடியில் போய் இடப் பக்கம் திரும்பி இருபக்கங்களிலும் ஆளுயரம் நிமிர்ந்து தலையசைக்கிற புற்கள் -ஊடுருவிப் பார்க்கிறபோது அப்பால் மிக உயர்ந்து பச்சையும் மஞ்சளுமாய் ஆடும் மூங்கில்கள் -தொலைவில் அக்பர் பாலம் -தொட்டம் தொட்டமாக மூங்கிலும் புற்களும் மினுங்கும் மாலை வெயில்.

அக்பர் பாலத்தில் போயமர்ந்தனர். மௌனமாகவே இருக்கத் தோன்றியது, குலத்துக்கு முன்பு நடந்ததெல்லாம் தெரியும். இப்போது இப்படியாக... 'வாற பத்தாம் தேதி ரமணிக்கு எழுத்தாம்.'

குலம் பேசாமலிருந்தான். ரமணியோடு எங்காவது போகவேண்டுமென்றால் இவனை மோட்டார் சைக்கிளில் கொண்டுவந்து ரமணியின்முன் இறக்கிவிட்டு 'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்று சொல்லிச் சிரித்து, ஹெல்மட்டைக் கழற்றித் தலையைக் கோதிவிட்டு, இருவரையும் ஒன்றாக சைட்கிளாசில் பார்த்துச் சிரித்தபடி கியர் மாற்றுகிற குலம் இப்போது பேசாதிருந்தது ஆச்சரியமாகவிருந்தது.



ஆசிரியர்: பூனை கண்ணை மூடிக் கொண்டால் என்ன நினைக்கும்?

பையன்: உலகமே 'பவர் கட்' என்று நினைக்கும்.

'இதை அவளே சொல்லியிருந்தால் பறவாயில்லை. ரவிதான் வந்து சொன்னான். அதுக்குப் பிறகு ஒரு கடிதமும் வரேல்லை. மொட்டைக் 'கடிதம்' மாதிரி ஒண்டு வந்துது. அதுவும் 'இங்கிலீசிலை' என்ரை வாழ்க்கையிலை குறுக்கிட வேண்டாம். என்ரை கடிதங்களைத் திருப்பி அனுப்புங்கோ, நல்லா இருக்கக் கடவுள் காப்பாற்றுவார் எண்டு. ஆர்கேட்டது இதெல்லாம்? நான் அவளுக்காகச் செய்த எல்லாத் தியாகங்களுக்கும் கடைசியிலை இப்படியொரு தண்டனையா?

குலம் இப்போதும் ஒன்றும் பேசவில்லை. லைப்ரரிப்பக்கம் விறைத்துப் பார்த்தபடி இருந்தான். சரிவு கொண்ட வெயில் அதிகம் உறைக்கவில்லை. இவன் கீழே மிக ஆழத்தில் கோடுபோலச் சலசலக்கிற மாவலியைப் பார்த்தபடி இருந்தான். பளபளத்தபடி ஓடு



கிற நீரோட்டத்தில் தலைகுளிக்கிற காகங்களும், மனிதர்களும்.

'நான் ஒருபோதும் அவளைக் கஷ்டப்படுத்தினேல்லை எண்டது அவளுக்கு நல்லாத் தெரியும். அதுதான் ஏமாத்திற துணிச்சலையும் அவளுக்குத் தந்திருக்கும். குலம், இந்த உலகத்திலை உண்மையா, மனத் தூய்மையோடை அன்பு செலுத்திறதும் பிழையா? அப்படியொரு அன்பை நாங்கள் எதிர்பார்க்கக் கூடாதா?' வார்த்தைகள் தழும்பிப்போய் வந்தன பதட்டப்பட்டு நிறுத்தினான்.

'தூய்மையா அன்பு செலுத்திறவனைப் பேயன் எண்டுதான் எல்லாரும் நினைப்பினம். எங்களாலை இயலுமானவரை முகமூடி போட்டபடிதான் வாழவேண்டியிருக்கு. நாளைக்கே உன்னைப் பாக்கிறபோது ரமணி ஆரோ ஒருத்தனைப்போலப் பார்ப்பாள். அது பெட்டைகளுக்குச் சரியான சுகம். சரியாச் சொல்லப் போனா ஆரம்பத்திலையே பிழைவிட்டது நீதான்.'

அப்படித்தான், பிழை முழுவதும் இவனில்தான். பொய்களையெல்லாம் மெய்யென்று நம்பி சமூகத்தின் வரம்பு, வேலி எல்லாம் உடைக்கிறேன் என்று புறப்பட்டு இப்போது இவனே உடைந்து போனான்.

பணம், அந்தஸ்து இவைகளை மீறிக் காதலிக்கலாம் என்று நம்பியதுகூட இவ்வளவு பொசுங்கிப் போகு மென்று நினைத்ததேயில்லை.

கடற்கரையில் மணலுக்குள் காலைப் புதைத்தபடி மடியில் படுத்துக்கொண்டு கண்டது எல்லாம் கனவு களே என்று தோன்றியது. இப்போதிருப்பது வெறு மனே சிகரெட்டும், சுஜாதாவும், ஜானகிராமனும் தான்.

'வாழ்க்கையின் ஒவ்வொரு கணமும் நாளைக்கே ஒருபாடமாயிருக்கும். ஒருதரம் நடந்தது திரும்பவும் நடக்குமெண்டு நினையாதை இன்னொருத்தியைத் தேடின பிறகு இதைப்பற்றி யோசித்தால் சிரிப்ப யிருக்கும்.'

உண்மை போலத்தான் இருந்தது. ஆனால் இதெ லாம் எவ்வளவு சிரமசாத்தியம் என்று யோசித்தான். இன்னுமொரு சிகரற்றைப் பற்றவைத்தான்.

வானம் இருட்டத் தொடங்கியது. சூரியன் மறைந்தபிறகு தூரத்தே மின்விளக்குகள் வெளிச்சம் தரத் தொடங்கிய பிறகும் அப்படியே இருந்தார்கள். யாரோ ஒரு சிங்களச் சோடி தமக்குள் கிளுகிளுத்த படி இவர்களைக் கடந்துபோனது. மனதுக்குள் ஏதோ செய்தது, என்றாலும் சத்தமிட்டுச் சிரித்துக்கொண் டனர்.

'குலம் விடியும் வரையும் இதிலை இருப்பமா?'

குலம் விசித்திரமாக இவனைப் பார்த்தான்.

## புறப்படு தோழா

சாத்வீகம் என்பது
சாதகமில்லை நம் நாட்டில்
சான்றோர் செய்தனர்
சாத்வீகப் போராட்டங்கள்
பறிக்கப்பட்ட உரிமைகள்
மீட்கப்பட......
அண்ணல் காந்தி
சொன்ன வழியில்
செய்திட்டார் போராட்டங்கள்

கிடைத்தன !
உரிமைகள் அல்ல
கல்லெறியும், கண்ணீர்ப்புகையும்

காடையர் தந்த
வெகுமதிகளுமே.

சமத்துவம் என்றார்கள்
மறுத்தார்கள் நம் உரிமையை
சுதந்திரம் என்றார்கள்
பறித்தார்கள் நம் உடமையை
சகோதரத்துவம் என்றார்கள் பாவிகள்

பறித்தார்கள்...
அப்பாவிகள் உயிரை
எப்பாவி சொன்னான்
சனநாயக சோஷலிசம்இதுவென்று

தோழா!
சாத்வீகம் என்பது
சாதகம் இல்லை எம்நாட்டில்
சாதகம் எப்போ வரும் என்று
ஜாதகம் பார்க்காதே நீயும்
புறப்படு தோழா
நீயும்...
அச்சத்தை வென்று
வஞ்சத்தைத் தீர்த்து
எம் இனம் காக்க
விடியாத இரவுகளை
விரட்டியடிக்க
புறப்படடா !

★ செல்வன். சி. சம்பந்தர்

## வருமுன்னர்க் காப்பதற்கு வழி காணீர்

எடுகோள்கள் எத்தனையோ
படுதோல்வி ஆனதுண்டு -வானில்
விடுகோள்கள் அத்தனையும்
வெற்றியுடன் மீண்டதில்லை
சுடுகோளின் தாக்கத்தால்
சுழலுகின்ற புழுப்போலே
அடுபோரின் அழுத்தத்தால்
அழியுதிங்கே ஆயிரமாய் -துன்பப்
படுவோரின் அழுகுரல்கள்
படுவதில்லை செவிகளிலே

விஞ்ஞானம் செய்கிறன்
வியர்த்தங்கள் பலகோடி -ஆனாலும்
அஞ்ஞானம் உடையவர்கள் -யுத்தம்
ஆயத்தம் செய்கின்றார்
அணிசேரா நாடுகளில்
அடுக்குகின்ற பிரேரணைகள் -உயிர்
பிணிதீர்க்க மருக்தாமோ
பிதுங்குகின்ற உயிரினத்தை
பணிவே டு காப்பதற்கு -உலகில்
பலஅவைபடி இருந்துமென்ன

ஆளுகின்ற கூமிட்டன்று
அநியாயம் செய்வதற்கும் -மண்ணில்
மாழுகின்ற மனிதகுலம்
மனம்புழுங்கி விடுகின்ற
பெருமூச்சு கடலலையாய்
பேரிரைச்சல் கொண்டு மென்னே
ஒருமூச்சு நின்றபின்னர்
ஒப்பாரி வடித்தென்ன -எதையும்
வருமுன்னர்க் காப்பதற்கு
வழியொன்று காண்பீரே

— சிங்கையாழியான்

# சுவடுகளில் தடம் பதித்து ...

முதல் நாள் இராணுவத்தின் அட்டகாசத்தையும், அடாவடித் தனங்களையும், வாணவேடிக்கைகளையும், அராஜக போக்கையும் மறந்து புதிய பொழுது மலர்ந்து கொண்டிருந்தது. ஊரின் சலசந்தடியற்ற தெருவோரத்திலிருந்த மரமொன்றிலிருந்த சேவல்கள் தமது கடமையைச் செவ்வனே செய்து கொண்டிருந்தன. அந்த அதிகாலை வேளையில் அவ்வூரிற்குள் நுழைந்து அட்டூழியம் புரியத் துடித்துக் கொணடிருக்கும் இராணுவத்தை முறியடிக்கும் நோக்கில் கண்கொட்டாது இராணுவ முகாமையே நோக்கியவண்ணம் போராளிகள் மூவர். 'மச்சான் ராஜன்செற்வந்து. நேரமாயிட்டுது போல' தோளில் A.K யுடன் வந்துகொண்டிருந்தனர் ராஜனும் அவனது சகாக்களும். தமது கடமை நேரம் முடிந்ததை அறிந்த தீலீபனும் மற்றைய இருவரும் தம்மிடமிருந்த தொலைநோக்கிகளை அவர்களிடம் அளித்துவிட்டு தமது முகாமை நோக்கி நடந்தனர். இவர்களுள் திலீபன் இனிமையான இளம்பராயம், தடித்த மீசை, சிரித்த முகம், அந்த முகாமிலிருக்கும் அனைத்துப் போராளிகளுக்கும் பொறுப்பானவன். எந்த ஒரு செயலையும் யோசித்துச் செய்யும் இயல்பு; எந்த் ஒரு போராளியையும் அணைத்துச் செல்லும் பண்பு; அந்தப் போராளிகள் அனைவரையும் தன் வசப்படுத்தி விட்டிருந்தான். 'தீபன் என்ன கிடக்கு, சரியாப் பசிக்குதடாப்பா' என்றவாறே சமையலறை நோக்கிச் சென்றான் சென்றியில் நின்றுவந்த செந்தில், நேராகக் கிணற்றடிக்குச் சென்று கால் முகம் கழுவிட்டு தேநீரை அருந்தத் தொடங்கினான் திலீபன். 'தேவன் போனகிழமை வீட்ட போட்டு வாறன் எண்டிட்டுப் போனவன், இன்னும் வந்தபாட்டக் காணேல்ல. என்னவாயிருக்கும் 'சிந்தித்தவாறே திலீபனை நோக்கிக் கேட்டான் றீபன்.

''ஏதாவது வருத்தமாயிருக்கும் தேனீர்க் கோப்பையை வாசற்படியில் வைத்தவாறு கூறினான் திலீபன் ஆனால் தீபனுக்கு அனது பதில் அவனது பதில் திருப்தியளிக்க வில்லை.

'இல்லையடாப்பா வித்தியாசமாக் கதைஒண்டு வந்தது.

'என்ன' வியப்புடன் பார்த்தான் திலீபன்.


'அதிர்ந்திடாதையடை மச்சான் தேவன் வெளிநாட்டுக்குப் போகப் போறானாம். உண்மையிலே அதிர்ந்து போய் தீபனின் கையைப்பிடித்தபடியே 'உண்மையே மச்சான்' கேட்டான் திலீபன்

'உண்மைதான் நீ எழும்பு யாழ்ப்பாணம் போக வேணுமெண்டு சொன்னனியல்லே.' தீபன் கூறியசெய்தியால் குழப்பமடைந்திருந்த திலீபன் மெதுவாக எழுந்து யாழ்ப்பாணம் செல்ல ஆயத்தமானான்.

★

தேவனின் தாயார் காலையும் அவனின் வெளிநாட்டுப் பயணம்பற்றி நினைவுபடுத்தியிருந்தாள்.

''மகன் உனக்குக் கீழ ரெண்டு தங்கச்சிமார் இருக்கினம். நெடுக உதுக்குள்ள கிடக்க முடியுமே. எங்களையும் நாங்கள் கவனிக்கத்தாதே வேணும்' ஆடாமல் அசையாமல் மறுபேச்சு பேசாமல் அவள் சொல்வதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தான். ஏனோ அவன் மனம் அடிக்கடி சஞ்சலப் பட்டுக்கொண்டிருநதது கழுத்தில் இன்னமும் சயனைட் தொங்கிக் கொண்டெ இருந்தது அப்போது அங்கே தேநீரைத் தேவனிடம் கொடுத்தவாறு ''கிருஷ்ணன் அண்ணனிட்ட நேற்றுப் போய் அழுது குமுறி ஒருமாதிரி சம்மதம்வாங்கிபபோட்டன்' மகனை வென்றுவிட்ட வெற்றிப் பெருமிதத்தில் சொன்னாள் தாய். தேவனுக்கு




ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்தது. 'சுயநலப் பிசாசுகள், இருக்கிறது காணாதெண்டு என்னைக்கொண்டு உழைப்பிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டு நிக்குதுகள்' இப்படி மனம் நினைத்தாலும் கடந்த ஒருவாரமாக கொஞ்சம் கொஞ்சமாக அவனை வெளிநாட்டுப் பயணத்திற்கு ஆயத்தப்படுத்திய அவனது தாய் அதில் வெற்றியும் கண்டிருந்தாள். அவன் எப்படி மாறினான் என்பது அவனுக்கே புரியவில்லை தேநீர் குடித்தது பாதி, குடியாதது பாதியாக வைத்து விட்டு, வெளியே போவதற்குத் தயாரானான் தேவன். திடீரென்று அவனது வாசலில் ஒந மோட்டார் சைக்கிள் சத்தம். திலீபன்தான் வந்திருந்தான். அவனைக் கட்டதும் தேவனுக்கு ஆச்சரியம் அதிர்ச்சி. ''வாங்கோ திலீபனண்ணை என்ன வெளியிலே நிண்டிட்டீங்கள்'' கேற்றைத் திறந்தவாறு கேட்டான் தேவன் 'இல்லை. தேவன் அவசரமா நான் யாழ்ப்பாணம் போக வேணும். அதுக்கிடையில் ஒருக்காச் சந்திக்க வந்தனான்'' திலீபனின் வார்த்தைகள் தேவனின் காதில் விழுந்ததாக இல்லை. அவனது எண்ணம் எங்கோ நின்றது. ''என்னடாப்பா கடுமையாக யோசிக்கிறாய். வெளிநாட்டுக்குப் போகப்

போறியா உண்மையே'' வந்த காரியத்தை சுத்தி வளைக்காமல் நேராகக் கேட்டான் திலீபன். "என்னண்ணு செய்யிறது வீட்டு நிலமை அப்பிடியாக் கிடக்குது'' அவனது பதில் திலீபனுக்கு வேடிக்கையாக இருந்தது. ஆதரவாக தேவனின் தோளைப் பற்றின வாறே "தேவன் நாட்டு நிலைமையில் இருந்து எப்ப வீட்டு நிலமைக்குத் தாவினனி'' அவனது கேள்வியில் கனுகனத்தின் முன்னுல் தலைநிமிர்ந்து நிற்க முடியாமய தலை குனிந்தாள் தேவன். அவனிடமிருந்து எந்த விதமான பதிலையுமே காணுததால் திகைத்துப் போய்விட்ட திலீபன் "அப்ப போறதெண்டு முடிவு கட்டியிட்டாய தேவன் ஒண்டு சொல்லட்டே. எங்கட இந்தப் பெரிய் குடும்பத்திலே இருந்து ஒண்டாப்படுத்து உண்டு, களிச்சிட்டு இப் விலகி இந்தச் சின்னக் குடும்பத்துக்க தலையை வச்சிட்டாய் பாசத்தொட பழகி நிறைவேருத ஆசையளோட, நாம் நிறைவேற்றி வைங்பம் எண்ட நம்பிக்கையில போன எங்கட பெடிய,, களின்ர பிணங்களை மிதிச்சுக் கொண்டு நீ வெளி நாட்டுக்குப் போகப் போருய். நிச்சயமாச் சொல்றன் நீ அங்க நிம்மதியா இருக்க மாட்டாய் இது சபாமில்லை. சிந்தனைக்குச் சொல்றன்' ஒரு குட்டிப் பிரசங்கமும் நிகழ்த்தி விட்டு, சேட்டைச் சரி செய்தான் திலீபன். 'அது சரி திலீபனண்ணு. எனக்கு ரெண்டு தய்கச்சி இருக்கு' பயந்து கொண்டே சொன்ஞன், தேவன். உடனே லலமாகச் சிரித்து விட்டு 'எனக்கும் இரண்டு தங்கச்சி இருக்காடா. இவ்வளவு கஷ்டத்தின் மத்திபிலயும், எங்களுக்கு உழைச்சுத்தா வீட்டவா' எண்டு கேக்காத என்ர தாயையும், ரெண்டு தங்கச்சிமாரையும் நினைச்சு நான் பெருமைப் படுறன் 'கூறிக் கொண்டே மோட்டார் சைக்கிளை இயக்கிஞன் திலீபன்.

'தேவன், ஏதோ யோசிச்சுச் செய், அவசரமாகப் போக வேணும். நான் வாறன்' சகோதர உணர்வுடன் தோளில் தட்டிக் கூறி விட்டு வேகாமப் பறந்தான் திலீபன். அவனின் வார்த்தைகளால் பலமாகத் தாக்கப் பட்டு விட்ட தேவன் உயிர்ப் பிணமாக நின்று திலீபன் தேவதையே வெறித்துப் பார்த்துக்கொண்டு நின்ருன்.

திலீபனின் வருகையால் பாதிக்கப்பட்ட தேவன் கதிரையிலிருந்து பலமாக யோசித்துக் கொண்டிருந்தான் 'டமார்டும்' காது செவிடுபட வைக்கும் சத்தம் எத்தனையோ களங்களைக் கண்டு விட்ட அவனுக்கு இந்தச் சத்தத்தை இன்னதென்றறிய அதிக நேரம் எடுக்கவில்லை. எங்கு என்ன நடந்திருக்கும் என்று அறிவதற்காக விறுந்தையை விட்டு வெளியே வந்தான். "தேவன், உங்கட ஆக்கள் செத்துப்போச்சினமாம்; இஞ்ச நோட்டீஸ்'' — அவசரமாகக் கொடுத்துவிட்டு புதினம்பார்க்க விரைந்தான் பக்கத்துவீட்டுப் பாலகன்.



ஒருவர்: என்ன இன்ஞெரு செருப்பைக் காணுமே தொலைச்சிட்டீங்களா?

மற்றவர்: இல்லிங்க கிடைச்சதே ஒண்ணுதான்.



ஐயர்: என்ன மூடி மூடிக் கொண்டு போகிறீர்?


பக்தன்; துருவித் துருவி இப்படிக் கேட்டால் எப்படி? தேங்காய் மூடிதான்.

நோட்டீசைப் பார்த்தவனுக்குத் தலையே சுற்றியது. அங்கே இருந்த படங்கள் அவனை ஓர் உத்தம போராளியகக்கி, அன்று முழுவதும் அவனைச் சிந்தனைச் சித்திரவதைக்குள்ளாக்கிய அவனது முகாம் பொறுப்பாளர் திலீபன், அவனது பிரியநண்பன் தீபன், இன்னும் அவனேடு கூடிக் குலாவி மகிழ்ந்த அன்பு நண்பர்கள் எண்மர். கண்களில் நிறைந்த கண்ணீரால் அந்தப் படங்கள் கலங்கலாகத் தெரிந்தன. கன்னத்தில் வழிந்த கண்ணீரை அவனது கரங்கள் துடைக்கவில்லை. அந்தச் சந்தர்ப்பத்தில் அந்தத் தியாகிகளுக்குச் பெய்யக் கூடியது இது ஒன்றுதான். 'ஐயோ, இந்தப் பணியை நாங்கள் நிறைவேற்றி வைப்பம் எண்ட நம்பிக்கையில் தானே நீங்கள் போனீர்கள். ஆறு நான் கடவுளே' சொற்ப நேரத்துள் அவன் மனத்துள் பெரும் போராட்டமே நிகழ்ந்து ஓய்ந்தது. கழுத்திலிருந்த சயனைட்டை மெதுவாக எடுத்தான் தேவன். அது அவனைப் பார்த்துப் புன்னகைப்பது போன்றிருந்தது அவனுக்கு 'உன்னைக் கழட்டமாட்டான் நிச்சயம். கழட்டமாட்டான்' சயனைட்டைக் கண்களில் ஒற்றி விட்டு. ஒரு முடிவுக்கு வந்தவனய் கதிரையில் கிடந்த சேட்டை எடுத்துப் போட்டுக்கொண்டு முற்றத்தில் நின்ற சைக்கிளை எடுத்தான் தேவன்.

"என்ன தம்பி, எங்க வெளிக்கிடுருய்? நாளைக்குப் போறதுக்கு உடுப்பெடுத்து வைக்கேல்லையா'—தாயின் கேள்வி. 'அதுக்குத் தேவையே இல்லையேம்மா' சேட்பட்டனைக் குத்தி விட்டு, கையிலிருந்த நோட்டீசைத் தாயிடம் காட்டி 'அம்மா இஞ்ச பாருங்கோ, இந்தப் பத்துப் பேரைப் பெத்ததும் உங்களை மாதிரித் தாய்மார்தான். அவை ஒருநாளும் 'வீட்டவாங்கோடா, உழைச்சுத் தாங்கோடா' எண்டு கேட்டதேயில்லை. இதைப் பாத்த பிறகு வெளிநாடு போறதை விட இந்த சயனைட்டைக் கடிச்சு உயிரை விடிறது மேல். இவ்வளவு வசதியிருந்தும், பெம்பிளைப் பிள்ளையளைக் காரணங்காட்டி, நாட்டை மறந்து, வீட்டுக்கு உழைச்சுத்தா எண்டு அரிக்கிற உங்களை ஒரு தாயகாப் பெற்றதுக்காக நான் வெக்கப்படுறன்' — சைக்கிளில் ஏறி அமர்ந்தவாறு 'அம்மா, இனிப் போர்க் களத்தைத் தவிர வேறு எதுவும் எனக்குப் பெரிசில்லை. இந்தத் தியாகிகளின்ர வரிசையில உங்கட மகனும் ஒருத்தனுப் போருன் எண்டு பெருமைப் படுங்கோ என்று விட்டு சைக்கிளை மிதிக்கத் தொடங்கிஞன்.

திலீபனண்ணு, நீங்கள் வெண்டிட்டீங்கள் உங்கட இல்ட்சியத்தை நிச்சயம் நிறைவேற்றி வைப்பன்' இந்த வார்த்தைகளே அவனது நெஞ்சத்தில் ஒலித்துக் கொண்டிருந்தன. ஒரு வாரமாகப் பிரிந்திருந்த அந்தத் துப்பாக்கிக் குழந்தையைக் காணப்போகும் ஆவலில் அவன் கால்கள் வேகமாகச் சைக்கிளை மிதிக்கத் தொடங்கின.

செல்வி. S. சுகந்தி




**வா**ன் வெளியினூடே ஓடும் மேகங்களையே அண்ணாந்து பார்க்கிறாள் ரதி. சிறு பொழுதில் அவை எல்லாம் புத்தியில் இருந்து வெறும் புகையாகி மறைந்துபோக, அவள் மனது எங்கெல்லாமோ அலைந்து எதிலுமே நிலைக்காது, ஈற்றில் விழியில் நீரை மட்டும் படரவிட்டு புகைந்து போகிறது.

அவன் ...?

மனதிற்குள் பொத்திப் பொத்தி வளர்த்த அந்த சுகம் நினைக்கின்ற பொழுதெல்லாம் அடிக் கரும்பாய் இனித்த அந்த இதம் இனிமேல் வருமா? என்று நினைக்கின்ற வேளைகளிலெல்லாம், அண்டசராசரமெல்லாம் இருண்டு எதுவுமே அற்ற சூனிய வெளியாய் அவளுக்குள் தோற்றமளிப்பதுண்டு.

பெண்ணின் நேசிப்பினை விட மண்ணின் நேசத்தை பெரிதாய் நினைத்த அவனின் விசால உணர்வுகளை இவளால் புறக்கணிக்கவும் முடியாமல், ஏற்றுக்கொள்ளவும் முடியாமல் தவித்த தவிப்பு இவ்வளவெண்டு இவளால்கூட வரையறுத்துச் சொல்ல இயலாது நானும் பார்க்கிறன் எந்தநேரம் பார்த்தாலும் முட்டுக்கை மூளையைக் குடுத்துக்கொண்டு உதென்னடி ரதி யோசிக்கிறாய்?

அம்மாவின் காட்டுக் கத்தலில் நிஜத்துக்கு வருகிறாள் அவள். ஆனால், அம்மாவின் கேள்விக்கு அவள் எந்த விதமான பதிலுமே இறுக்கவில்லை.

தனக்குள்ளாகவே உதயமாகி, தனக்குள்ளாகவே அஸ்த்தமித்துப் போன அந்தப் புனிதமான உணர்வு பெற்ற தாயே ஆனாலும் பிறரால் நேவலப்படுத்தப் படுவது இவளுக்குப் பிரியமானதல்ல. வாய் திறக்காத இவளிடமிருந்து பதில் வரவழைப்பதில் தோற்றுப் போன அம்மா மீண்டும் ஆட்டுக்குக் குழைமுறிப்பதிலேயே தீவிரமாகிப் போகிறாள்.

அன்பென்ற தளைக்குள் இவளுக்கு...?

நிச்சயதார்த்தம் முடிந்து விட்டது.

கல்யாணம் நடந்து விட்டது.

சுமங்கலியாய் வாழ்ந்துமாகி விட்டது.

எல்லாமே இவள் மனதிற்குள்தான்.

மனத்தாலே வாழ்ந்து, விதவையாகிப் போகின்றவர்களின் எண்ணிக்கையில் ஒன்றினைக் கூட்டியவளில் இவளும் ஒருத்தி.

எங்கோ ...

ஒரு மூலையில், ஒரு இலட்சிய வெறியோடு, முனைந்து நிற்கிறாள் என்ற திருப்தியோடு இருந்தவளுக்கு, அவனுயிர் இந்த மண்ணுக்காகவே பிரிந்து விட்டது என்று கேள்விப்பட்ட பொழுது என்னமாய்த் துடித்துப் போனாள்!

வேதனைகளை வெளிக்காட்டியே தீர்த்துக் கொள்ள முடியாது தவிக்கின்ற மனிதர்கள் மத்தியில், தனக்குள்ளே தான் ஆற்றிக் கொண்ட தன்மையைக்கூட அவன் தனக்காயீந்த ஆத்ம பலம்தான் என்பது ரதியின் நம்பிக்கை.

நான் இறந்து போயிற்றன் என்று நீ கேள்விப்படுகின்றபொழுது நீ கதறி அழுது துடிச்சு காலமெல்லாம், கண்ணீரும், கம்பலையுமாய் இருக்கிறதை விட உனக்கென்று ஒரு வாழ்வை அமைச்சு என்னைப் போன்ற ஜீவன்களை இந்தமண்ணுக்குப் பெற்றுக்குடுக்கிறாய் என்பதிலைதான் என்ரை ஆத்மசாந்தியே அடங்கி இருக்குது ரதி.'

ஆழமான அந்த வாசகங்கள் அவளுக்கு ஒருவித மன உதைப்பினைக் கொடுத்தாலும் பொது நல நோக்கிலே எத்துணை உயரிய மனப்பான்மை அவனுக்குரியது என எண்ணுகின்றபொழுது அவள் நெஞ்சம் பெருமையால் விரிந்தது.

இத்தகையவனோடு வாழக் கொடுத்து வைக்கா விட்டாலும் அவனை நேசிக்கின்ற, அவன் நேசத்தை பெறுகின்ற பாக்கியம் கிடைத்ததே என்பதில் இவளுக்கு ஆத்ம திருப்தி.

உனக்கென்னண்டு கேக்கிறன்? எழும்படி எழும்பு! — அம்மாதான் முறைக்கிறாள்.

'ஒவ்வொரு வீட்டிலும்இருக்கிற உன்ரை வயதுப் பெட்டயளைப் பாரடி. சுத்தி விட்ட பம்பரம் மாதிரி சைக்கிளிலை சுத்தி வாறாளவை, சந்தோஷமாய் இருக்கிறாளவை. மூதேசி பிடிச்ச மாதிரி கன்னத்திலை கை தலையிழுக்கிறதோ? நேரத்துக்குச் சாப்பாடு தண்ணி வெந்நியோ? ஒண்டுமில்லை, உனக்கென்னத்திலையடி நாங்கள் குறை வைச்சிருக்கிறம்

ரதி வாயே திறக்கவில்லை

'ரதிக்கென்னவேன் சுகமில்லையே, கூட்டிக்கொண்டு போய் மருந்தெடுத்துக் குடெண்டு அப்பாவும் சொன்னவர். அவளுக்கென்ன? அவள் நல்லாய்தானிருக்கிறாள் எண்டு நான் சொல்லிச் சமாளிச்சனான். நீ உன்ரை மனதிலை என்னதான் நினைச்சுக் கொண்டிருக்கிறாய்? சொல்லனடி!'

'.........'

வாயைத் திறந்து சொன்னால்தானேடி எனக்குத் தெரியும்.

எதைச் சொல்வது?

அவனது நேசத்தைச் சொல்வதா? அல்லது அவனே அஸ்தமித்துப் போனதைச் சொல்லவா?

சருகாகி உரமாகிப் போன அவனைப் பற்றி இவர்களுக்குச் சொல்லப் போவதால் என்ன பயன் விளையப் போகிறது?

சொல்வதை விட சொல்லாமல் இருப்பதே மேல் என்ற நினைவோடு எழுந்து உள்நோக்கி நடக்கிறாள் ரதி

'உங்கை போய்க் கட்டில்லை நீட்டி நிமிர்ந்து படுக்காமல், கேத்திலுக்கு எரிச்சுவிடு. அப்பா வாற நேரமாகுது.' சமையலறையை நோக்கி வருகிறது அவள் பாதங்கள். அடுப்பினை மூட்டி கேற்றிலை ஏற்றியவளின் மனதும் கூடவே பற்றிக் கொள்கிறது. அம்மாவின் நச்சரிப்புகளால். கைகால் முகம் கழுவிக் கொண்டு சேலைத் தலைப்பால் துடைத்தவாறு அம்மா உள்ளே நுழைகிறாள்.

'உன்னோடை கொஞ்சம் கதைக்க வேணும்'

அம்மாவை நிமிர்ந்து பார்க்கிறாள் ரதி.

'என்ரை இருபத்தைஞ்சு வருஷ குடும்ப வாழ்க்கையிலை, அப்பாவோடை எதிர்த்துக் கதைச்சோ, நடந்தோ நான் பிரச்சனைப்படாமல் வாழ்ந்ததை நீயும் அறிவாய் ஆனால் பெத்த பிள்ளையான உன்னாலை நாங்கள் வாக்குவாதப்படுகிறமாதிரி நீ வைச்சிடாதை!

அம்மா எதற்கு அடிகோலுகிறாள் என்பது ரதிக்குப் புரியவே இல்லை.

'குறிப்பொண்டு வந்து, பார்த்து நல்ல பொருத்தம்; மாப்பிளை பகுதியை விசாரிக்க வெண்டுதான் அப்பா இப்ப போட்டார். எல்லாம் நல்லபடியாய் நடந்து சீரும் சிறப்புமாய் இருக்கிற காட்சியைக் காண வேணுமெண்டதுதான் என்ரை பிரார்த்தனை.' கண் கலங்கக் கூறியவாறு என்கடமை முடிந்து விட்டது என்றது போல் அம்மா உள்ளே போய்விட்டாள்.

நீர் கொதித்து விட்டதில் கேத்தில் சத்தமிட்டுக் கொண்டிருந்தது. அதுபோல் இவள் மனதும் பிரளயப் பட்டுக் கொண்டிருந்தது.

இது அவளால் எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். ஆனால் இத்தனை சீக்கிரத்தில் வந்து முட்டிமோதி வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் என்று நினைத்திருக்கவில்லை. அடுப்பின் முன்னால் நின்றிருந்த பொழுதிலும் உடலெல்லாம் சில்லிட்டுக் கால்கள் நடுங்குவதைப் போலத் தோன்றவே சுவரோரமாய் அமர்ந்து கொள்கிறாள்.

வாழ்ந்துதான் ஆகவேண்டும்.; அவள் வாழ்க்கைப் பட்டுத்தான் ஆக வேண்டும்.

வெளியே! அவர்கள் வீட்டு நாயின் சந்தோஷ முனகல். 'பேசாமலிரடா, போதுயடா' என்ற அப்பாவின் வாசகங்கள் மனதில் ஊசியாய் வந்து உள்ளிடுகின்ற ஒரு உறுத்தல் ரதிக்கு.

'பிள்ளை ரதி' அப்பா வந்திட்டார். தேத்தண்ணியை வாத்துக்கொண்டு வாபிள்ளை.

அம்மாவின் வார்த்தைகளுக்கு அடங்கி, கிளாசைக் கழுவித் தேநீரைத் தயாரிக்கிறாள் ரதி. ஆனால் மனமும் செவியும் அப்பாவின் முன்னாலே நின்றுகொண்டிருந்தது.

'வீடுவாசலை ஒழுங்கு படுத்திக் கொஞ்சம் வடிவாய் வைச்சிருங்கோ; நாளைக்கு அவையள் வீடுபாக்கவரினம்.

'சடக்' என்கிறது ரதிக்குள்.

'அவையள் நல்ல பகுதி. எங்கடை சபை சந்திக்கு ஏத்த ஆக்கள்; எனக்குப் பிடிச்சுக் கொண்டுது.'

'சீதனம் என்ன மாதிரி'?

'அவையள் அப்பிடி ஒண்டும் பெரிசாய் எதிர்பாக்கேல்லை. ஒரு லட்சம் காசு, வீடு, வளவு, நகை இவ்வளவும் அவைக்குத் திருப்தி'.

காசு, மூன்று லட்சத்திலும் பெறுமதி கூடின வீடு வளவு, நகை எல்லாவற்றின் பெறுமதி ஐந்து இலட்சத்தை தாண்டி நிற்கும். இவை பெரிதில்லையா? ஐந்து இலட்சமும் பெரிதில்லையா? என்ன மனிதர்கள் இவர்கள் என்பதில் அவளுக்குள் வெறுப்பே பெரிதாய்த் தலைதூக்கியது.

'இஞ்சை கொண்டாட்டங்களை வைச்சிட்டுப் பிள்ளையை மாப்பிளையின்ரை, தாயும், தகப்பனும் இந்தியாவுக்குக் கூட்டிக்கொண்டு போவினம். மாப்பிளை வெளிநாட்டிலை இருந்து அங்கவந்து, கலியாணங்கட்டிப் பிள்ளையைக் கூட்டிக்கொண்டு போவார்'.

இடியாய் ஏதோ ஒன்று நடுத்தலையில் இறங்கிய அதிர்வில் விறைத்துப் போகிறாள் ரதி.

'பிள்ளை ரதி' என்ன செய்யிறாய்?. அப்பாவுக்குத் தேத்தண்ணியைக்கொண்டு வந்து குடன் பிள்ளை'.

அம்மா குரல் தொடுக்கவே. தேனீரை எடுத்துக் கொண்டு, அப்பாவிடம் வருகிறாள்.

'ஆ! இந்தச் சூடு சுடுது. இதை என்னன்டு குடிக்கிறது?"


'ஆத்திப் போட்டுக் கொண்டுவந்து குடு பிள்ளை'

என் காலை வாரிவிடாமல் உன் மனதையும் ஆத்திக் கொள், நிதானப்படுத்திக் கொள் என்று சொல்லுமாப் போல் இருந்தது அம்மாவின் பார்வை.

'ஆற்றத்தான் முனைகிறாள் ரதி.

வெளிநாட்டு மாப்பிள்ளை...?

மண்ணினைப் பெரிதாய் நேசித்த வீரனை ஆராதித்த மனதுக்கு, பிறந்த மண்ணை விட்டு ஓடிப்போன ஒரு கோழையை ஏற்றுக்கொள்ளும் திராணி இருக்கவில்லை.



சிறிய வியாபாரத்தில் ஆரம்பித்து பெரிய வியாபாரம் செய்கிறேன் என்றாயே என்ன வியாபாரம்?

'முதலில் எலுமிச்சம் பழம் விற்று கொண்டிருந்தேன். இப்போது பூசனிக்காய் விற்கிறேன்!"

அந்த நினைவே அவள் இதயத்தினைப் பெரும் கூடப் பாரையாய்த் தாக்குகையில் காலமெல்லாம் அவனோடு எவ்விதம் வாழமுடியும்? மலத்தினை விளக்கியது போன்ற 'சீ' என்ற உணர்வு அடிமனதிற்குள்.

பிறந்த மண்ணை விட்டு ஓடிப்போகின்ற பத்தோடு பதினொன்றாக என்னால் முடியாது. முடியவே முடியாது.

அவளுக்குள்ளாய் ஒரு வீராவேசம்.

மீண்டும் தேநீரை எடுத்து வந்து அப்பாவிடம் கொடுக்கிறாள் ரதி. அம்மாவை நிமிர்ந்து பார்க்கிறாள். தலைவாரி பவுடர் போடுவதில் முனைந்திருந்தாள் அவள்.

'ரதி உன்ரை விஷயம் நல்லபடியாய் நடந்தேற வேணும். நான் ஒருக்காக் கோயிலுக்குப்போய் அர்ச்சனை செய்துகொண்டுவாறன். நீ இரவுச் சாப்பாட்டைச் செய்துவை என்ன?'

ரதி எதுவுமே பேசவில்லை.

தேநீரை அருந்தி முடித்த அப்பா கிளாஸைக் கொடுக்கையில், ரதி மோதிரம் செய்யக் குடுக்க வேணும். ஒரு நூலிலை உன்ரை கைவிரல் அளவை எடுத்துத்தா!'

'அப்பா.'

'என்ன?'

'நான் உங்களுக்கு ஒரே ஒரு பிள்ளை. என்னைப் பெற்று வளர்த்த பெருமைக்காக உங்களைத் திருப்திப் படுத்த வேண்டியது என்ரை கடமை'

'அதுக்கென்ன இப்ப?'

'எனக்கிந்தக் கலியாணம் வேண்டாம்.


'என்ன அலட்டிறாய்?'

'அலட்டலில்லையப்பா. இதென்ரை தீர்க்கமான முடிவு. நான் கலியாணமே வேண்டாமெண்டு சொல்லேல்லை. உங்கடை திருப்திக்காக நான் வாழத்தான் போறன். ஆனால் என்ரை திருப்திக்காக, இந்த மண்ணை நேசிக்கிற இதை விட்டோட நினைக்காத ஒருத்தனுக்கு மனைவியாய் வாழத்தான் நான் ஆசைப்படுறன். அவன் இந்த மண்ணைக் கொத்திற ஒரு விவசாயியாய் இருந்தால் கூட நான் ஏற்றுக்கொள்ளுவன்'.

தாவணிச் சேலை நழுவுவது கூட உணராதவளாய் அம்மா திகைத்துப் போய் நிற்பதையும் பொருட்படுத்தாதவளாய் ரதி உள்ளே வருகிறாள். ●

---

## ★ கீதைக் கதை



# சோறு

'படைக்கப்பட்ட பொருளின் தன்மையைப் பொறுத்தல்ல, படைக்கப்பட்ட பாவனையைப் பொறுத்துத்தான் ஆண்டவன் அவற்றை ஏற்றுக் கொள்கிறான்...'

அரசடிப் பிள்ளையாருக்கு அன்று யோகம்! பெரியதொரு படையல். பல்லாயிரக்கணக்கான மோதகங்கள் கொழுக்கட்டைகள்! பல நூற்றுக்கணக்கான வடை மாலைகள்! பல அண்டாக்கள் நிறைய அவல் கடலை முதலியன! தேங்காய்கள் மலை மலையாகக் குவிந்து கிடந்தன!

பூஜையை நடத்திப் பக்தர்களுக்குப் பிரசாதம் வழங்க இரு கைகளும் போதவில்லையே என்ற அவதி குருக்களுக்கு!

இந்தத் தடபுடலுக்குக் காரணம், பல்கலைக் கழகப் பரீட்சைகளின் முடிவுகள் அன்றுதான் வெளியாகியிருந்தன. பிள்ளையாருடைய அருட்சுரப்பிலே நம்பிக்கை பூண்டு நேர்ச்சை வைத்தவர்கள், நன்றி நவில நல்லும் போட்டியினலேற்பட்ட விளை!

அப்பிரமாண்டமான படையல்களைப் பார்த்தபடி நின்றான் சிறுவன். பக்திக்கும், வேதனை உந்திய பரிவுக்குமிடையில் அவன் மனம் ஊசலாடிற்று. யோசனைகள் பல அவனுடைய பிஞ்சு மனதைப் பிராண்டலாயின. அவனுடைய பக்குவத்துக்கு ஏற்ற யோசனை ஒன்று பிரகாசித்தது.

அதன் செயல்படுத்தலாக அவன் தன் வீடு சென்று திரும்பி, தன்னுடைய காணிக்கைப் பொருளைப் பிள்ளையாருக்கு முன்னால் படைத்தான்.

இவனை அவதானித்த குருக்கள், 'என்னடா அது?' எனச் சிறுவனை அதட்டினார்.

'நம்ப பிள்ளையாருக்கு இஞ்சி படைத்திருக்கிறேன்...' என்றான் சிறுவன் பக்தியுடன்.

யாரடா சொல்லித் தந்தது?' என்று 'பாய்'ந்தார்

குழுமி நின்ற பக்தர்கள் சிறுவனைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தார்கள்.

அவமான உணர்ச்சி மேகங்கள் சிறுவனின் உள்ளத்தில் கவியலாயின.

குரல் கேவலில் நசிவுற, 'நீங்கள் படைத்திருப்பது முழுவதையும் நம்ம பிள்ளையார் சாப்பிட்டால் அஜீரணக் கோளாறு ஏற்படாதோ? பாவம், அவரை நாம் இப்படிக் கஷ்டப்படுத்துதல் முறையா? எனக்கு வயிற்றுக் கோளாறு வந்தால், அம்மா இஞ்சிதான் தருவாள்' என்றான்.

அவனுடைய விளக்கத்தைக் கேட்ட எல்லோரும் கொல்' லென்று சிரித்தார்கள்!

'படைக்கப்பட்ட பொருளின் தன்மையைப் பொறுத்தல்ல, படைக்கப்பட்ட பாவனையைப் பொறுத்துத்தான் ஆண்டவன் அவற்றை ஏற்றுக் கொள்கின்றான்' என்று பிள்ளையார் சொல்ல உன்னிய போதிலும் கல்லுப் பிள்ளையாராக அரச மரத்தின் கீழ்க் குந்தியிருப்பதில் அவர் இன்பம் கண்டார்!

— எஸ். பொன்னுத்துரை

★ நன்றி : கல்கி



★ ஆய்வுரை

# "சத்தியங்கள்"

## (சிறுகதைத் தொகுதி)

ஆசிரியர் : நெல்லை க. பேரன்

விலை : ரூபா 20/-

இச்சிறுகதைத் தொகுதியின் மேலட்டை ஆசிரியரது நிழற்படத்தின் பின்னணியும், நிழற்படமும் கண், உதடு, மார்பு, கரம், பாதம் போன்ற அவயவங்களைக் கோடிட்டுக் காட்டும் சித்திரத்தைக் கொண்டதாகவும் இருவர்ணங்களில் 'ஓவ்செற்' முறையில் முன் பின் இரண்டு பக்கமும் அழுத்தம் பெற்றுள்ளது.

''கற்பனைக் கதைகளாக எழுதுவதில் எனக்கு நம்பிக்கை இல்லை. தினசரி வாழ்க்கை அனுபவங்கள் என்னை எழுதத் தூண்டுகின்றன. எனது நித்திய தரிசனங்களின் சத்தியங்கள்தான் இவை. நீங்களே எனக்கு எஜமானர்கள்' பின்னட்டையில் கையெழுத்துடனான ஆசிரியரது இவ்வாசகங்கள் காணப்படுகின்றன.

ஒரு பக்கத்தில் க. வீ. வாழ்த்துரை வழங்கியுள்ளார். மதிப்புரை எதுவும் பிரசுரிக்கப்படவில்லை. நான்கு பக்கங்களில் ஆசிரியர் என்னுரை தந்துள்ளார்.

ஆயினும் பலரதும், பத்திரிகைகளதும் பேரனின் படைப்புகள்; படைப்பாற்றல் பற்றிய கருத்துக்களை 'பச்சடி' வைத்தாற்போல் நூலின் இறுதி மூன்றரைப் பக்கங்களில் சேர்க்கப்பட்டுள்ளது.

127, பக்கங்களில் 17, தலைப்புகளிலான சிறுகதைகளைத் தொகுத்துள்ள இந்நூல் மொத்தம் 141 பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளது.

முதல்கதை: ''ஒரு பென்சன்காரர் பயணம் போகிறார்.'' சின்னத்தம்பி மாஸ்ரர் பென்சன் பெற நெல்லியடியில் இருந்து குருநகருக்கு சென்று வந்த அனுபவத்தைக் கதை சொல்கிறது. பென்சன்காரர் ஆனாலும் நாளாந்த உழைப்பாளியாகவும் கதையின் ஆரம்பத்தில் சின்னத்தம்பி மாஸ்ரர் காட்டப்படுகிறார். அந்த உழைப்பைக் காட்டிலும் பென்சன் பணம்தான் நாணயத்தைக் காப்பாற்ற உதவுகிறது என்கிறார் நெல்லை க. பேரன்.

கதையின் ஆரம்பத்தில் சின்னத்தம்பி மாஸ்ரரை இவ்வாறு வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துகிறார். ''வயது எழுபத்தேழைத் தாண்டியும் சின்னத்தம்பி மாஸ்ரரின் தலைமுடி ஒன்றுகூட நரைக்கவில்லை. இன்றைக்கும் தம்முடைய வெங்காயத் தறைக்குள் காலைச் சூரியன் உதிக்கமுன்னர் புல்லுப் பிடுக்கக் குனிந்தாரென்றால் உச்சி மத்தியானம் வரைக்கும் ஒருவாய் வெறுந் தேத்தண்ணீர்கூடக் குடிக்காமல் வேலைசெய்து நிமிரக்கூடிய வலுவைப் பெற்றிருந்தார்.'' இந்தக் கூற்றுக்களில் கதாசிரியரின் பாத்திர வளர்ப்பு போலித்தனத்தை அவதானிக்க முடிகிறது.

கதை: 2, 'மனப்போக்கு', தோட்ட உழைப்பை மதித்து வாழும் கந்தசாமி, சமுதாய நிலைப்பாட்டில் உத்தியோகப் பற்று வைக்கும் மகன் இரத்தினம், உத்தியோகம் பார்ப்பதால் கிடைக்கும் ஊதியம் பத்தாமை, உணர்வற்று போலிக் கவர்ச்சியில் மயங்கும் தாய், இவர்களது மனப்போக்குகளைக் கதை சித்திரிக்கிறது.

கதை: 3 ''ஒருவிதமான கதை'', எழுத்தாளர் ஒருவர் வேலைபார்க்கும் காரியாலயத்திற்கு அண்மையில் தினமும் ஒரு பெண்ணைக் காண்கிறார். இரு குழந்தைகளுடன் வீதியோர வாழ்க்கையை நடத்தும் அவருடைய நிலைமை 'இது' வாகத்தான் இருக்கும் என நினைத்து தானெழுதப்போகும் கதைக்கு கருவாகப் முனைந்து எவ்வாறு கதையில் சித்திரித்து அவளைக் போன்றவர்களுக்கு விடிவைக் காட்டலாம் என்பதில் குளம்பி விடுபவராகக் கதை வளர்கிறது.

ஜனநாயகப் போலித்தனங்கள், மாக்ஸிசம், வர்க்க நிலைப்பாடு, கலையம்சம் என்று பேரன் எழுதி இருப்பதெல்லாம் என்னுரையில் கூறுவதுபோல் 'அவரது அனுபவங்களாக' தெரிந்த, அறிந்த எல்லாவற்றாலும் 'தெளிவு' இன்றிக் குளம்புகிறாரா?

கதை: 4, சத்தியங்கள் திரளும்போது சுரண்டல் முதலாளித்துவ வர்க்கத்தின் எச்சமாகத் திகழ்ந்த வெள்ளைக்கார எஞ்சினியர் 'கீத்' தின் அடாவடித்தனத்திற்கு ஒன்று திரளும் தொழிலாள வர்க்க ஐக்கியம் மூலம் முடிவு கட்டப்படுவதாக கதை சித்திரிக்கிறது.

அன்ரன் என்னும் இலங்கைத் தொழிலாளியின் திட்டமிட்ட போராட்டத்தில் இன, மத வேறுபாடின்றி வர்க்க ஒற்றுமையுடன் போராடியதால் தொழிலாளர்களின் போராட்டம் வெற்றி பெறுவதாகச் சித்தரிப்பதானது, சரியான வழி காட்டலுடன் கதையை முடித்திருப்பதாக அமைந்த போதும் முடிப்பதில் காட்டப்பட்ட அவசரத் தன்மை வாசக மனத்திற்கு நல்லதொரு சிறுகதையாக அமையாமல் போய் விட்டது.

கதையை நகர்த்திச் சென்ற பாங்கு கைதேர்ந்த வர்க்கப் பார்வையுடைய கதாசிரியரின் இயல்பான ஓட்டமாய் கச்சிதமாக அமைந்ததைப் பாராட்டலாம்.

கதை: 5, ''சினிமாவுக்குப் போகிறார்கள்'' சம்பவங்கள் நடைமுறையில் இயல்பானவை. ஆனாலும் கதை வெறுமனே கற்பனையாகப் பண்ணப்பட்டுள்ளது.

கதை: 6, ''ஒரு புது அத்தியாயம் ஆரம்பமாகிறது.'' வெளிநாட்டு பிரயாணம் மேற்கொள்ள இருந்த இளைஞன் விஸ்வமடுவில் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் நண்பனுடன் சில நாட்கள் தங்கி நின்றதால் ஏற்பட்ட மாறுதலில் வெளிநாடு செல்வதற்காக விண்ணப்பித்து வந்த 'பாஸ்போட்' படிவம் கைகளில் கிடைத்ததும் கிழித்து காற்றில் பறக்க விடுவதன் மூலம் இளைஞர்கள் மத்தியில் ஆரோக்கியமான சிந்தனையை வளர்க்க முற்பட்டிருக்கிறார்.

கதை: 7, ''ஒரு தொழிலாளி சைக்கிள் வாங்குகிறான்.'' சமூகத்தால் ஒடுக்கப்படுபவர்கள் தனிமனித ரீதியில் என்றில்லாமல் அரச சேவையிற் கூட உழைப்பு

உறிஞ்சப்படுபவர்களாக வாழ்க்கைப் போராட்டம் நடத்துவதை கதை தெளிவு படுத்துகிறது.

கதை: 8 ''ஒரு ஞாயிற்றுக்கிழமை நாற்பது நிமிடம்''. பஸ்சிற்காக காத்து நிற்கையில் கண்ட, கேட்ட மன உழைச்சல்களை விவரணம் செய்கிறது இது.

கதை: 9 'வாடகைக்கு வீடு'. கொழும்பில் சொந்த வீடுடைய ஒரு தமிழர் சிங்கள இனத்தவருக்கு வீட்டின் பாதியை வாடகைக்கு விட்டால் எப்படி இருக்கும்? அதைச் சித்திரிக்கிறது.

கதை: 10 ''பெருமூச்சு'', படிப்பறிவு இல்லாமல் சுய உழைப்பால் முன்னேறிய சண்முகம்; ஏற்பட்ட சிறுவசதியால் மகளைப் பல்கலைக் கழகம் அனுப்பிப் படிப்பித்த மாமன் அருமைத்துரை; சாதாரணிகளை இழக்காரமாக நோக்கும் காஞ்சனா, வாழ்க்கை ஓட்டத்தில் அப் போலித்தனங்களை ஜீரணித்தல் போன்ற மையவட்டத்தை சுட்டும் கதை!

கதை: 11 ''ஏணிப் படிகள்'' ஒரு 'கிளறிக்கல் சேவன்ற்' சுயசரிதை போன்று அமைந்துள்ள இக் கதையில் கீழ்மட்டத்தில் பிறந்த பெண் எவ்வாறு வாழ்க்கையின் உயர்மட்டத்திற்கு வருகிறாள் என்பதையும்: அதற்கு தானும் அப்பா, அம்மாவும்கூட எந்தளவுக்கு உதவினார்கள் போன்ற தரவுகள் தொகுக்கப்படுகின்றன.

கதை: 12 ''புகை'', கொழும்பில் இருந்து கண்டிக்கு பிரயாணம் ஆகும் 'பஸ்'சில் 'சிகரட்' புகைக்கும் இலங்கைப் பெண்மணி மூலமாக மேலைத்தேச நாகரிக மோகத்தை எள்ளும் பேரன் அதே 'பஸ்'சில் பிரயாணம் செய்யும் வெளிநாட்டுப் பெண்ணிடம் இருக்கும் கீழைத்தேச ஈடுபாட்டைப் பாராட்டுவதாக அமைகிறது.

கதை: 13 ''கவிதை அரங்கேறும் நேரம்'', இக் காலத்தில் விழாக்களில் சேர்த்துக் கொள்ளப்படும். கவியரங்க நிகழ்ச்சி எவ்வாறு நிகழ்கிறது என்பதையும், ஒரு கவிஞரின் ஆதங்கத்தையும், அனுபவத்தையும் இக்கதையில் இழையோட விட்டுள்ளார் பேரன்.

கதை: 14 ''ஒருநாணயம் காப்பாற்றப்படுகிறது''. அச்சக நிர்வாகியின் மனோபலத்தை அச்சகத் தொழிலின் விவரணையோடு கதை கூறுகிறது.

கதை: 15 ''அன்புள்ள எழுத்தாளருக்கு'' சவூதி 'றியாட்'டில் கூலி ஆட்களைத் தேடிக்கொடுக்கும் 'ஏஜன்ட்'டிடம் 'டெலக்ஸ்] ஒப்பறேட்டர்' வேலையில் சேர்ந்து அங்குள்ள போலித்தனங்களை அறிந்து வெளிநாடு செல்ல இலங்கை 'ஏஜன்ட்'டிடம் கட்டிய 15 ஆயிரம் ரூபாவையும் உழைத்துக் கொண்டதும் கிளம்பி விடலாமென்றிருக்கும் ஒருவர் தன்னனுபவத்தை குவைத்தில் உள்ள எழுத்தாள நண்பனுக்கு எழுதிய கடிதமாக கதை நகர்த்தப்பட்டுள்ளது. பேரனின் இயல்பான எழுத்து நடை கடித அமைப்பில் கதை சொல்லும் உத்திக்கு ஒத்திசைவாக அமைவதை இக்கதையில் அனுபவிக்கலாம்.

கதை: 16 ''மெல்ல இனிச்சாகும்''. நிலமானிய அமைப்பில் தீவிரமாய் வளர்ந்த சாதி உணர்வில் ஊறிய சின்னத்துரை சவூதிக்குச் சென்றதும் கீழ்சாதி எனக் கணிக்கப்பட்டவர்களுக்குக் கீழே வேலை செய்கையில் கொழுந்துவிட்டெரியும் சாதி உணர்வைக் கதை பெரும்பாலும் கூறிச்சென்று ஈற்றில் இரண்டொருவரிகளில் தற்கால இடர்ப்பாடுகளுக்குள் அவன் போன்றவர்கள் மாற்றத்தை இயல்பாக ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் வலிந்து ஏற்க வேண்டியதைக் கோடிட்டுக் கதை முடிகிறது.

கதை: 17, ''பிள்ளைகள்.'' கடைசிக்கதை; மிகவும் சிறியது. நூலில் இரண்டரைப் பக்கங்களில் பிரசுரம் பெற்றுள்ளது. அழகாக கதை சொல்லும் உத்தி கையாளப்பட்டுள்ளது. இக்கதை போர்ப் பீதி சூழ்ந்த சமகாலத்தில் குழந்தைகளின் மனோ நிலை பாதிக்கப்பட்டு விடுவதைப் பேசுகிறது. குட்டிக்கதை எனக் கணிக்கப்படாமல் சிறுகதைப் பண்பு விரவியுள்ளதால் ஏற்றுக் கொள்ளலாம்.

இவற்றுள் ''சத்தியங்கள் திரளும் போது'', ''ஒரு புது அத்தியாயம் ஆரம்பமாகிறது'' ஆகிய சிறுகதைகள் சொல்ல வந்த சேதியை ஓரளவுக்கேனும் சரியாகச் சொல்ல முயன்றுள்ளன.

ஆசிரியரது தென் இந்திய ஈடுபாடு எழுத்தில் அவரை அறியாமலே விழுந்து விடுவதை 'ஜாகை' (சினிமாவுக்குப் போகிறார்கள்: பக்: 38) 'நீர்மொண்டு' (ஒரு அது அத்தியாயம் ஆரம்பமாகிறது: பக்: 48) 'எவனையா உட்கார்ந்து கேட்பான்,' 'சாக்கடை' (கவிதை அரங்கேறும் நேரம்: பக்;101) என்பவற்றால் உணரலாம்.

பாத்திர வார்ப்பில் திருப்தியற்ற நிலையை மலையகத்து இளைஞனின் பேச்சு வழக்கு (ஒரு புது அத்தியாயம் ஆரம்பமாகிறது: பக்: 47) கவனமெடுத்து செய்யாததால் ஏற்படுவதை அவதானிக்க முடிகிறது.

1968-1987 கால இடை வெளிகளில் எழுதப்பட்டுள்ள இக்கதைகளில் பெரும்பாலானவை மனித அவலங்களை சித்திரிப்பதால் கதைக்கருக்களாக தேர்ந்தெடுத்திருக்கும் விடயங்கள், களங்கள் நல்லதொரு கதாசிரியருக்கு உரிய தேர்வுகளாகவும், கதையைச் சொல்கையில் ஏற்பட்டுள்ள அவசரத்தன்மையால் 1966 இல் எழுதத் தொடங்கிய பேரன் 1986 வரை வளர்ச்சியற்று நிற்பதை இக்கதைகள் மூலமாய் கணிக்க முடிகிறது.

1987 இல் எழுதி நூலில் சேர்க்கப் பட்டுள்ள ''பிள்ளைகள்'' அந்த வளர்ச்சியை நெல்லை க. பேரனிடம் காட்டுவதாக அமைந்துள்ளது.

—தேவி பரமலிங்கம்

## அறிந்தவன்

அறியாத ஒருவன் தனக்கு தெரியாது என்பதை அறியாமல் இருந்தால் அவன் ஒரு முட்டாள். அவனை ஒதுக்கு.

தெரியாத ஒருவன் தனக்கு தெரியாது என்பதை தெரிந்திருந்தால் அவன் ஒரு குழந்தை. அவனுக்கு கற்றுக்கொடு.

தெரிந்திருப்பவன் அது தனக்கு தெரியுமென்பதையே தெரியாமல் இருந்தால் அவன் தூங்குகின்றான். அவனைத் தட்டி எழுப்பு.

அறிந்திருப்பவன் அது தனக்கு தெரியுமென்பதை அறிந்திருந்தால் அவன் ஒரு தத்துவ ஞானி. அவனை பின்பற்று.

— திரௌபதி சிவலிங்கம்

அமிர்தகங்கை

நலம் பெற்று நீடூழி வாழ

வாழ்த்துகிறோம் !

தரமான
அச்சு வேலைகளைத்
திறமான முறையில் செய்து
கொடுப்பதில்
பிரசித்தி பெற்றவர்கள்

# சாந்தி அச்சகம்

575, கே. கே. எஸ். வீதி, நாச்சிமார் கோவிலடி,

யாழ்ப்பாணம்

B/ 1905

தொலைபேசி: 23002

# HORIZON ENTERPRISES

★ மத்தியகிழக்கு நாடுகளுக்கு
வேலை வாய்ப்புடன் பிரயாண ஒழுங்குகளை
கண்ணியமாக - கச்சிதமாக -
எவ்வித சிக்கலுமின்றி நிறைவேற்றித்தரும்
நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம் - - -

★ ஒன்பது ஆண்டுகள் ஒழுங்கான சேவையாற்றி
நற்பெயர் பெற்ற ஸ்தாபனம் - - -

★ உங்கள் கடவுச்சீட்டு (Passport) வேலைகள்
அலைத்துக்கும் குறைந்த செலவில் -
குறித்த தவணையில் செய்து தரும் ஸ்தாபனம் - - -

## A. பத்மதாஸ்

No. 96 மதுரா வீடியோ கிளப்
4-ம் குறுக்குத் தெரு
சின்னக்கடை :: யாழ்ப்பாணம்

குறிப்பு:-


எமக்கு
வேறு கிளைகள்
கிடையாது

Horizon Enterprises
87, Kollupittiya Lane
Kollupittiya
Colombo - 3

Phone: 574000

கேட்டு வாங்குங்கள்!

# அண்ணா கோப்பி



இவர்கள்
ஓடுவது
அண்ணா கோப்பியின்
நறுமணத்தை...
இன்சுவையை நாடியே...

உங்கள் வாடிக்கைக் கடைகளில் அண்ணா No. 1 கோப்பியினை வாங்கி அவற்றின் வெற்றுப் பைக்கட்டுகளைக் கொடுத்து கீழ்க்காணும் பரிசுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

- அண்ணா கோப்பி
- அண்ணா தேயிலை
- அண்ணா பத்தி
- அண்ணா பற்பொடி

★ 3 k.g. அண்ணா கோப்பி:
( 1 எவர் சில்வர் கப் )

★ 2 k.g அண்ணா கோப்பி:
( 1 பிளாஸ்டிக் கப் அன் சோசர் )

★ 1 k.g. அண்ணா கோப்பி:
( 1 பிளாஸ்டிக் கப் )

★ 500 g. அண்ணா கோப்பி:
( 1 கொப்பி )



அவர்கள் பேசுவது
அண்ணா கோப்பியின்
தரத்தைப் பற்றியே...

அண்ணா தொழிலகம்
இணுவில்.

அண்ணா கோப்பிக்கடை :
நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.